December -2018 | Volume-5 | issue-51


for private circulation only

# காட்டாறு

## அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

டிசம்பர் - 2018 பருவம் - 5 புனல் - 51 தனிச்சுற்று நன்கொடை ரூ 25





# அடித்தட்டு மக்களை அரசியல்படுத்திய “பெரியார்-அண்ணா”

**நேர்காணல்**

## புலவர் துரை தில்லான்

**பெரியார் உருவாக்கிய திராவிடர் இயக்கம் உங்களது வாழ்வில் ஏற்படுத்திய மாற்றம் என்ன?**

1948-இல் எட்டாவது முடித்தபோது ஒரு வருடம் பயிற்சிப் பள்ளிக்கு இடம் கிடைக்கலை. 15 வயது முடியணும்னு சொல்லி இடம் தரமாட்டேன்டாங்க. பதினாலரை வயது முடிந்து இருந்தது. 15 வயது முடிந்து இருக்கணும். அந்த ஓராண்டு நான் வீட்டில் இருந்தபோது ஒன்பதாம் வகுப்பு முடிச்சுட்டு கூ.சி.பழனிச்சாமி என்பவர் கும்மம்பட்டியில் மேலும் பள்ளிக்கு போகாமல் இருந்தார். இந்தி எதிர்ப்பு போராட்டத்துல கலந்துக்கிட்டவர். பள்ளியில இந்தியைப்பற்றி பேசுனதுனால அவரைத் தண்டிச்சாங்க. தண்டனைக்குப் பயந்து அவர் பள்ளிக்கு போவதையே நிறுத்திட்டார்.

நிறுத்தினாலும் நிறைய படிக்குற பழக்கம் இருந்தது. நூல்களை நிறையா வாங்கி என்னை மாதிரி மாணவர்களுக்குக் கொடுத்தார். நான் எட்டாம் வகுப்பு படிச்சவன் அவரு ஒன்பதாம் வகுப்பு. மற்ற ஐந்தாம் வகுப்பு படித்த அளவுக்கு இருந்தவர்களையும் சேர்த்து, ஒரு பத்துப் பேருக்கு நிறைய புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார். அப்படி வாங்கிக் கொடுத்ததுனால திராவிட இயக்கத்தைப்பற்றித் தெரிந்தோம்.

திருச்சியில் இருந்து முத்துக்கிருஷ்ணன் நடத்திய திராவிடப் பண்ணையில் இருந்து வெளியிட்ட அவ்வளவு நூல்களையும் அவர் வாங்கிக் கொடுத்தார். வாங்கிக் கொடுத்ததோடு நாங்களெல்லாம் படிக்க வேண்டும் என்பதற்காக இந்த பத்து பேருக்கும் சேர்த்து, அவர் கொஞ்சம் வசதியானவர் என்பதுனால வெல்லமும், கடலைப் பருப்பும் வாங்கிக் கொடுத்தார். 8 மணிக்கு படிக்கத் தொடங்கினால் 12 மணிக்கு முடிப்போம். இப்படிப் படித்த புத்தகங்களெல்லாம் பெரியார் எழுதிய அறிக்கைகள், அண்ணா எழுதிய மடல்கள், கலைஞர் எழுதிய நாடகங்கள், மற்றது வெளிநாட்டுக் காரங்களுடையது. இதையெல்லாம் நாங்கள் தொடர்ந்து படித்தபோது இந்த உணர்வு ஏற்பட்டது.

**ஜாதகத்தை நம்பி இருந்தால் நான் தோட்ட வேலைதான் பார்த்துட்டு இருப்பேன்**

எட்டாம் வகுப்பை முடித்தவுடனே என்னுடைய அப்பா என்னை மேலும் படிக்க வைக்கலாமா? இல்லை தோட்டத்தைப் பார்க்கச் செய்யலாமாங்கறதுக்காக வக்கம்பட்டியில ஒரு சிறந்த ஜோதிடர் இருந்தார். அவர்கிட்ட போய் கேட்டோம். அவர் பையனுக்குப் படிப்பு வராது என்று சொன்னார்.

ஒருவருடம் கழித்து, பயிற்சிப் பள்ளியில் இடம் கிடைத்தபோது மாதம் 12 ரூபாய் உதவித்தொகை கிடைத்தது. என்னுடைய அப்பா என்னை கூப்பிட்டுக் கொண்டு அந்த ஜோதிடர்கிட்ட போய் நீங்க படிப்பு வராதுனு சொன்னீங்க இப்ப வந்து இருக்குதே? அப்படின்னு சொன்னபோது இவனுக்கு 5 ரூபா கூட சர்க்கார் சம்பளம் கிடைக்காது. இந்த ஜாதகக் காரங்களுக்கு கிடைக்காதுன்னார். அப்பா சொன்னார் இப்ப இவன் 44 ரூபா வாங்கீட்டு வந்து இருக்கான். நீங்க இப்படி சொல்றீங்கன்னு சொன்னபோது, அந்த ஜோதிடர், “ஏதோ ஜாதகத்துல கோளாறு இருக்குன்னு” சொன்னார்.

அந்த ஜாதகத்தை எங்க அப்பா இருக்கும்போதே அதை ஒடிச்சு போட்டுட்டார். அதுல இருந்து எனக்கு ஜாதகம் இல்லை. ஏன்னா சொன்னது எல்லாம் தவறாத்தான் சொன்னார். நான் ஜாதகத்தை நம்பி இருந்தால் நான் தோட்டவேலைதான் பார்த்துட்டு இருப்பேன்.

நானும் என்னுடைய துணைவியும் திருமணம் முடித்து ஒரு ஊருக்கு விருந்துக்கு போய் இருந்தோம். அங்கு ஒரு ஜோதிடர் என்னுடைய கையை பாக்கணும்னு சொன்னார். பார்த்துட்டுச் சொன்னார், உங்களுக்கு விரைவிலேயே திருமணம் முடியும்னு சொன்னார். நான் சொன்னேன், திருமணம் முடிச்சுட்டுதான் விருந்துக்கு வந்து இருக்கறோம்னு. அப்படியான்னு மீண்டும் ஒருமுறை பார்த்து நீங்க எழுதுன பரிட்சையில பாஸ் பண்ண முடியாதுன்னார். அடுத்த ஒரு மாசத்துல வந்த ரிசர்ட்ல நான் பாஸ் பண்ணுனேன்.

**ஜாதகத்தை நம்பி இருந்தால் நான் தோட்டவேலைதான் பார்த்துட்டு இருப்பேன்.**

எந்தக் கைரேகை பார்த்த வரும், பனைமட்டை ஓலையிலிருந்து பார்த்துச் சொன்னவரும், குடுகுடுப்பை அடித்துச் சொல்றவரும் எல்லாமுமே தவறாத்தான் இருக்கு. என்னைப் பொறுத்த வரைக்கும் சொன்னதெல்லாம் தவறாத்தான் இருந்தது. நான் மாத்திக் காட்டுறேன்னு பிடிவாதம் பண்ணுனேன்.

அதே மாதிரி நாலாம் வகுப்பு படிச்சவங்க, 2ஆம் வகுப்பு படிச்சவங்க எல்லாம் ஒரு பத்து இருபதுபேர் சேர்ந்து இந்த நூல்களைப் படித்த பிறகு, நான் ஒரு கருத்துச் சொன்னேன். “நாமெல்லாம் படித்ததைப் பகிர்ந்துக்கலாம். வாரம் ஒருதடவை கூட்டத்துல அவுங்கவுங்க படித்தைப் பற்றி கருத்து சொல்லலாம்னு” அப்படி வச்சுக்கலாமேன்னு சொன்னேன். சரின்னு சொன்னார் பழனிச்சாமி. பத்து, இருபதுபேர் சேர்ந்தோம். கேட்டவர்களும் சேர்ந்து முப்பதுபேர் சேர்ந்துட்டாங்க.

ஒவ்வொரு முறையும் நான் வரவேற்புரை, தலைவர் உரை, சிறப்புரை, நன்றியுரை எல்லாம் எழுதிக் கொடுப்பேன். அது எனக்கே பயனா அமைந்தது. இதற்காகவே எல்லாருமே இந்த திராவிட இயக்க நூல்களைப் படிக்க ஆரம்பிச்சாங்க. படிச்சு, குறிப்பு எடுத்துக்கிட்டு இருந்தாங்க. கும்மம்பட்டியைப் பொறுத்தவரைக்கும் ஒரு 40 பேர் திராவிட இயக்கப் பற்றாளர்களாக மாறினோம்.

**பெரியாரின் திராவிட இயக்கமும், அண்ணாவின் திராவிட இயக்கமும் உங்களது கிராமத்தில் ஏற்படுத்திய மாற்றம் என்ன?**

திராவிட இயக்கம் என்று சொன்னபோது சில எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. தூக்குமேடை நாடகம் நடத்தினோம். அந்த நாடகம் எங்களுக்கு ஒரு சமத்துவத்தை ஏற்படுத்தியது. நாடகத்தில் நடித்த ஊர்லயே முக்கியமான வீட்டுப் பையனான கூ.சி.பழனிச்சாமி “பாண்டியனாக” நடித்தார். “செல்லம்” என்ற சலவைத் தொழிலாளி, “நீதிபதியாக” நடித்தார்.

ஊர்க்காரர்கள் எல்லாரும் என்ன சொன்னாங்க...“ஒரு கீழ்ஜாதிக்காரன், சலவை செய்கிறவன் நீதிபதியாக இருக்க, ஒரு பண்ணையார் மகன் ஊர்ல குற்றவாளியா நிற்கிறதா? இது வேண்டாம்” அப்படிங்கறதுதான் முதல் தடை. அதை மீறித்தான் அவரை நாங்க உட்காரவச்சோம் நாடகத்துல. பரி தைத்தவர்கள், செருப்பு தைத்தவர்கள், எருமை மேய்த்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளை நாங்க பக்கத்துல வச்சு பேசிக்கிட்டோம். எனவே கொஞ்சம் கொஞ்சமா நாங்க நகர்த்திட்டு வந்ததுல ஊர்க்கார வங்களுடைய எதிர்ப்பு கொஞ்சம், கொஞ்சமா மறஞ்சிடுச்சு.

நாடகத்தன்னைக்கெல்லாம் நாடகத்தையே நடத்த விடமாட்டோம் என்று சொல்லிப் பிடிவாதம் பண்ணியவர்கள் வீட்டுக்குள்ளே போய் சீமெண்ணெய்யை எடுத்துட்டு வந்து நாடகக் கொட்டகையில் தீவைக்க நினைத்தார்கள். வீட்டுக்குள்ள போனபோது, வீட்டுக்கதவை சாத்திக் கொண்டார்கள் வெளியில் இருந்தவர்கள். எல்லாப் பக்கத்துலையும் ஒரு நூறு மாணவர்களுடைய ஆதரவை வைத்து திண்டுக்கல், சின்னாளபட்டி, சித்தையன்கோட்டை என்று எல்லா ஊர்காரங்களும் வந்து எங்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள். போலீஸ்காரர்கள் வந்தார்கள். பத்திரிகை நிருபர்களும் 52-இல் கும்மம்பட்டிக்கு வந்து, தினத்தந்தி, தமிழ்நாடு இதழ்களில் செய்தி வெளியிட்டார்கள்.

இப்படி மீறிய போது அந்த ஊர்க்காரர் களுடைய எதிர்ப்பு மாறியது. நாங்கள் ஒற்றுமையாக 40 பேரும் கலை மன்றத்தை ஏற்படுத்தினோம். அதன்மூலம் இராமாயணம் நாடகத்தை கீமாயணம் என்று எம்.ஆர்.ராதா ஆத்தூரில் நாடகம் வைத்தார்.

அந்த நாடகத்தை நடத்த விடக்கூடாதுன்னு அந்த ஊர்க்காரர்களுடைய எதிர்ப்பு இருந்தது. நாங்க 40 பேரும் 40 தடியோடு போய் நாடகக் கொட்டாயைச் சுத்தி நின்று நாடகத்தை நடத்த வைத்தோம்.

அதேபோல வீரக்கல் என்ற ஊர்ல "பி.எஸ்.செல்வா கலைத்தூதன்" என்பவர்கள் பெரியார், அண்ணா இவர்களை முதல் பாட்டிலேயே பாடி நாடகத்தைத் துவங்குவார்கள். அந்த நாடகத்துக்கு நாங்கள் போய் துணை இருந்தோம். நாங்கள் செய்த அந்தப் பொதுப்பணி... தண்ணீர் இல்லாத கடுமையான பஞ்சம் நாங்கள் கிணறு வெட்டினோம்.இப்ப இருக்கக்கூடிய கிணற்றை ஆழப்படுத்தினோம்.தெருக்களை எல்லாம் சுத்தப்படுத்தினோம். திருடர்கள் வந்து பொருட்களை கவராமல் இருப்பதற்காக நான்கு பக்கமும் பத்துப் பத்துபேர் இரவு நேர காவல் புரிந்தோம்.

அந்தக் காலத்துல பகைனாலே முதல் எதிர்த்து தீவைப்பதுதான். அந்தத் தீ வைப்பவர்களைக் கண்டுபிடித்து அந்தத் தீயை உடனே அவிப்பதற்காக நாங்க முதல்லையே கருவிகளை வைத்து இருந்தோம். ஒரு இடத்துல இருந்து விசில் சத்தம் கேட்டால் 40 பேரும் அந்த இடத்துக்கு போனோம். இந்த மாதிரியான செயல்கள் எங்களுக்கு திராவிட இயக்கத்தினுடைய கொள்கையைப் பரப்புனாலும் எதிர்ப்பைக் குறைத்து இருந்தது. திராவிட இயக்கம் நூல்களினால் பெற்ற அறிவு எங்களுடைய தொண்டு உள்ளத்தால் கிடைத்த ஆதரவு, இரண்டும் சேர்ந்ததுதான் அந்த ஊரின் வளர்ச்சி.

அப்போது நாங்கள் கட்சி தொடங்கவில்லை. தொண்டுதான். அந்த எண்ணம் இன்றைக்கு வரைக்கும் இருக்குது. ஒரு கட்சியில உறுப்பினரா இல்லை. ஆனா கருத்துகளை எங்களால் முடிந்த அளவுக்குப் பரப்பினோம். தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாத இதழான "நமது தமிழாசிரியர்" இதழை, 20 ஆண்டுகள் நடத்தினேன். 20 ஆண்டுகளும் ஒருமுறைகூட எந்தச் சமய விழாவையும் வாழ்த்தி அல்லது அந்த நிகழ்ச்சியை வெளியிட்டு இதழ் நடத்தவில்லை. ஆனால் தலைவர்களுடைய காமராசர், பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர்களுடைய படங்களையும், தமிழ் அறிஞர்களுடைய படங்களையும் வைத்து 20 ஆண்டு இதழ் நடத்தியபோதும் எனக்கு அடிப்படையாக இருந்தது, கும்மம்பட்டியில் போட்ட விதை. அது மரம் வளர்ந்ததுனால தமிழ்நாடு முழுதும் என் நண்பர்கள் இன்று பரந்து இருக்கிறார்கள்.

**1952 இல் தூக்குமேடை நாடகத்தில், ஊர்லயே முக்கியமான வீட்டுப் பையனான கூ.சி.பழனிச்சாமி "குற்றவாளியாக" நடித்தார். செல்லம் என்ற சலவைத் தொழிலாளி, "நீதிபதியாக" நடித்தார்.**

**1928 லிருந்து பெரியார் நடத்திய சுயமரியாதைத் திருமணங்கள் சட்டபடிச் செல்லாதவை. சமுதாயத்திலும் கடும் எதிர்ப்புகள் இருந்தன. சட்டப்பாதுகாப்பு இல்லாததையும், சொந்த ஊர்க்காரர்களின் எதிர்ப்புகளையும் எவ்வாறு கையாண்டீர்கள்?**

1952 இல் நாங்க ஒரு நாடகம் நடத்தினோம். தூக்குமேடை. அதற்கு சுமார் 2 ஆண்டு ஒத்திகை. ஏன்னா அதற்கு முன்னால "வள்ளிதிருமணம்", "அல்லிஅரசாணி" போன்ற புராண நாடகம்தான் இருக்கும். ஆனா நாங்க முதன் முதல்ல அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட "தூக்குமேடை" நாடகத்தை "இளைஞன் குரல்" என்ற பெயரில் நடித்தோம்.

நாடகத்துல விருப்பப்பட்டு சாதி பார்க்காம, ஏழை பணக்காரர் பார்க்காம பாண்டியனும், வேணியும் திருமணம் முடிக்கிறார்கள். அந்தத் திருமணக் காட்சியில நான் அதுல தமிழாசிரியரா இருந்தாலும் கூட அய்யர் தமிழாசிரியர். என்னைமீறி அவர்கள் திருமணம் முடிக்கிறார்கள். புரோகிதர் இல்லாத திருமணமா அங்க முடியற மாதிரி கதை அமைப்பு.

சொந்த வாழ்க்கையிலும், அது போலத் திருமணம் நடத்தணும்னு முதல்ல கு.சி.பழனிச்சாமிக்கு அய்யர் வரச்சொன்ன பிற்பாடும் கூட அவர வேண்டாம்னு சொல்லீட்டு நான் திருமணத்தை நடத்தி வச்சது முதல் திருமணம். அந்தத் திருமணத்திற்கு காசி பாளையம் கல்வார்பட்டில இருந்து எல்.வீரராசன் என்ற திராவிடர் கழக தலைவர், அவரைக் கூப்பிட்டு வந்து தலைவராக வைத்து, நான் வாழ்த்துரை வழங்கி திருமணத்தை முடிச்சோம்.

ஒலிபெருக்கி வச்சுக்கிட்டோம். ஒரு மேஜை, இரண்டு நாற்காலி போட்டு, பத்துப் பேரை உட்கார வச்சு கூப்பிட்டு நடந்த திருமணம். அதுதான் முதல் திருமணம். இப்படி நடத்தியதைப் பார்த்து, அடுத்தடுத்து கும்மம்பட்டியில யார் வீட்டுல திருமணம்னாலும் என்னையக் கூப்பிட ஆள் அனுப்பீட்டாங்க. அய்யரைக் கூப்பிடுறதை விட்டுட்டாங்க. அப்படி எனது திருமணத்திற்கு முன்னாலேயே 50,100 திருமணம் நடத்தி இருக்கேன்.

கும்மம்பட்டியில நான் என்னுடைய திருமணத்திற்கு முன்னால திருமணம் நடத்தி வைத்த, "கு.தில்லான்- ஆராயி" என்ற தம்பதியர் இன்றைக்கும் இருக்காங்க. "கு.சி.பழனிச்சாமி-இராசம்மாள்" அந்த இரண்டு பேரும் இல்லைன்னாலும்கூட அவுங்களுடைய குடும்பம் நல்லா இருக்குது. அவர்களுடைய மகன் தான் வணங்காமுடி. அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தரா இருந்து ஓய்வு பெற்றவர். அடுத்த

பையன் கூட்டுறவுல எழுத்தரா இருந்து அவரும் ஓய்வு பெற்றார். அந்தக் குடும்பம் நல்லா வளர்ச்சியா இருக்குது.

இப்படி நானே இத்தனை திருமணத்தை நடத்தினேன். நல்லூர் போன பிறகு நான் ஒரு 20 திருமணத்தை நடத்தி வச்சேன். அப்ப போய் எங்க திருணத்தைப் பற்றிப் பேசுனாங்க. என்னுடைய நோக்கம் முழுக்க அந்த மக்களுக்கு கல்வி அறிவு ஏற்படுத்தணும். நாமும் மேலும் படிக்கணும்னு படிச்சுட்டு இருந்தேன்.

அரசியல் கட்சிகள் சம்பந்தமா, மு.காதர்ஷா, எம்.பி.அப்போ கல்லூரியில படித்தார், அவர் வீட்டுக்கு வருவார். முத்துசாமி சட்டமன்ற உறுப்பினர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துல படிச்சார், அவர் வருவார். வி.பி.பாலசுப்பிரமணியம் படிச்சுட்டு இருந்தார் அவரும் வருவார். ஆனா அவர் என்னுடைய மாணவர் இல்லை. இந்த மூணுபேரோட வீட்டுப் பிள்ளைகளும், தம்பிகளும், தங்கைகளும் என்னிடம் படிச்சதால அனைவரும் வந்திட்டு இருந்தாங்க.

பக்கத்துப் பள்ளி ஆசிரியர்களும் என்னோட அன்பா இருந்து ஞாயிற்றுக்கிழமை நல்லூருக்கு வருவார்கள். என்னுடைய கவனம் பூராம் ஆசிரியர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், மரமேறிகள், செருப்புத் தைப்பவர்கள், பன்றி மேய்ப்பவர்கள், முடிதிருத்து பவர்கள் இவர்களின் வீட்டோட சொந்தபந்தப் பிள்ளைகளைப் படிக்க வைப்பது. இதுலதான் கவனம் இருந்தது.

என்னுடைய மாமா, இவுங்க சின்னம்மா வேலை பார்த்த அந்தப் பள்ளியிலேயே வேலை பார்த்ததுனால என்னுடைய மாமா ஏற்பாட்டுல ஒரே நாள்ல நானும் சம்மதித்தேன். இவுங்களும் சம்மதிச்சாங்க. அதற்குப் பின்னால நான் எப்படியோ இத்தனை திருமணத்தை நடத்தி வச்சதுனால இவுங்க தாத்தாகிட்ட சொன்னேன். "நாங்க அய்யர் வச்சுக்குற பழக்கம் இல்லைன்னு" சொன்னேன். "நீ எப்படியோ வச்சுக்கப்பா... ஞாயிற்றுக்கிழமை பொண்ண கும்மம்பட்டிக்கு அனுப்பி வைக்கிறேன் அப்புறம் அவுங்க உங்க சொந்தம் நீ எப்படி வேணுணாலும் நடத்திக்கலாம்னு" சொன்னார்.

அதுனால நான் அய்யர் இல்லாத திருமணத்தை நடத்தினேன். எனக்கு வாழ்த்துரை வழங்கக்கூட யாரும் வரலை. எங்க உறவினர்கள்ல யாருமே இந்த மாலையை எடுத்துக் கொடுக்க சொன்னேன். ஒருத்தர்கூட முன்னுக்கு வரலை. நீ உன்னோட பிரியத்துக்கு எதையாவது செஞ்சுகிட்டு இருக்க. இங்க எத்தனையோ பெண்கள் இருக்குது. நாங்கள் சொல்றதையும் கேட்கலை. இப்ப அய்யரையும் வேணாங்கிற வரலைனு சொல்லி முன்வரிசையில் உட்கார்ந்து இருந்தாங்க. ஆனா வரலை. நல்லூர் காரங்க கொஞ்சம்பேர் வந்து இருந்தாங்க.

ஊர்க்காரர்கள்கூட, நான் அந்த முறையோட அழைக்கலைங்கறதால நிறையபேர் வரவில்லை. அந்த ஊர் வெத்தலை, பாக்கு என்று ஒரு சடங்கு முறையில அழைக்கணும். அத நான் செய்யலை. எனவே அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாம, நானா தாலியை எடுத்துக்கட்டி, நானா மாலையைப் போட்டேன். அவுங்க எனக்கு மாலையைப் போட்டாங்க. காந்தி கிராம பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியர் ரெங்கராஜன் அந்த நேரம் வந்தார். தம்பி புலவர் பழனிச்சாமி கூட்டீட்டு வந்தார். அவருடைய வாழ்த்துரையோட நிறைந்தது. எனக்கு இது ஒரு மனநிறைவு. சட்டம் அனுமதி இல்லை, அத சட்டப்படிக் கொண்டு வந்தது அண்ணாதான். அவர் 68 இல் கொண்டு வந்தார். நான் 58 இல் இருந்து 68 வரைக்கும் ஒரு 200 திருமணம் நடத்தி வச்சு இருப்பேன்.

**எம்.ஆர்.ராதா ஆத்தூரில் "கீமாயண" நாடகம் நடத்தினார். அதை நடத்த விடக்கூடாதுன்னு அந்த ஊர்க்காரர்கள் எதிர்த்தனர். நாங்க 40 பேரும் 40 தடியோடு போய் நாடகக் கொட்டாயைச் சுத்தி நின்று நாடகத்தை நடத்தினோம்.**

**உங்கள் சொந்த ஊருக்குத் தொடர்பில்லாத எரியோடு பகுதியில் உள்ள நல்லூர் கிராமத்தில் தமிழாசிரியராகப் பணியேற்ற பிறகு அந்தப் பகுதிகளில் திராவிட இயக்கம் ஏற்படுத்திய மாற்றம் என்ன?**

நாலு பேரு 5 ஆம் வகுப்பு படிக்கிறான். 3 கவுண்ட, பிள்ளைமார் பையன் பெஞ்சுல உட்கார்ந்து இருக்கான். ஒரு சக்கிலியர் பையன் கீழ உட்கார்ந்து இருக்கான். "ஏண்டா நீ எந்த வகுப்பு படிக்கிறனு" பள்ளிக்கு போனவுடனே கேட்டேன். "5 ஆம் வகுப்புனு" சொன்னான். "ஏண்டா கீழ உட்கார்ந்து இருக்க"னா, "அவுங்க பெரிய ஜாதி, உட்கார கூடாதுங்"குறான். "மேல உட்கார்றானு சொன்னா"... இந்த மீதி மூணு பேர் எந்திரிச்சி நின்னான். அவன உக்கார விடமாட்டேன்ட்டான்.

அந்த மாதிரி இருந்த ஒரு நேரம். அவுங்களை எல்லாம் ஒண்ணு சேர்த்து... அந்தப் பிள்ளைகளுக்கு நான் ஆசிரியர், அந்தப் பிள்ளைகளுடைய அண்ணன்களெல்லாம், மாமன்களெல்லாம் என் வயது இருந்ததுனால, நண்பர்கள். அவர்களையும் படிக்க வச்சேன். இரவு நேரத்துல அவர்களுடைய அப்பா, அதாவது 2 ஆம் வகுப்பு படிக்கிற பிள்ளைகளுடைய அப்பாவும், பாட்டனும் என்னுடைய மாணவர்கள் தான்.

நான் பதினெட்டு வயதில் ஆசிரியராப் போனேன். என்னிடம் அறுபது வயதுள்ள மாணவர்கள் 5, 6 பேர் படித்தார்கள். அந்த மாதிரி நான் அவர்களுக்கு, அவர்களுக்கும் கல்வி அறிவு வரணும் தன்னுடைய பரம்பரையையும் படிக்க

வைக்கணும். முதல்ர பாட்டன், பாட்டிக்கு கல்வி அறிவு. இரண்டாவது என் நண்பர்களைச் சீர்திருத்தவாதிகளாக ஆக்குவது. மூன்றாவது இந்தப் பிள்ளைகளைப் பத்தாம் வகுப்பு வரைக்கும் படிக்க வைப்பது. மூணு திட்டத்துலையும் வேலைசெய்து மூணுலையும் வெற்றிதான்.

அங்க நான் ஒண்ணாம் வகுப்பில் சேர்த்துவிட்ட மாணவர்களுக்கு, நானே பத்தாம் வகுப்பு வரைக்கும் ஆசிரியராகி, அவர்களுக்குத் திருமணமும் முடித்து வைத்து, அவர்களுடைய குழந்தைகளுக்கும் திருமணம் முடித்து வைத்திருக்கிறேன். அப்படி நல்லூர் பகுதியில ஒரு ஐம்பது, அறுபது குடும்பத்தை நான் முன்னேற்றியிருக்கிறேன். அவுங்களும் இன்றைக்கு எங்க பிள்ளைகளுக்கு எல்லாம் சீர்வரிசை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். நாங்களும் அந்தப் பிள்ளைகளுக்கு சீர்வரிசை செய்து கொண்டுதான் இருக்கிறோம். என்னுடைய மாணவர்களுடைய பேரன் பேத்திகளுக்கு அவர்கள் நன்றி மறக்காம இருக்கிறார்கள். நாங்களும் அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இருபது கி.மீ சுற்றளவுள ஒரே ஒருத்தர்தான் போலீஸ். மற்ற அவ்வளவு பேரும் மாறி, மாறி உழுவணும், பன்றி மேய்க்கணும் இதுதான். பன்றி மேய்த்தவர் வீட்டுப் பையனை நான் பத்தாம் வகுப்புப் படிக்க வச்சு, அந்தப் பெற்றோர்களுக்குச் சொல்றது எல்லாம் சொல்லி, அவுங்க அண்ணன், அவுங்களுக் கெல்லாம் நானே அவுங்க வீட்ல போய்த் திருமணம் நடத்தி வச்சு, அந்தப் பையங்க படித்தார்கள்.

அதன் பிற்பாடு நம்ம பகுதிக்கே லைன் இன்ஸ்பெக்டரா வந்தார். அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் காந்தி கிராமத்துல எம்.ஏ., எம்.எஸ்.சி. படிச்சிட்டு இருக்காங்க. அப்படி அந்த ஊர்ல இருந்து படிச்சுட்டு அந்த ஊரக் காலி பண்ணிட்டு, வெளில போய்ட்டாங்க. நல்லா வசதியா, தொகை வசதியிலும் நல்லா இருக்காங்க. படிப்பிலையும் உச்சத்துல இருக்காங்க. பெரிய பொறுப்புல இருக்காங்க.

இளையபாரதி என்றவர் பம்பாயில் இந்திப் படத்தயாரிப்பாளரா இருக்காரு. பம்பாயிலிருந்து எனக்கு இரண்டு, மூன்று முறை டிக்கெட் அனுப்பி வைத்தார். நான் தான் போக முடியாமல் போச்சு. அதனால் நம்மால் முடிந்த அளவுக்கு 52 லேயே வேலையைத் தொடங்கி 1972, 1978 வரையிலும் இந்த வேலையைப் பார்த்தேன்.

படிக்க வைக்கவே கூடாத குடுகுடுப்பை என்று ஒரு இனம். மக்கள் தொகைக் கணக்கு எடுப்புக்காகப் போனேன். அப்பாவு என்ற குடும்பத் தலைவனைப் பார்க்கணும்னு போனேன். அவருடைய மனைவி தான்னு ஒரு அம்மா சொன்னாங்க. அந்த அப்பாவு வயது 5. அந்தப் பெண்ணுக்கு வயது 32.

உங்க வீட்டுக்காரரை வரச்சொல்லுங்கம்மா, கூப்பிடுங்கம்மா கணக்கு எடுக்கணும்னு சொன்னேன். இந்தா பாருங்க விளையாடிட்டு இருக்கார்னு சொன்னாங்க. உங்க பையன் வேண்டாம் உங்க வீட்டுக்காரரை வரச்சொல்லுங் கன்னு சொன்னேன். அவருதான் எங்க வீட்டுகாரர்னு சொன்னாங்க. அவரைக் கூப்பிட்டு வேண்டாம்பா... இப்படியெல்லாம் இருக்கக் கூடாதுன்னு சொல்லி, இந்த அம்மாளுக்கும் சொல்லி, அவனக் கொண்டு போய் ஒண்ணாம் வகுப்புல சேர்த்து விட்டேன்.

ஐந்தாம் வகுப்பு வரைக்கும் படித்த பிற்பாடு, நான் உயர்நிலைப் பள்ளிக்குப் போனதுக்கு அப்புறம் என்கிட்டையே கணவரைக் கூட்டிட்டு வந்து சேர்த்துவுட்டுச்சு. அவனப் பத்தாம் வகுப்பு வரை படிக்க வச்சு பாஸ் பண்ணிவிட்டேன். அவன் இப்பக்கூட எங்க ரெண்டு பேரையும் காட்டாஸ்பத்திரியில பார்த்து அந்த குடுகுடுப்பை அடிக்கிறதையும் விட்டுட்டதா சொன்னார்.

இதுபோல திருமணம் முடித்த பெண்கள் 5, 6 பெண்கள் என்கிட்ட வந்து படிச்சாங்க. சின்ன ராவுத்தம்பட்டி என்ற ஊரில் நான் ஒரு பள்ளியைத் தொடங்கி வைப்பதற்காகப் போனேன். அங்க குருசாமின்னு ஒரு ஆசிரியர் வந்தார். அவருக்கு துணையா அந்தப் பள்ளியைத் தொடங்கி வைக்கப் போனேன். அங்க ஒண்ணாம் வகுப்புல 10, 15 பேரைச் சேர்த்துவிட்டாங்க. ஒரு பத்துப்பேர் திருமணம் முடித்தவர்கள்தான்.

ஏறுக்கு மாறாதான் இருக்கும். அவனுக்கு வயது 40 இருக்கும். அந்தப் பிள்ளைக்கு 6 வயது இருக்கும். இந்தப் பையனுக்கு 8 வயது இருக்கும். அந்தப் பிள்ளைக்கு 25 வயது இருக்கும்.


**அப்போது நாங்கள் கட்சி தொடங்கவில்லை. தொண்டுதான். ஒரு கட்சியில உறுப்பினரா இல்லை. ஆனா கருத்துகளை எங்களால் முடிந்த அளவுக்குப் பரப்பினோம்.**

**இந்தமாதிரி ஒரு சமுதாயத்துல, எத்தனையோ பேர் பெரிய தொண்டு செய்து இருப்பாங்க. என் அளவுக்கு ஒரு ஆசிரியர் என்ன செய்யணுமோ, என் பங்கைச் செய்து இருக்குறேங்கறதுதான் எனக்கு மனநிறைவு.**

பேராசிரியர் கிரண் குமார்

# ஜாதி ஆணவக் கொலையெதிர்ப்பு: பகுத்தறிவு பண்பாட்டின் தேவை





“நதியில் செத்த மீனாய் மிதக்கும் நான் யார்?” என்ற கேள்விக்கு மீண்டும் ஒரு அழுத்தமான பதில் ஆதிக்க சாதியினரிடமிருந்து. அம்பேத்கர் படம் அச்சிடப்பட்ட மேலாடையுடன் நந்தீஸ் மற்றும் அவரது இணையர் சுவாதி, இருவரின் சடலமும், கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஆற்றிலிருந்து மீட்டெடுக்கப்பட்டதே அந்த பதில். அதன் விளைவாக எப்பொழுதும் போல் கண்டனங்கள், அறிக்கைகள், அரசியல் கட்சிகளின் மௌனங்கள், முற்போக்கு கட்சிகளின் கருத்து மோதல்கள்.

குறிப்பாக திராவிட இயக்கங்களையும், திராவிட கருத்துகளையும் குறிவைத்து விமர்சனம் செய்யும் அறிவுஜீவிகளின் போக்கு. ஆணவக் கொலைகளுக்கு எதிரான பகுத்தறிவு பண்பாட்டு தேவையை நீர்த்துப் போக செய்துவிட்டு பார்ப்பன மனோபாவத்துடன் பெரியாரியக் கருத்தியலையும் திராவிட இயக்கங்களையும் குறைகூறுவது இப்போது அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு சாதியக் கொலைகளின் போதும் இந்த உரையாடல்கள் மட்டும் தங்குதடையின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2014-ஆம் ஆண்டிலிருந்து 2016-ஆம் ஆண்டு வரை 356 சாதி ஆணவக் கொலைகள் நடந்துள்ளதாக தேசிய குற்றப்பதிவுப் பிரிவினர் (National Crime Records Bureau – NCRB) பதிவு செய்துள்ளனர். (Hindustantimes) இன்னும் அதிகரித்துக் கொண்டே வரும் சாதி ஆணவக் கொலைகளை அடியோடு ஒழிப்பதற்கு கருத்தியல் மற்றும் பண்பாட்டு ரீதியாக அமைப்புகளும் கட்சிகளும் திரள வேண்டிய அவசியமுள்ளது என்பதைதான் இந்த சாதி கொலைப் பதிவுகள் நமக்கு உணர்த்துகிறது.

சாதியக் கட்டமைப்பை வெவ்வேறு வழிகளில் மறுஉற்பத்தி செய்து அதை இந்தச் சமூகத்தில் இன்றளவும் நீட்டித்துக் கொண்டிருக்கும் முயற்சியில் பல சமூக நிறுவனங்கள் மிக வலுவாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்தச் சமூக நிறுவனங்கள்தான் பார்ப்பன மதத்தையும் சாதியக் கொள்கைகளாகிய குலத்தூய்மையையும் மற்றும் இவையனைத்தையும் உள்ளடக்கிய மனுதர்மத்துவத்தை நிலைநிறுத்திக் கொண்டிருக்கின்றன.

அதிகாரத்தையும் ஆணவத்தையும் மதத்தின் மூலமும் சாதியின் மூலமும் மறுஉற்பத்தி செய்து அதை சமூகச் சட்டங்களாக இயற்றி வாழ்வியலில் நடைமுறைப்படுத்தப்படும் போது அது மக்களின் உணர்வு நிலையில் மிக ஆழமாகப் பதியவைக்கப் படுகின்றது. சாதியக் கட்டமைப்பை உள்வாங்கிக் கொண்ட மக்களும் அந்த சாதியை மறுஉருவாக்கம் செய்து அதைத் தங்களின் வாழ்க்கைமுறையில் நடைமுறைப்படுத்தி தன்னை அந்த சாதியைக் காக்கும் ஒரு நிறுவனமாக மாற்றிக் கொள்கின்றனர்.

## மனுதர்ம கலாச்சாரமும், பண்பாடும்

ஒரு வருணம் இன்னொரு வருணத்தோடு கலப்பது என்பதையும் சாதிகள் ஒன்றோடு ஒன்று கலப்பதையும் தர்மத்திற்கே ஆபத்து என்று மிகக் கடுமையாக எச்சரிக்கும் மனுதர்மம், வருணம் மாறி பிறக்கும் குழந்தைகளைக் கொண்டு புதிய சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி அவர்களுக்கென பெயர்கள் இயற்றி (சண்டாளன், ஸ்வபாகன், ஷத்தா, உக்ரன் மற்றும் புர்க்கசன்) அவர்களுக்கான இருப்பிடங்களையும் தொழில்களையும் தீர்மானித்து அதை சமூகச் சட்டங்களாக நடைமுறைப்படுத்தினார்கள்.

இப்படி இழிப்பிறப்பாளர்கள் பெருகிவரும் நாடு உறுதியாக அழிந்துவிடும் என்றும் எச்சரிக்கும் மனுதருமத்தின் வருணம் மற்றும் சாதிகள் கலப்பதைத் தான் "கலியுகம்" என்று குறிப்பிடுகிறது. "நாலாம் வருணத்தவர்க்கு மேற்குலத்துப் பெண்டிரிடம் பிறந்த பிரதிலோமர்களான அயோகவன், ஷத்தா, சண்டாளன் இம்மூவரும் ஒரு தர்ம காரியத்திற்கும் தகாதவர்." (பத்தாம் அத்தியாயம்,16, பக்.172)

ஊருக்கு வெளியில் சண்டாளர்களையும் ஸ்வபாகர்களையும் குடிய மர்த்தவும், அவர்கள் பிணங்களின் ஆடைகளை அணியவும், விழாக்களின் போது இவர்களை பார்ப்பதும், இவர்களுடன் பேசுவதும் கூடாது என்று ஒவ்வொரு சாதியினருக்குமான வாழ்வியியல் சட்டங்களை இயற்றி அதை இன்றளவும் பாதுகாத்து வருகின்றனர். மனுதர்ம சாஸ்திரத்தின் பத்தாவது அத்தியாயத்தில் சாதிகளின் தோற்றம் மற்றும் அந்த சாதிக்குரிய தொழில் பற்றி விரிவாக கொடுக்கப் பட்டுள்ளது.

**2014-ஆம் ஆண்டிலிருந்து 2016-ஆம் ஆண்டு வரை 356 சாதி ஆணவக் கொலைகள் நடந்துள்ளதாக தேசிய குற்றப்பதிவுப் பிரிவு NCRB பதிவு செய்துள்ளது**

இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் மனு வகுத்த நீதியின் கீழ் மதம், பண்பாடு, குடும்பம், கலாச்சாரம், அறிவுசார் துறைகள், சட்டத்துறைகள், அரசு மற்றும் அரசியல் துறைகள், தகவல் தொடர்பு துறைகள், மற்றும் பல சமூக நிறுவனங்களைக் கொண்டு ஒவ்வொரு சாதிக்குமான ஆதிக்க மன நிலையையோ அல்லது அடிமை மனநிலையையோ உருவாக்கி அதை இந்தச் சமூகத்தில் நிறுவனப்படுத்த முயல்கின்றனர்.

இதை அறிவியல்பூர்வமாக அனுகும் போது தான், சாதி என்பது இந்துமதப் பண்பாடாகவும் கருத்தியல் ரீதியாகவும் ஆதிக்க சாதியினரால் தொடர்ந்து கட்டமைக்கப்பட்டு காப்பாற்றப் படுகிறது என்பது தெளிவாகிறது. இதன் விளைவாகத்தான், இங்கே பார்ப்பனர்களே இல்லாமல் போனாலும் இடைநிலை சாதியினரின் பார்ப்பனிய மனோபாவத்தால் சாதி ஆணவம் காப்பாற்றப்படும் என்பதும் உறுதியாகிறது.

சாதியை நிலைநிறுத்தி அடிமை மனநிலையை இன்னும் அழுத்தமாக நிறுவுவதன் மூலம் மட்டுமே, ஆதிக்க சாதியினரின் ஆணவத்தையும் அவர்களின் குலத்துாய்மையையும் கட்டுடையாமல் பார்த்துக் கொள்ளமுடியும். காலம் காலமாக மிகக் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்த இந்த சாதியச் சட்டங்களை அம்பேத்கர் மற்றும் பெரியாரின் கருத்துகளைக் கொண்டு அந்தக் கட்டமைப்பைத் தகர்க்க முற்படும்பொழுதுதான் கொடூரமான கொலைகளின் மூலம் ஆதிக்க சாதிகள் தங்களின் சாதி ஆணவத்தை மீட்டுருவாக்கம் செய்கின்றனர்.

## கிராமங்களை ஒழித்தல் வேண்டும்

இந்தியாவின் சுதந்திர அரசியல் தலைவர்கள் தங்களின் அதிகாரம் கொண்டு ஒரு சில மாற்றங்களையே செய்ய முடிந்தது. அதில் புதிய அரசியல் திட்டங்களுக்கும் புரட்சிகரமான சட்ட சாசனங்களுக்கும் மிக வலுவான எதிர்ப்பைப் பதிலாக அளித்தது இந்த கிராமங்களும், பஞ்சாயத்துகளும் தான். சாதியையும் சாதியக் கொலைகளையும் ஆதரிக்கும் சமூக நிறுவனங்களில் மிக முக்கியமான ஒன்றாக இந்த கிராம அமைப்புமுறை கருதப்படுகிறது. இங்கே கிராமம் என்பது பாரதிராஜா திரைப் படங்களில் காட்டப்படுவது போன்ற இயற்கை சூழல் கொண்ட ஒரு அழகான இடமல்ல.

மாறாக, கிராமம் என்பது சாதி வேலிகளையும் தீண்டாமைச் சுவர்களையும் சாதிக்கொரு கோவிலையும் அதனுள் பல சட்டங்களையும் கொண்டிருக்கும் ஒரு இடமேயன்றி வேறொன்றும் அல்ல. மேலும், கிராமம் என்பது பார்ப்பன மனுதர்மக் கலாச்சாரத்தை முழுவதுமாக தனதாக்கிக் கொண்ட ஒரு அமைப்புமுறையேயாகும். இதன் காரணமாகத்தான் இந்து தேசியவாதிகள் தங்களின் தனிப்பட்ட கொள்கைகளாக கலாச்சார-பண்பாட்டு மீட்டெடுப்பு என்று கூறி கிராம அமைப்புமுறையை மீட்டெடுக்க முயற்சிக்கின்றனர்.

காரணம், கிராம வாழ்க்கைமுறை யென்பது மனுதர்மச் சட்டங்களை மிகக் கடுமையாகப் பின்பற்றி வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களைக் கொண்டது. கிராம அமைப்புமுறையை இப்படி அனுகும் போது மட்டும்தான், அது இரத்தமும் சதையுமாய் சாதி ஆணவத்தை உள்ளடக்கிய ஒரு முக்கிய அதிகார மையமாகச் செயல்படுகிறது என்பதை நாம் தெளிவாக்கிக் கொள்ள முடியும்.

இதற்கு உதாரணமாக காப்(Khap) பஞ்சாயத்துகள், 100-க்கும் மேற்பட்ட கிராமங்கள், 10-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் இன்றும் கூட காப் ஆதிக்கம் செலுத்தும் பஞ்சாயத்துகளில் மனுதர்ம-

சாதியச் சட்டம்தான் நடைமுறைப் படுத்தப்படுகிறது. அவர்கள் கலாச்சாரத்தின் பாது காவலர்களாகவும், சாதி ஆணவத்தைத் தாங்கிப் பிடிப்பவர்களாகவும் அவர்களின் பஞ்சாயத்துகளில் தலித்துகளுக்கு கெதிரான வன்கொடுமை மிகுந்து இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காப்புகளின் அதிகாரம் இருக்கும் கிராமங்களில், யாராவது சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டு ஊரைவிட்டு வெளியேறினால், அங்கிருக்கும் அனைத்து தலித் குடும்பங்களுக்கும் வரம்பு மீறிய சாதிய விதிமுறைகள் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவர். அத்தோடு மட்டும் இல்லாமல், ஒட்டு மொத்த கிராமத்துடனும் அவர்கள் தொடர்பற்று இருக்க வேண்டுமென்று கூறி தலித்துகளின் அத்தியாவசியத் தேவைகளை முடக்கிவிடுகின்றனர்.

இதே போல் தர்மபுரி இளவரசன்-திவ்யா சாதி மறுப்புத் திருமணத்திற்கு பிறகும் நடந்தது. வன்னியர் சாதி பஞ்சாயத்துகளின் ஆணைப்படி திவ்யாவை திருப்பி அனுப்பவில்லையென்றால் அந்த கிராமத்தில் “காலனி” வீடுகள் அகற்றப்படும் என்று எச்சரிக்கப்பட்டது. அதன் விளைவாக வன்னிய சாதி ஆணவக் காரர்களால் மூன்று தலித் கிராமங்கள் மிகக் கொடூரமான வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டது.

அதே போல், மஹாராஷ்ட்ர மாநிலத்தில் கயர் லாஞ்சி என்னும் கிராமத்தில் ஆதிக்க சாதியினரின் நிலங்களுக்கு மத்தியில் தன்னுடைய நிலத்தை காக்க போராடிய போது, கிராம பஞ்சாயத்தின் ஆணைக்கு உட்பட்டு சுரேகா, அவருடைய கணவர் மற்றும் மூன்று பிள்ளைகள் (இரண்டு ஆண், ஒரு பெண்) என ஐவரையும் மனிதத் தன்மையே சிறிதும் அல்லாமல் அவர்களுடைய பிறப்புறுப்புகள் அறுத்தெரியப்பட்டு, பெண்கள் இருவரையும் கூட்டு கற்பழிப்பு செய்து மிகக் கொடூரமான முறையில் கிராம மக்களின் முன்னிலையில் கொலை செய்யப்பட்டனர்.

**இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் மனு வகுத்த நீதியின் கீழ் மதம், பண்பாடு, குடும்பம், அறிவுசார் துறைகள், சட்டம், ஊடகம், அரசு மற்றும் அரசியல் துறைகள், மற்றும் பல சமூக நிறுவனங்களைக் கொண்டு ஒவ்வொரு சாதிக்குமான ஆதிக்க மன நிலையையோ அல்லது அடிமை மனநிலையையோ உருவாக்கி அதை இந்தச் சமூகத்தில் நிறுவனப் படுத்துகின்றனர்.**

இந்தச் சாதிய பாகுபாடு பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாதோருக்குமானது மட்டு மல்லாமல் அது இடைநிலை சாதிகளுக்குள்ளும் இருக்கிறது. ஆதிக்க சாதியின் ஆணவம் தலித்துகளுக்கு எதிரானவையாக இருந்தாலும், அவை பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கும் எதிராக இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம் வெள்ளாங்குழியில் கூட்டுறவு வங்கி ஊழியராக வேலை பார்த்து கொண்டிருந்த கோனார் சாதியைச் சேர்ந்த சங்கரும் அதே பகுதியில் உள்ள தேவர் சாதியைச் சோந்த சத்யபாமா, இருவரும் காதலித்து வந்தநிலையில் சத்யபாமாவின் 16-வயது சகோதரர் மற்றும் அவரது நண்பர்கள் (பள்ளி மாணவர்கள்) சேர்ந்து சங்கரைக் கொலை செய்தனர். நடந்த இந்த ஆணவக் கொலையின் மூலம் இந்த சாதி ஆணவமானது பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்குள்ளும் வேரூன்றி யிருக்கிறது என்பதை நிரூபணமாக்குகிறது.

மேற்கூறப்பட்ட சம்பவங்கள் அனைத்திலும் கிராமமும் அதன் சாதி ஆதிக்கத்தின் ஆணவ அதிகாரமும் சேர்ந்து கொண்டு எப்படி சாதியைத் வன்முறை கொண்டு கட்டுக்குள் வைத்திருக்கிறது என்பது தெரிகிறது.

அந்த கிராம அதிகார மையத்தின் மற்றுமொரு புள்ளி தான் இந்தக் குலம். தங்களின் குல-தர்மம், மற்றும் குல-கர்மத்தைப் பின்பற்றித்தான் இந்தச் கிராமத்துச் சாதிக் குழுக்கள் இயங்கி வருகின்றனர். இந்தக் குல-தர்மம் மற்றும் குல-கர்மத்தின் மிக முக்கியமான பங்கு என்னவெனில் அவர்களுக்கே உரிய சாதி ஆணவத்தைக் கட்டிக் காப்பது என்பது தான். இன்னும் ஆழ்ந்து நோக்கினால், அந்த சாதி ஆணவம் என்பது சாதியை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் பெண்ணுடல் தானே யன்றி வேறொன்றுமில்லை.

இத்தகைய மனோ பாவத்தைத் தங்கு தடையின்றி வளர்த்துக் கொண்டிருப்பவை தான் இந்தக் குலதெய்வ வழிபாடுகள். குலதெய்வ வழிபாடுகளின் முக்கியத்துவம் குறித்தும் அந்த வழிபாடுகள் சாதிக்கு நிழல் கொடுக்கும் ஒரு ஆலமரமாய் வளர்ந்து வருவதை காட்டாறு வெளியிட்ட ‘அடிமைப்படுத்தும் குல தெய்வங்கள்’ என்னும் புத்தகத்தில் இன்னும் ஆழமாகத் தெரிந்து கொள்ளலாம். மேலும் இந்தக் குல தெய்வங்கள் பார்ப்பனர் அல்லாத ஆனால், பார்ப்பன மனோபாவத்தை உள்ளடக்கிய அனைத்து சாதி படிநிலையினர்களின் அதிகார மையங்களாகும்.

சீர்திருத்தப்பட்ட இந்து மதக் கொள்கைகளை கொண்டு தான் காந்தி இந்தியாவின் கிராமங்களைச் சீர்திருத்து வதாகச் சொல்லி கிராமம் கிராமமாக நடைபயணம் மேற்க்கொண்டார். நகரமய மாக்கலும், பன்முகத்தன்மையும் மட்டுமே சாதியம் ஒழிக்க வழியென்று கூறி அவருக்கு எதிராகப் போர் கொடி துாக்கினார் அண்ணல் அம்பேத்கர்.

நிலபிரபுத்துவத்தையும், சாதி-தீண்டாமையையும் ஒழிக்க வேண்டுமென்றால் கிராமங்களைத் தகர்க்க வேண்டுமென்றார் தந்தை பெரியார்.

“பேதமற்ற இடம் தான் மேலான திருப்தியான இடமாகும்” என்று கூறி, கிராமங்களை ஒழித்தே ஆகவேண்டும் என்றார் தந்தை பெரியார். இதன்

விளைவாகதான், பன்முக தன்மை கொண்ட நகரக் கலாச்சாரம் இந்து தேசியத்திற்கும் சாதி-அடிமை முறைக்கும் மிகுந்த சவாலாக இருக்கிறது.

## ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டம்

ஒவ்வொரு வருடமும் 100-க்கும் மேற்பட்ட ஆணவக் கொலைகள் நடப்பதை அடிப்படையாகக் கொண்டு 2014-ஆம் ஆண்டு ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டம் மிகுந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் நமது அண்டை நாடான பாகிஸ்தான் பாரளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்டு பாகிஸ்தான் தண்டனைச் சட்டப் பிரிவில் சேர்க்கப்பட்டது.

இந்தியாவில் சாதி ஆணவக் கொலைகளுக் கென புதியசட்டம் இயற்ற வேண்டும் என போராடிக்கொண்டிருக்கும் வேளையில், இங்கு சாதிய அமைப்புமுறையே சட்டமாக இருப்பதை முதலில் உணரவேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரையில் சாதி ஆணவக் கொலைகளுக் கென தனிச் சட்டங்கள் இல்லை. இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகளின் கீழ் (IPC) தான் கைதுகளும், தண்டனைகளும் கொடுக்கப்படுகிறது. (வழக்கு பதிவு செய்யப்பட்ட கொலைகளுக்கு மட்டுமே) கொலை தண்டனைச் சட்டத்தைக் கொண்டுதான் இன்றும் ஆணவக் கொலைகளில் கைது நடைபெறுகிறது. கொலை செய்வதற்கான காரணங்கள் பகை யாகவோ அல்லது போட்டி யாகவோ இருக்கலாம், அத்தகைய கொலைகள் சமூகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினாலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆனால், சாதியைச் அடிப்படையாகக் கொண்டு திட்டம் தீட்டி, அந்தக் குடும்பத்தினரே சேர்ந்து சாதி மறுப்பு திருமணம் செய்த இணையர்களை மிகக் கொடூரமான முறையில் கொன்று விடுகின்றனர். இது மிக ஆழமான பாதிப்புகளை சமூகத்தில் ஏற்படுத்தி ஒட்டுமொத்த மனித ஜனநாயகத்தையே கேள்விக் குள்ளாக்குகிறது. மேலும், சாதி ஆணவக் கொலைகளுக்கு சாதியம், மதம், கலாச்சாரம், பண்பாடு என்ற மிகவும் பிற்போக்குத்தனங்களே காரண மாய் உள்ளது. அப்படியிருக்கும் போது சட்டத்தின் பார்வையில் கொலைத் தண்டனைச் சட்ட வரையறைகள் ஆணவக் கொலை களுக்குப் பொருந்தாது, எனவே சாதி ஆணவக் கொலைகளுக்கென மிகக் கடுமையான தனிச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையினால் 1979-ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான குற்றங்களையும் ஒழிப்பதற்காக அமைக்கப்பட்ட கூட்டமைப்பில் (The Convention on the Elimination of All Forms of Discrimination against Women – CEDAW) 1993-ஆம் ஆண்டில் இந்தியா கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது. ஆணவக் கொலைகளைக் கடுமையான சட்டங்கள் கொண்டு மட்டும் அகற்றிவிடலாம் என்பது சாத்தியமேயில்லை. மேலும், இத்தகைய கொலைகளை எதிர்ப்பதில் சட்டத்திற்கு மிகுந்த வலிமை இல்லை என்பதிலும் சந்தேகமேயில்லை. அதற்கு மாறாக, சாதி ஆணவக் கொலைகளின் அடிப்படையயைத் தகர்க்கக் கற்றுக் கொண்டு சட்டத்துறையோடு சேர்ந்து சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பண்பாடு என அனைத்து வழிகளிலும் இதை ஒழிக்கப் பாடுபட வேண்டும்.

**சாதியையும் சாதியக் கொலைகளையும் ஆதரிக்கும் சமூக நிறுவனங்களில் மிக முக்கியமான ஒன்றாக கிராம அமைப்புமுறை இருக்கிறது... ஆதிக்க சாதியின் ஆணவம், தலித்துகளுக்கு எதிரானவையாக இருந்தாலும், அவை பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கும் எதிராக இருக்கிறது...**

## கட்சிகள் மற்றும் அமைப்புகளின் இப்போதைய தேவை

தலித்துகளின் அரசியல் விழிப்புணர்வால் அவர்களின் கிராம அரசியல்-பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆதிக்க சாதிகளின் கற்பனைகளில் கூட எண்ணிப் பார்க்காத அளவிற்கு இன்று தலித்துகளுக்கு கிடைத்துள்ள கல்வியறிவும் அரசியல் ஆதரவும் பொருளாதார மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வின் விளைவால் வந்த முன்னேற்றங் களினால் மனுதர்ம-கிராம அமைப்பு முறையில் ஏற்பட்ட ஏற்ற இறங்கங்களும்தான் இன்று நடக்கும் ஆதிக்க சாதியினரின் வெளிப்படையான சாதி அரசியலுக்கு காரணம். இதன் விளைவாக சாதிக் கட்சிகளின் பெருக்கமும் சாதி வன்முறையைத் தூண்டும் அவர்களின் மேடைப் பேச்சுகளும் அதைத் தொடர்ந்த வன்முறைகளும் இன்று வலுப் பெற்றுள்ளது.

இந்த நெருக்கடிக்கு மத்தியில்தான் பெரியாரிய - அம்பேத்கரிய மற்றும் இதர முற்போக்கு கட்சிகளின் மிகத் தீவிரமான செயல்பாடு தேவைப்படுகிறது. வேதங்கள், சாஸ்திரங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் என இவை எவையுமே கற்றறியாத வெகுஜன மக்களை பண்பாட்டு ரீதியாக இந்து மதச் சட்டங்களுக்கும் சாதி அமைப்புக்கும் எதிராக ஒன்றிணைக்க வேண்டிய தேவையுள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

பார்ப்பனிய எதிர்ப்பு, இந்துமத எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு என பல்வேறு கொள்கைகளைத் தங்களுடையதாகக் கொண்ட அமைப்புகள் பெரியார்-அம்பேத்கர் கருத்துக்களைக் கொண்டு தங்களுடைய தொண்டர்களை இந்துமதத்தை விட்டு வெளியேற வலியுறுத்துவது என்பது இப்போதைய சூழ்நிலையில் மிக அவசியமான ஒன்று.

மற்ற தோழமைக் கட்சிகளும் ஒன்றிணைந்து பன்முகத்தன்மைக் கொண்ட நவீன நாகரீக கலாச்சாரத்தை நடைமுறைப்படுத்தி மக்களையெல்லாம் அணித்திரட்டி இந்து தேசியத்திற்கும் தமிழ் தேசியக் கட்டமைப்பிற்கும் எதிராக மிக வலுவான அமைப்பாக உருவெடுத்தால் மட்டுமே இந்து-சாதி ஆணவத்தை ஒழித்துகட்ட முடியும். இந்து தேசியத்தையோ அல்லது தமிழ் தேசியத்தையோ கட்சிகளும் அமைப்புகளும் வலியுறுத்துவதன் மூலம் சாதிய மனோபாவத்தையும் அதன் ஆணவத்தையும் மறைத்துவைக்கதான் முடியுமே தவிர சாதியை ஒழிக்க முடியாது என்பது தான் நிதர்சனமான உண்மை.

## கல்வித் திட்டங்கள்

உலகிலேயே மூன்றாவது மிகப் பெரிய உயர் கல்வி அமைப்புமுறை கொண்ட நாடாகத் திகழும் இந்தியாவில் தான், பள்ளி மாணவர்கள் ஐந்து பேர் சேர்ந்து சாதி ஆணவக் கொலையில் ஈடுபட்டுள்ளனர். எல்லா நாடுகளிலும் இருக்கின்ற பாலியல் கல்வி முறை, மூடநம்பிக்கைகளை ஒழித்து பகுத்தறிவை வளர்க்கும் பாடத் திட்டங்கள், அறிவியலை அறிவியலாக அணுகும் பாடத்திட்டங்கள் எதுமேயில்லை இங்கு இல்லை. இதன் விளைவுதான் பள்ளி மாணவர்கள் செய்த ஆணவக் கொலை.

இவைக்களுக்கெல்லாம் மேலும் மெருகேற்றும் வகையில் பகுத்தறிவைக் கண்டு பதற்றப் பட்டு மூடநம்பிக்கைகளை மட்டுமே முழுவதுமாகக் கொண்ட பாடத்திட்டம் மற்றும் பள்ளி பாடப் புத்தகத்தில் சாதி மதத் தலைவர் களைப் பற்றிய பாடம் வைக்க வேண்டும் என்று போராடும் அரசியல் திட்டங்கள் என இந்துத் துவத்தையும், இந்து தேசியத்தையும் திணிக்கும் பாடத் திட்டங்களே இந்தியாவின் தனித் பெருமை.

அடுத்த தலைமுறையினரையும் சாதி-மத அடையாளங்களுக்குள் அடைத்து வைக்கும் இந்தப் பாடத்திட்டங்களைச் சட்டப்பபூர்வமாக எதிர்த்து, “மனிதனை மனிதனாக மாற்றும் ஒரு பகுத்தறிவுக் கருவியே கல்வி” என்பதை மனதில் கூர்ந்து பகுத்தறிவுத் திட்டங்களை செயல்முறைப் பாடாமாக வைக்க வேண்டும்.

சாதி-மதப் பெருபான்மையான கல்வியாளர் களின் அதிகாரத்தின் கீழ் இத்தகைய அடிப்படை வாதக் காட்டுமிராண்டித்தனத்தை நிலைநிறுத்தும் பாடதிட்டங்களை எதிர்த்து பேராசிரியர்களும், கல்வியாளர்களும் கல்வித் தளத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும். ஒரு பண்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் அவர்களின் மௌனமானது, அவர்கள் ஆசிரியர் தொழிலுக்குத் தகுதியற்றவர்கள் என்பதை நிருபணமாக்குகிறது.

சாதி, தீண்டாமையைத் தன் பண்பாடாகக் கொண்டிருக்கும் ஒரு அதிகார மையமாகச் செயல்படும் பார்ப்பன இந்துமதம் தான் இந்த சாதி ஆணவத்தின் மூலவேர். அதில் “மதம் என்பது ஒரு அதிகாரத்திற்கான ஆதாரமாகவும்”, சாதி என்பது ஆணவத்தின் அடையாளமாக இன்றளவும் மிக மோசமான வன்முறைகளின் மூலமும் படுகொலைகளின் மூலமும் நிலை நிறுத்தப்படுகின்றது. “சாதியென்பது ஒரு மனநிலை” என்னும் அம்பேத்கரின் கூற்றிற்கிணங்க அந்த மனநிலையைப் பயிற்று விக்கும் இந்தச் சமூக நிறுவனங்களைத் தகர்ப்பதன் மூலம் மட்டுமே சாதியக் கொலைகளைத் தடுத்து சாதி மறுப்புத் திருமணங்களைத் தொடர்ந்து நடத்த முடியும்.


# இடஒதுக்கீட்டு உரிமை

## நூலை 25,000 பேரிடம் கொண்டு சேர்க்கும் திட்டம்

“ஜாதிவரி இடஒதுக்கீட்டு உரிமை” தொடர்பாக மக்களிடம் உள்ள சந்தேகங்களையும், கேள்விகளையும் கேட்டறிந்து, அவற்றுக்கான பதில்களையும் தொகுத்து, “இடஒதுக்கீட்டு உரிமை” என்ற பெயரில் 32 பக்க நூலாக அச்சிட்டோம். 2016 இல் முதல் வெளியீடாக வந்தது. இதுவரை 6000 பிரதிகளைப் பரப்பியுள்ளோம்.

2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அந்த நூலை 25,000 பேரிடம் கொண்டு சேர்ப்பது என முடிவுசெய்து, முதல்கட்டமாக 10,000 பிரதிகள் அச்சிடுகிறோம். 32 பக்க நூலின் விலை 10 ரூபாய்தான். நூல் அச்சாகித் தயாராகிவிட்டது. நூல் வேண்டுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

நூலின் PDF வடிவ மின்னூலை மின்னஞ்சல் முகவரியில் வழியாக, இலவசமாக நூற்றுக்கணக் கானோருக்கு அனுப்பி உள்ளோம். சமூகவலைத் தளங்கள் அனைத்திலும் இலவசமாகப் பரப்பியுள்ளோம்.


நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, வடமாநிலங்களின் இணைய ஊடகங்களுக்கு இலவசமாக அனுப்பப்பட்டுள்ளது. இந்தியிலும் மொழிபெயர்ப்பு நடந்து வருகிறது. ஆங்கிலம், இந்தி இரு மொழிகளிலும் அச்சிட்டு வெளியிட இருக்கிறோம்.

ஆங்கிலம், தமிழ் இருமொழிகளிலும் Youtube வீடியோக்களாகவும் தயாரிக்கும் பணி நடை பெறுகிறது. ஒரு இதழ் வெளியிடும் குழுவாக எங்களால் முடிந்த அனைத்துக் கடமைகளையும் சரியாக நிறைவேற்ற முறைந்துள்ளோம்.

இடஒதுக்கீட்டால் முன்னேறிவரும் திராவிடர் இன மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இந்த வெளியீட்டைக் கொண்டு சேர்ப்பது மிக மிக அவசியம். இடஒதுக்கீட்டால் பலனடைந்தவர்கள், முன்னேறிய வர்கள் அனைவரும் ஒரு 50 நூல்களை வாங்கி, தங்கள் பகுதி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழங்குங்கள். வாய்ப்புள்ள பள்ளி, கல்லூரிகளில் இடஒதுக்கீடு குறித்து சிறு சிறு உரையாடல்களை நடத்தி, நூலை வழங்குங்கள். “நாங்களே அச்சிட்டுக் கொள்கிறோம்” என்று கேட்பவர்களுக்கு Print File அனுப்பிவைக்கிறோம்.

தொடர்புக்கு: **99427 38950, 84284 55455, 97868 89325 www.periyarbooks.in , kaattaaru2014@gmail.com**

தொகுப்பு: பொள்ளாச்சி விஜயராகவன்



# முன்னுதாரணமற்ற பேராளுமை

இதிகாச காலங்களில் விதைக்கப் பட்டு, மன்னர்கள் ஆட்சியில் வளர்த்து எடுக்கப்பட்ட-உலகில் எங்கும் இல்லாத பிறப்பின் அடிப்படையில் இந்திய மனித சமுகத்தை மனித குல விரோதிகள் ஆன பார்ப்பனர்கள் வேதமதமான இந்து மதத்தையும், அதன் புனித நூல்களாகக் கருதும் மனுதர்மம், பகவத்கீதை, வேத ஆகமங்கள் அடிப்படையில் நாலுவர்ணம், நாலாயிரம் சாதிகளாகப் பிரித்து சாதிக்கொரு தொழில் சாதிக்கு ஒரு குடியிருப்பு(ஊர்,சேரி) என பிரித்து, நல்லான் வகுத்தது அல்ல நீதி-வல்லான் (பார்ப்பான்) வகுத்ததே நீதி என்று சாம,பேத,தான,தண்டம் என்ற வழி முறைகளை கடைப்பிடித்து,அதை சனாதான வேத இந்துமதம் என்ற பெயரில் 5,000 ஆண்டுகளாக மனித சமூகத்தை கல்வி அறிவற்ற மக்கள் ஆக ஆக்கி வைத்தனர் ஆரிய பார்ப்பனர்கள்.

இச்சாதி அமைப்பு முறையை எதிர்த்த வேதமத எதிர்ப்பு இயக்கங்களை தங்களுக்கே உரித்தான நேரடியான மறைமுகமான வன்முறையால் அழித்தனர் ஆரிய பார்ப்பனர்கள்.சான்றாக இராமயண சம்புகன், மகாபாரத ஏகலைவன், 8000 சமணர்கள், தில்லை நந்தன் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சியில் கலெக்டர் ஆஷ்,விடுதலை இந்தியாவில் பல்லாயிரம் மக்களால் மகாத்மா என்று அழைக்கப்பட்ட தோழர் காந்தியார் உட்பட வேத மதமான இந்துமதம் வகுத்த வர்ண முறைகளுக்கு எதிராக பேசினார்கள், செயல்பட்டார்கள் என்று படுகொலை செய்யப்பட்டனர் ஆரிய பார்ப்பனர்களால்!

பார்ப்பன வன்முறைக்கும், படுகொலைக்கும் இன்றைக்கும் சான்றாக விளங்குவது புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்களால் அகழ்வு ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலைகள், புத்தக் கொள்கைகள் பதித்த தூண்கள் நமக்கு ஆரிய பார்ப்பன கொடூரத்தை விளக்குவதாக உள்ளது.

இந்தச் சமூக அமைப்பும் (குலத்தொழில், சாதி தீண்டாமை ஊர், சேரி ஆகியவைகளைக் காப்பதுதான் அழியாத சனாதனம்) மன்னர்கள் ஆட்சி முடிவுற்று கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தில் இந்தியா வரும் வரை மேற்க்கண்ட சமுதாய அமைப்பை மனுதர்ம சட்ட விதிகளின்படி-நேரடியாகவும்,மறைமுகமாகவும் பார்ப்பனர்கள் காப்பாற்றி வந்தனர்.

கிழக்கிந்தியக் கம்பெனி 1757-இல் 18 வயது ராபர்ட்கிளைவ் யூனியன் ஜாக் கொடியை ஏற்றி இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தான்.அதுவரை அரசு கல்வி வேலை வாய்ப்பை சமஸ்கிருதமொழி மற்றும் மனுதர்ம அடிப்படையில் மறுத்து வந்ததை நிராகரித்து எல்லோருக்கும் கல்வி அதுவும் அறிவியல் முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட ஆங்கில வழிக்கல்வியை ஆங்கிலேய அமைச்சர் அவையில் சட்டக்குழு உறுப்பினராக இருந்த தாமஸ் பேபிங்டன் மெக்காலே கொண்டு வந்தார். அதன் பிறகே அரசு கல்வி வேலைவாய்ப்பு பார்ப்பனர் அல்லாத மக்களுக்கு ஓர் அளவிற்கு கிடைக்கப் பெற்றது.

இப்பரவலாக்கும் (அரசுகல்வி வேலைவாய்ப்பு - இடஒதுக்கீடு) முறையை சனாதான தர்மம் என்ற பெயரில் இந்து மதத்திற்கு விரோதமானது என்று கூறி அன்றும் சரி-இன்றும் சரி இந்தியாவில் தேசிய மற்றும் மாநில கட்சிகளில் உள்ள பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தனர், எதிர்த்தும் வருகிறார்கள். தங்களுக்கு ஆட்சி, அதிகாரங்கள் கையில் கிடைக்கும்போது எல்லாம் அதைப் பயன்படுத்தி சமத்துவம் சமூகநீதியை சொல்லுவதற்கு தொடர்ந்து பயன் படுத்துகிறார்கள். அப்படியான ஒரு கால கட்டமான 1954-இல் கலகக்காரர் தோழர் பெரியாரின் "மக்களை மடையர்களாக்கும் மதவெறி ஆட்சி" என்ற உரை யையும், "முன்னுதாரணமற்ற பேராளுமை இவரே" என்ற பதிவையும் இளைஞர்கள் அறிந்து கொள்ளப் பதிவுசெய்கிறேன்.

**இப்பொழுதுள்ள இந்திய அரசியல் சட்டமும் சிறப்பாக, இந்திய நீதி (இந்து லா) சட்டமுமே-மநுதர்ம சாத்திரம்தான். அதாவது, இதை ஆதாரமாகக் கொண்டுதான் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.**

## முன்னுதாரணமற்ற பேராளுமை இவரே!

இந்திய வரலாற்றில் மிகப் பெரிய புரட்சி யாளராக அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள், சிந்தனையாளர்களாலும் கல்வியாளர் களாலும் அறியப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தில் பேசிய பிரபல எழுத்தாளர், சாகித்திய அகாடமியின் முக்கியப் பொறுப்பாளர் பொன்னீலன் அவர்கள் உரையாற்றும் பொழுது (25.12.2011) ஓர் அரிய தகவலை அங்கே பதிவு செய்தார்கள். அது இதோ:

"சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கிழக்கு ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில், உலக தத்துவ அறிஞர்கள் மாநாடு நடந்தது. மாநாட்டைப் பொறுப் பேற்று நடத்திக் கொண்டிருந்தவர் உலகப் பேரறிஞர் வால்ட்டர் ரூபன். அவர் தத்துவ அறிஞர் மட்டுமல்ல. ஒரு மாபெரும் இந்தியவியலாளரும் கூட; மாநாட்டு ஓய்வு நேர வேளையில் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா இன்னும் சில இந்திய அறிஞர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறார் அவர். அப்போது வால்ட்டர் ரூபன் இந்தியத் தோழர்களிடம் ஒரு வரலாற்றுப் புதிர் கேள்வியை முன் வைக்கிறார்.

"இன்றைய இந்தியாவின் முன் உதாரணமே இல்லாத மகத்தான மானுட ஆளுமையுடையவர் யார்? (Who is the unprecedented Human personality of the present india?) கேள்விக்கு விடை தெரியாமல் தோழர்கள் திகைத்தனர். வால்ட்டர் ரூபன் பதில் சொல்லுங்கள் என வற்புறுத்துகிறார். வேறு வழியின்றி தேசத் தந்தை மகாத்மா காந்தியின் பெயரைத் தயக்கத்துடன் சொல்லவும்,

"இல்லை, இல்லை; காந்திக்கு முன் உதாரணம் கவுதம புத்தன் என்கிறார் ரூபன். மீண்டும் பதில் சொல்ல வற்புறுத்தியும், ஜவகர்லால் நேருவின் பெயரை முன்மொழிகிறார்கள்.

"இல்லை,இல்லை நேருவுக்கு முன் உதாரணம் அசோகன்" என்று சொல்லிய இந்தியத் தோழர்களின் வாயை அடைத்து விடுகிறார் வால்ட்டர் ரூபன்.

நீங்களே சொல்லுங்கள் என்று தோழர்கள் வேண்டிக்கொள்ள வால்ட்டர் ரூபனே,தான் எழுப்பிய அந்த வரலாற்றுப் புதிர்க் கேள்விக்குரிய விடையை சொன்னார்.

"இன்றைய இந்தியாவின் முன் உதாரணமற்ற பேராளுமை பெரியார் ஈ.வெ.ரா.தான்!" என்றார்.

இந்திய அறிஞர்களுக்கு அதிர்ச்சி. எப்படி? எப்படி? வால்ட்டர் ரூபனே அதற்கும் பதிலளித்தார். இந்தியச் சமூகத்தில் மேலிருந்து கீழேவரை பரவி, சமூக வளர்ச்சியை முடக்கிக் கொண்டிருக்கும் மிகப்பெரிய நோய் வருணாசிரமம் அல்லது மனுதர்மம் அல்லது வைதீகம். இந்த நோய்க்கு எதிராகத் தெளிவாக மூர்க்கமாகப் போராடுகிறவர் பெரியார் ஈ.வெ.ரா. தான்.. முன்னுதாரணமற்ற பேராளுமை இவரே என்று கூறினார் வால்ட்டர் ரூபன். -புரட்சி எழுத்தாளர் பொன்னீலன் கூறிய தகவல்

## மக்களை மடையர்களாக்கும் மதவெறி ஆட்சி - தோழர் பெரியார்

நான் சிறிது நாட்களாக மத சம்பந்தத்தைப் பற்றி தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறேன். காரணம் என்னவென்றால், இப்பொழுது பார்ப்பனர்களும், பார்ப்பன ஆதிக்கம் கொண்ட அரசும் மத சம்பந்தமானவைகளைத்தான் பிரசாரம் செய்து வருகின்றன. இந்தியாவில் ஏறக்குறைய ஒரு கோடி கிருஸ்துவர்களும், இரண்டு கோடி முஸ்லிம்களும் உள்ளனர். இவர்கள் போக மீதி உள்ள மக்கள் 27கோடியும்-இந்துக்கள் என்ற தலைப்பில் உள்ளனர். அதில் ஒரு கோடிக்கும் குறைவாகத்தான் பார்ப்பனர்களாக இருக்கலாம். அதாவது, அவர்கள் 100-க்கு இரண்டே முக்கால் பேர்கள் வீதம் உள்ளனர்.

இவ்விதமாக சுமார் 4 கோடி மக்கள் போக, மீதியுள்ள 26 கோடி மக்களையும் இப்போது பார்ப்பனர்கள் அரசியல் முதல் மற்றெல்லாத் துறைகளிலும் சர்வாதிகாரம் கொண்ட முறையில் ஆண்டு ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். நம்மவர்கள் யாராகிலும் அய்க்கோர்ட் நீதிபதி, அமைச்சர் போன்றவர்களாக இருந்த போதிலும் - அவர்கள் பார்ப்பனர்களால் இயற்றப்பட்ட, பார்ப்பன ஆதிக்கச் சட்டத்திற்குத்தான் உட்பட்டு நடக்க வேண்டும்.

இப்பொழுதுள்ள இந்திய அரசியல் சட்டமும் சிறப்பாக, இந்திய நீதி(இந்து லா) சட்டமுமே-மநுதர்ம சாத்திரம்தான். அதாவது, இதை ஆதாரமாகக் கொண்டுதான் அனைத்தும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

அரசாங்கம் வாயளவில் - சாத்திரமில்லை, சாதி வேற்றுமையில்லை, மக்கள் யாவரும் ஒன்று என்று பேசுமே தவிர, காரியத்தில் எதை எடுத்துக் கொண்டாலும், சாத்திரப்படி என்றும், மதத்தின் காரணமாக என்றும் கூறும். வெளிப்படையாக மக்களை ஏமாற்றவே இவ்விதம் கூறி, உண்மையிலேயே மதம், சாத்திரம் இவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று முயற்சித்து வருகிறது.

இங்கு யார் இந்த நாட்டை மதச்சார்பற்ற நாடு என்று சொல்ல முடியும்? இந்து மத மொழியான (வடமொழி) இந்தியாவை அரசாங்க மொழி யாகக் செய்தான் என்றால், அது வடமொழி என்ற காரணத்தால் தான். எப்படியாவது பார்ப்பானின் மொழியான சமஸ்கிருதத்துக்கு சலுகையளிக்க வேண்டுமென்றே, ஏறக்குறைய - இம்மொழிக்கு ஒற்றுமையாக உள்ள இந்தி மொழியைக் கொண்டு வருகிறார்கள்.

**உலகில் பிறவித் தோற்றங்களின் பேரால் ஒவ்வொருவரும் மங்கோலியன், ஆரியன் என்றிருப்பதைப்போல், நம் நாட்டில் பிறவியின் பேரால் நாம் திராவிடர்கள்.**

அரசாங்கத்தின் அடையாளமே (கோயில்) கோபுரம் என்பதாக வைத்துள்ளனர். இவை யாவும் மதத்தையும், கடவுளையும் காப்பாற்ற ஏற்படுத்தப் பட்டவை தான்.

எனவே, வர்ணாசிரம தர்மத்தைக் காப்பாற்ற, அரசாங்கமும் உடந்தையாக இருக்கிறது. ஒரு நாட்டில் உள்ள மக்களை அடிமைகளாகவும், முட்டாள்களாகவும் செய்ய வேண்டுமானாலும்-முதலில் அங்குள்ள மதத்தைக் காப்பாற்ற வேண்டும். பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பது, அரசியல் பார்ப்பனத் தந்திரம். வேறு எவ்வித வழியிலும் மக்களை மடையர்களாகவும்-அடிமைகளாகவும் செய்ய முடியாது என்று உணர்ந்து கொண்ட அரசாங்கம், இன்று இங்குள்ள இந்து மதத்தை மிகவும் கவனமான முறையில் பல வழிகளிலும் காப்பாற்றி வருகிறது.

இந்து மதம் என்பது, உலகத்தில் உள்ள எல்லா மதங்களையும் விட 1ஆம் நெம்பர் பித்தலாட்டம் கொண்ட மதம். மற்ற மதங்களைப்போல் இதற்கு ஒருவித ஆதாரமும் கிடையாது. முஸ்லிம் மதம் என்றால்-அது எப்பொழுது தோன்றியது; யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பனவற்றிற்கு சரித்திர சம்பந்தப்பட்ட பூரண ஆதாரங்கள் உண்டு. இவ்விதமே கிருஸ்த்துவமும், சீக்கியமும் ஆதாரங்களைக் கொண்டுள்ளன. ஆனால்,இந்து மதம் என்பது எப்பொழுது தோன்றியது;யாரால் தோற்றுவிக்கப் பட்டது என்ற கேள்விக்கு விடையே கிடையாது.

ஆனால், உண்மையிலேயே சரித்திர ஆதாரங்களைக் கொண்டுள்ள நம் திராவிடமும், திராவிடன் என்ற உண்மைகள், நம் சமயக் கோட்பாடுகள் என்பவை மறுக்கப்படுகின்றன. உலகில் பிறவி தோற்றங்களின் பேரால் ஒவ்வொருவரும் மங்கோலியன், ஆரியன் என்றிருப்பதைப்போல், நம்நாட்டில் பிறவியின் பேரால் நாம் திராவிடர்கள்.

எப்படி நாய் வர்க்கத்திலும் ராஜபாளையம், கோம்பை என்றும், குதிரை வர்க்கத்திலும் வேதாரணியம், காங்கயம் என்றும் பிறவி அடையாளத்தின் பேரால் பெயர்கள் உள்ளனவோ, அதேபோல் நம் பிறவியின் பெயரால் திராவிடர்கள். வசிக்கும் நாடு திராவிட நாடு. பேசும் மொழி தமிழ் என்பதால் தமிழ்நாடு என்றும், தமிழர் என்றும் சொல்லுகிறோம்.

இவ்வித ஆதாரங்களே தவிர, மற்ற பூணூல் போடுவதாலும், பஞ்சகச்சம் கட்டுவதாலும், உச்சிக் குடுமி வைப்பதாலும், சாம்பல், மண் பூசுவதாலும் என்ற அர்த்தமற்ற ஆதாரங்களைக் கொண்டும் நாங்கள் கூறவில்லை. இதை அரசாங்கம் உணர்ந்தாலும், இவ்வித திராவிடம், திராவிடன் என்ற பெயர்களைப் பொது இடங்களில் பயன்படுத்தக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. ஆனால், ஆதாரமற்ற இந்து மதமும்-வேதங்களும் இன்று நிலைத்து நிற்கின்றன.

- 10.10.1954 அன்று சென்னையில் ஆற்றிய உரை. விடுதலை 12.10.1954

நன்றி: தந்தை பெரியார் 135ஆம் ஆண்டு பிறந்தநாள் ‘விடுதலை‘ மலர், பெரியார் ஒரு சகாப்தம். ஏன்? எப்படி? அறிஞர்கள் பதில் -திராவிடர் கழக வெளியீடு.

நா.சுகந்தி




# புதிய பாடத்திட்டம்: நல்ல மாற்றமே!

தமிழ்நாடு பாடத்திட்டம்- கடந்த பனிரெண்டு ஆண்டுகளில் பலவித விமர்சனங்களை எதிர்கொண்டு வந்த வேளையில், 2018 - 2019 ஆம் ஆண்டு ஒன்பதாம் வகுப்பு மற்றும் பதினோறாம் வகுப்புப் பாடத்திட்டத்தில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பற்றி சுருக்கமாய் விவரிப்பது அவசியமான ஒன்றே!

புதிய கல்வி ஆண்டில், புதிய வடிவில், வண்ண மயமாய், கண்டவுடன் பக்கங்களைப் புரட்டத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. நமது மாநிலப் பாடத்திட்டம் பற்றி, காலம் காலமாய் எதிர்க்கருத்துகள் வந்து கொண்டிருந்தபோது, வல்லுநர்குழு உண்மையான கவனத்துடனும், மிகுந்த சீர்மையுடனும், நன்கு திட்டமிடப்பட்டு பயன் பெறும் வகையில் வடிவமைத்திருக்கிறது. மொழிப் பாடங்கள், அறிவியல், கணிதம், சமூகஅறிவியல், கணினிஅறிவியல் மற்றும் தொழிற்பாடப் பிரிவுகளில் பொருளியல், வணிகவியல், கணக்குப் பதிவியல், வரலாறு இன்னும் பிற பல பாடங்களும் புதிய வடிவம் பெற்று உள்ளன.

பாடப் புத்தகத்தின் சிறப்புகளில் முதலாவதாய்க் கூறவேண்டியது முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட கருத்துகள், கோட்பாடுகள், அளவீடுகள், எண்ணுருக்கள், படங்கள், வரைபடங்கள் என ஒரு பாடப் புத்தகத்தின் அனைத்துக் கூறுகளும் மேம்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் வெறும் கருப்பு, வெள்ளையாய் எழுத்துக்கள் மட்டும் இல்லாமல் வண்ண வண்ணமாய் பெட்டிச் செய்திகள், தனித்துக் காட்டப்பட்ட முக்கிய சொற்கள், சமன்பாடுகள், விதிகள் என்று படித்தல் அனுபவத்தை இனிமையாக்கும் வகையிலும், ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும் உள்ளன.

மேலும் விரைவுத் தகவல் குறியீடுகள் (QR Code) ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. ஒளி - ஒலிப்படங்கள் தீக்ஷா எனும் செயலியுடன் இணைக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேலும் மேலும் சிறப்புறச் செய்கிறது. அது மட்டுமில்லாது இணையதள இணைப்புகளும், பிற தகவல் பெறும் புத்தகங்களும் ஒவ்வொரு பாடமுடிவிலும் தரப்பட்டுள்ளன. பிற மாநிலப் பாடத்திட்டங்களோடும் மத்திய பாடத்திட்டத்தோடும் (NCERT) ஒப்பிடுகையில், நமது பாடத்திட்டம் மிக மிக சிறப்பாகவே உள்ளது.

ஒவ்வொரு பாடத்தின் பின் வினாக்கள், ஒரு மதிப்பெண், அதாவது ஓரிரு சொற்களில் விடையளித்தல், விரிவாக விடையளித்தல், பாடக்கருத்துக்களின் அடிப்படையில் சிந்தித்து விடையளித்தல் என பிரிக்கப்பட்டுள்ளன. பதினோறாம் வகுப்பில் போட்டித் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு உதவும் வகையிலும் வினாக்கள் தனியாக பின்னிணைப்பாக வழங்கப் பட்டுள்ளன. செய்முறைப் பகுதிகளையும் பாடப் புத்தகத்திலேயே பின்னிணைப்பாகத் தரப்பட்டு பயன்பெறும் வகையில் புத்தகங்கள் சிறப்பாகவே உள்ளன.

ஆயினும், புத்தகத்தின் பக்கங்களின் எண்ணிக்கையும் அளவையும் காணும்போது ஆசிரியர்களும் மாணவர்களும் சற்று மலைப்புறும் வகையில்தான் இருக்கிறது. பெரும்பாலான ஆசிரியர்களின் கருத்து என்னவென்றால் அருமையான புத்தகம், அனைத்துப் பாடப் பொருள்களும் மிக மிக விரிவாகவும், போதும் எனக்கூறும் அளவிற்கு எடுத்துக் காட்டுகளுடனும் தரப்பட்டுள்ளன. மாணவனின் சிந்திக்கும் திறனைத் தூண்டும் வகையில் வினாக்களும் உள்ளன.

ஆனால், இத்தனை பாடங்களையும் குறிப்பிட்ட கால அளவிற்குள் கற்பித்து, பயிற்சி அளிப்பது என்பது சற்றுக் கடினமே என்கின்றனர். நேரம் போதாது என்பதின் மறைமுகப்பொருள் என்ன வென்றால், ஒரு ஆசிரியராக எனது பார்வையில், மாணவர்களிடம் கருத்துக்களை விளக்கிக் கூறிப் புரிய வைப்பதோடு, தேர்வுக்குத் தயார்படுத்துதலும் எங்களையே சாரும். இவற்றைக் கருதுகையில் போதுமான நேரத்தை சிறப்பு வகுப்புகள் மூலமே பெறமுடியும். செயல் படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களே இப்பாடத்திட்டத்தை ஒரு சுமையாகக் கருதச் செய்கிறது.

நடைமுறைச் சிக்கல்கள் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், மாணவர்களது கற்றல்திறன் வேறுபாடு ஆகும். அடுத்தடுத்த வகுப்புகளுக்குச் செல்லும்போது முந்தைய வகுப்புகளில் கற்ற கருத்துக்களை 35% மாவது நினைவில் வைத்து இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், தேர்ச்சி மதிப்பெண் 100 க்கு 35 என அறிஞர் குழுக்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சில மாணவர்கள் இன்னும் மேல்நிலை வகுப்புகளில் கூட வாசித்தல் குறைபாடுகளுடன் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் அவர்களது ஆரம்பக் கல்வியில் ஆசிரியர் - பெற்றோர் பங்கு என்பது முக்கியமான காரணி. இதில் ஏற்படும் குறைபாடுகளே மேல்நிலைக் கல்விவரை தொடர்கிறது. பாடப்புத்தகங்களைத் தாண்டிய வாசித்தலும், நல்ல தமிழ்ப் பேச்சுக்கள் (மேடைப்பேச்சு, பட்டிமன்றம் முதலியன) கேட்கும் பழக்கமும் மாணவர்களிடையே குறைந்து வருகின்றது. இதனால் அவர்களுக்குப் பாடப் பகுதியிலும் சொற்றொடர்களைப் புரியவைக்க - சொற்களை அறிமுகப்படுத்த அதிகநேரம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

அரசுப்பள்ளி ஆசிரியராக எனது அனுபவத்தில் கூறவேண்டியது, கூற விரும்புவது, மாணவர்களது வாழ்க்கைச்சூழல் அவர்களது கற்றல் செயல்பாட்டில் தடைகளை ஏற்படுத்துகிறது. மேலும் அனைவரும் அறிந்த ஒன்று இக்கால கட்டத்தில் அவர்களது கவனத்தை திசைதிருப்பும் ஊடகங்களின் ஆக்கிரமிப்பும், கற்றலில் தடையை ஏற்படுத்துகிறது. இவற்றையெல்லாம் விடுத்துப் பார்த்தால், தற்போதைய பாடத்திட்டமாற்றம் கற்றல் - கற்பித்தலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதின் தொடக்கமே எனக்கூறுவேன்.




## என்ன தமிழ்த்தாய் வாழ்த்து?

தமிழ்த்தாய் வாழ்த்து என்று சொன்னார்கள். என்ன தமிழ்த்தாய் வாழ்த்து? தமிழ்த்தாய் இந்நாட்டில் நமக்குத் தெரிய 3000 ஆண்டுகளுக்கு மேலிருக்கிறாள். அவள் இவ்வளவு நாளாக இருந்து உங்களுக்குச் செய்தது என்ன? ஆசிரியர் சொல்லிக் கொடுக்காமல் 'அ' வருமா என்று கேட்கிறேன்.

திராவிட இயக்கம் தோன்றுகிறவரை, தமிழ்த்தாய் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இருந்தும், நீங்கள் 100க்கு 5 பேர்தான் படித்திருந்தீர்கள். தமிழ்த்தாயால் உங்களைப் படித்தவர்களாக்க முடியவில்லையே! திராவிட இயக்கம் தோன்றிய பின் தானே இந்நாட்டில் கல்வி வளர்ச்சியடைந்தது? அறிவோடு நீங்கள் நன்றி காட்ட வேண்டுமானால், உங்களுக்குக் கல்வி கொடுத்தவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

நம் மதம் சொல்வது என்ன என்றால், கீழ்ச்சாதிக்காரன் (சூத்திரன்) படிக்கக் கூடாது என்று சொல்கிறது. யார் இந்து என்று தங்களை ஒப்புக் கொள்கின்றார்களோ, அவர்கள் அத்தனை பேரும் பார்ப்பானுக்கு வைப்பாட்டி மக்கள்தானே! தாய்மார்கள் அத்தனை பேரும் வைப்பாட்டிகள் (சூத்தரச்சிகள்) தானே? இந்த நிலையைப் போக்கத் தமிழ்த்தாய் செய்தது என்ன?

நம் இலக்கியங்கள் என்பவற்றில் ஒன்றுகூட மனித அறிவை வளர்க்கக் கூடியதாக, மனித சமுதாயத்தை வளர்ச்சியடையச் செய்யக் கூடியதாக இல்லை என்பதோடு, மக்களின் மூடநம்பிக்கையை முட்டாள் தனத்தை வளர்க்கக் கூடியதாக இருக்கின்றன. இன்றைக்கு உலகில் காட்டுமிராண்டிகளாக, அறிவற்றவர்களாக, இழிமக்களாக இருப்பவர்கள் நாம்தான் ஆவோம்.

முதலில் ஆசிரியர்கள் திருந்த வேண்டும். ஆசிரியர்கள் மூடநம்பிக்கைக்காரர்களாக இருப்பதாலேயே, அவர்களிடம் படிக்கிற மாணவர்கள் மூடநம்பிக்கைக் காரர்கள் ஆகின்றனர். ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப் பதில் முதன்மையாகப் பார்க்க வேண்டியது, அவர்கள் பகுத்தறிவுவாதியா என்பதுதான்.

நமது இலக்கியங்கள் அத்தனையும் குப்பைகளே யாகும். அந்தக் காலத்திற்கு அவை உயர்ந்தவையாக இருந்திருக்கலாமே ஒழிய, இன்றைக்குள்ள அறிவிற்கு அவை ஏற்புடையவை அல்ல. இலக்கியங்கள் என்றால், அவை எதிர்காலத்தைப் பற்றிய வளர்ச்சியினைக் குறிப்பிடக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இலக்கியங்கள் ஏதும் நம்மிடம் இல்லை.

-27.8.1971ம் தேதி மணப்பாறையில் ஆற்றிய உரை ,
தலித் முரசு ஏப்ரல் 2009

தோழர் வாசுகி

# நூல் அறிமுகம்

திராவிட இயக்க வரலாற்றில் - பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் முன்னோடிகளாய் இருந்த பெண்கள் எத்தகைய வீரம் செறிந்த போராட்டங்களை நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள் என்பதை அறிந்துகொள்ள இந்நூல் உதவுகிறது. இந்நூலை கருஞ்சட்டைப் பெண்ணான ஓவியா எழுதியிருப்பது சிறப்பானது.

இந்நூலுக்கு திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, திராவிட முன்னேற்றக் கழக மகளிரணிச் செயலாளர் கனிமொழி, திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் அருள்மொழி ஆகியோர் அணிந்துரை எழுதிச் சிறப்பித்துள்ளார்கள். இந்நூல் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் முதல் நூலாக வெளிவருவது கூடுதல் சிறப்பாகும்.


இந்நூலின் ஆசிரியர் தோழர் ஓவியா அவர்கள் ஐந்தாவது தலைமுறையாகத் தொடர்ந்து பெரியாரியலைக் கடைபிடிக்கக் காரணமான முதல் தலைமுறையாகிய - ஓவியாவின் தந்தைவழிப் பாட்டி கருஞ்சட்டைப்பெண் காந்தியம்மாளுக்கு இந்நூலை எழுதியதன் மூலம் பெருமை சேர்த்துள்ளார். அதேபோல் இந்நூலின் 95 ஆம் பக்கத்தில்

“காந்தியம்மாள் போன்று மேடைக்கு வராமல் அரங்குகளை நிரப்பிய பெண்மணிகள் மதுரை ஜெகதாம்பாள் போன்று இன்னும் ஏராளம் உண்டு”

என்று குறிப்பிட்டுள்ளார். அந்த ஜெகதாம்பாள் என்னுடைய தாயார் என்பதையும் அவர் வழியாக நாங்கள் தொடர்ந்து மூன்று தலைமுறையாகப் பெரியாரியலைக் கடைபிடித்து வருகிறோம் என்பதையும் பெருமையுடன் இக்கட்டுரையில் பதிவு செய்கின்றேன்.

முதல் அத்தியாயத்தில், தாய்வழிச் சமூகமாக பெண்ணின் தலைமையில் வாழ்ந்த சமூகம், எப்படி பெண்களை வீட்டுச் சிறையில் அடைத்தது என்பதிலிருந்து நூலைத் தொடங்குகிறார் தோழர் ஓவியா. உலக அளவில் பெண்கள் நிலை குறித்தும், இந்தியாவில் பெண்களின் நிலை குறித்தும் இந்நூல் பேசுகிறது. இந்தியாவில் பெண்களின் நிலை என்றால் ஒரு வயதுப் பெண் குழந்தைகூட விதவையாக இருந்திருக்கிறது.

அதேபோல் ஈழவப் பெண்கள் உள்ளிட்ட சில ஜாதியைச் சேர்ந்த பெண்கள் மேலாடை அணியத் தடை செய்யப்பட்டிருந்தார்கள். இதைவிட மோசமாக, தேவதாசி முறை இருந்தது. ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த பெண்கள் கல்யாணம் செய்துகொள்ள உரிமை கிடையாது. பொட்டுக்கட்டி விடுதல் என்ற பெயரில் பூசாரிகளால் பொதுவில் அனுபவிக்கக்கூடிய பொது மகளிராக கோயிலில் விட்டு விடுவார்கள்.




இவ்வாறு பல கட்டுப்பாடுகளுக்குள் பெண்கள் வைக்கப்பட்டிருந்ததற்கான காரணத்தை அடுத்த அத்தியாயத்தில் குறிப்பிடுகிறார் தோழர் ஓவியா.

## தொல்காப்பியமும் மனுதர்மமும்

இவ்விரு நூல்களும் பெண்களை எவ்விதமாகப் பார்த்தது என்பதைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார் நூலாசிரியர் ஓவியா. தொல்காப்பியத்தில் பேணப்படும் பெண்ணடிமைத் தனம் என்னவென்றால்,

“ஒரு பெண் ஒரு நாளும் தன்னைப்பற்றி புகழ்ந்து ஆண் முன்னால் பேசக்கூடாது, ஒரு பெண் தனக்குக் கூடல் தேவைப்பட்டாலும், அதனால் அவள் துன்பப்பட்டாலும் அதனைத் தனது தேவையாகக் காதலனிடம் கேட்கக்கூடாது. மேலும் பரத்தையரைச் சகித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்”

தொல்காப்பியத்தின் நிலையே இப்படி என்றால் மனுதர்மத்தின் நிலை எப்படி இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடியும் என்கிறார்.

பெண்ணை ஒரு பொருட்டாக மனுதர்மம் எடுத்துக்கொள்ளவில்லை. பெண்ணுக்கு அடிப் படையாக தன்மனம்போல் காரியம் செய்கிற உரிமை

கிடையாது. ஒருபோதும் பெண்ணுக்குச் சுதந்திரம் கொடுத்துவிடாதே என்பதை மனுதர்மம் வலிந்து சொல்கிறது. ஒரு பெண் எப்படியாவது பிள்ளை பெற்றாக வேண்டும். அதையும் ஓர் ஆணையாக மனுதர்மம் விதிக்கிறது. இந்த உளவியல்தான் மக்கள் தொகைப் பெருக்கம் பெரிய பிரச்சனையாக உள்ள நாட்டில் செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள் அதிகமாக ஏற்படக்காரணம் என்கிறார் ஓவியா.

அடுத்த அத்தியாயத்தில் பெண்ணுரிமையின் பிதாமகனா காந்தியார்? என்று கேள்வி எழுப்புகிறார். ஒரு பெண் ஜாதிக்கும் மதத்துக்கும் கட்டுப்பட்டு இருக்கவேண்டும் என்பதில் எந்த மாற்றத்தையும் விரும்பாத காந்தியார் பெண்கள் படிக்கவேண்டும் என்கிற கோரிக்கையை முன் வைக்கிறார். இந்து மதத்தை ஆதரித்துக்கொண்டே எப்படி பெண் விடுதலைக்குக் குரல் கொடுக்க முடிந்தது என்று கேட்கிறார் ஓவியா.

அடுத்து பெண்ணுரிமை குறித்து காந்தியாரின் புரிதலையும், தந்தை பெரியாரின் புரிதலையும் எடுத்துக்காட்டி, இருவருக்கும் உள்ள பெரிய இடைவெளியை எடுத்துக் காட்டுகிறார்.

அடுத்து குடும்பத்திலிருந்து தொடங்கினார் என்ற தலைப்பில், எந்த நடைமுறையைப் பின்பற்றினாலும் பெரியார் தன் குடும்பத்திலிருந்தே தொடங்குகிற பண்பைப் பெற்றவராக இருந்ததைக் குறிப்பிடுகிறார். பட்டுப்புடவை உடுத்துவதையே வழக்கமாகக் கொண்டிருந்த தன் தாயாரைக் கதராடை உடுத்த வைத்தவர் பெரியார். அதேபோல் தன் மனைவி நாகம்மையார், சகோதரி கண்ணம்மாள் ஆகியோரைக் கள்ளுக்கடை முன்னால் சென்று உட்கார்ந்து மறியல் செய்ய வைத்தவர். தொடர்ந்து கருஞ்சட்டைப் பெண்கள் ஒவ்வொருவராக நமக்கு அறிமுகப்படுத்துகிறார் தோழர் ஓவியா.

## நாகம்மையார்

பெண்கள் இயக்க வரலாற்றில் முதல் முத்தாக நாகம்மையாரே திகழ்கிறார். 1924-ல் வைக்கம் போராட்டம் நடைபெறுகிறது. பெரியார் கைது செய்யப்பட்டதும் நாகம்மையார் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிறார். அப்போது காவலர்கள் நீ என்ன ஜாதி? என்று கேட்கிறார்கள். ஏன் நான் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவள் இல்லையென்றால் என்னை மட்டும் உள்ளே விடலாம் என்று நினைக்கிறீர்களா? நான் ஜாதி சொல்ல முடியாது என்கிறார். இங்குதான் பெரியார் கொடுத்த பயிற்சியை பார்க்கமுடிகிறது என்று வியக்கிறார் ஓவியா.

## கண்ணம்மாள்

நாகம்மையாரும், பெரியாரின் உடன் பிறந்த தங்கை கண்ணம்மாளும் சேர்ந்துதான் இயக்க வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். பெண் பத்திரிகையாளராக இருந்து சிறை சென்ற முதல் பெண் இந்திய வரலாற்றில் கண்ணம்மாள்தான்.

## இராமாமிர்தம் அம்மையார்

தேவதாசி குலத்தில் பிறந்த இவர் 1925 இல் மாயவரத்தில் “பொட்டறுப்பு மாநாடு” நடத்தி பல தேவதாசிப் பெண்களின் பொட்டுகளை அறுத்தெறிந்ததோடு அதே மேடையில் பல பெண்களுக்குத் திருமணமும் நடத்தி வைக்கிறார். இதனால் பல எதிர்ப்புகளைச் சந்திக்கிறார். ஒரு முறை மேடையிலேயே நான்குபேர் இவரது தலைமுடியை அறுத்து எறிகிறார்கள். ஒரு கிராமத்தில் இவருக்கு பாலில் விஷம் கலந்து கொடுக்கப்படுகிறது. இவ்வளவு வன்முறைகளையும், எதிர்ப்புகளையும் எதிர் கொண்டவர் இராமாமிர்தம் அம்மையார்.

## குஞ்சிதம் குரசாமி

இவர் பள்ளி இறுதித்தேர்வில் பள்ளியின் முதல் மாணவியாக, தங்கப்பதக்கம் பெற்றவர். பெரியாரின் பெண் விடுதலைக் கொள்கைகளை ஏற்று, தாலி அணிய மறுத்ததோடு பொட்டு வைப்பதையும் நிறுத்திவிட்டார். இதனால் இவர் தேசிய மகளிர் பள்ளியின் ஆசிரியர் பணியை இழந்தார்.

## மீனாம்பாள் சிவராஜ்

தமிழ்நாட்டில் வர்த்தக ரீதியாக முதன்முதலாக கப்பலோட்டிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரியாரிடம் மிகவும் அன்பு பாராட்டியவர். இவரது ஆளுமையைக் குறிப்பிட வேண்டுமானால், “காங்கிரஸ்காரர்கள் அழைத்து நான் எப்படி சட்டம் எழுதும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது?” என்று அம்பேத்கார் தயங்கியபோது, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தி அதில் வெற்றி பெற்றவர் மீனாம்பாள் அம்மையார்.

## வீரம்மாள்

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த இவர், கல்வியில் ஆர்வம் கொண்டு, இவராகவே பிற பிள்ளைகளுடன் பள்ளிக்குச் சென்று, தொடக்கக்கல்வி முடித்தபின் சொந்த ஊரில் உள்ள பள்ளியில் இவரைச் சேர்த்துக்கொள்ள மறுத்ததால் எட்டு கி.மீ தொலைவிலுள்ள பள்ளியில் கல்வி கற்கச் செல்கிறார். அதுவும் வீட்டு வேலைகளையும் முடித்துவிட்டு. இதைக் கேள்விப்பட்ட பெரியார் திருச்சிக்குச் செல்லும் போதெல்லாம் இவரை அழைத்து ஊக்கமளிக்கிறார். திருமணமானவுடன் கணவருக்கு வேறு வாழ்க்கை இருப்பதை அறிந்து அவரை விட்டுப் பிரிந்து அதிலிருந்து வெள்ளை உடை அணிந்து பொதுமக்களுக்காக சேவை செய்து வாழ்வேன் என்று உறுதியேற்கிறார். 1943-ல் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளியையும், 1954 இல் தமிழ்நாடு ஷெட்யூல்ட் வகுப்பு பெண்கள் நலச் சங்கத்தையும் தொடங்கி நடத்தியவர்.

## டாக்டர் எஸ்.தருமாம்பாள்:

இவர் ஒரு சித்த மருத்துவர். இருப்பினும் தமிழாசியர்களுக்கு நல்ல வாழ்நிலை இல்லை என்பதால், அவர்களது ஊதியத்தை உயர்த்தித்

தரக்கோரிப் போராடியவர். சம்பளத்தை உயர்த்தித்தராவிட்டால் ஆசிரியர்களைக் கூட்டி "இழவுவாரம்" அனுசரிப்பேன் என்று சவால் விட்டதை அடுத்து சம்பளத்தை உயர்த்தித்தர அமைச்சர் இசைகிறார். இவரது மிகச் சிறந்த ஆளுமையைக் குறிக்கும் ஒரு நிகழ்வு.

இலட்சுமி காந்தன் கொலை வழக்கில் கலைவாணருக்கு நீதிமன்றத்தில் தண்டனை உறுதியாகிறது. அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியில் அப்பீல் செய்ய லண்டன் பிரிவியூ கவுன்சிலுக்குப் போகவேண்டும். கலைவாணர் மனைவி டி.ஏ.மதுரம், தரும்மாம்பாளிடம் முறையிடுகிறார். தருமாம்பாள் பலபேரைச் சந்தித்து, நிதி திரட்டி அப்பீல் செய்து விடுதலை பெற்றுத் தருகிறார்.

## நீலாவதி அம்மையார்

திராவிட இயக்க ஏடுகளான திராவிடன், குடிஅரசு, ஊழியர் முதலிய பத்திரிகைகளில் தீவிரமான அரசியல் கருத்துக்களைப் பதிவு செய்தவர். இவருக்கும் இராமசுப்ரமணியனுக்கும் சாதி மறுப்புத் திருமணம் ஏற்பாடானது. திருமணத்தன்று பெரியார் திருமணத்தை மணமக்களே நடத்திக் கொள்ளுமாறு அறிவிக்கிறார். மணமக்கள் இருவரும் திருமண உறுதிமொழி ஏற்கிறார்கள். இவர்களது திருமணம் குறித்த விவாதத்தின் போதுதான் "பெண் ஏன் அடிமையானாள்?" நூல் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பல கருஞ்சட்டைப் பெண்களின் ஆளுமைத் திறனையும், போராட்ட குணத்தையும் பற்றித் தெளிவாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

## மலர் முகத்தம்மையார்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைபட்டவர். "தெருவிளக்கு" என்னும் இதழின் ஆசிரியரான வேலூரர் மாணிக்கத்தின் துணைவியாரே தாமரைக்கண்ணி அம்மையார். இவர் வேலூரில் நடைபெற்ற தமிழ்ப்பெண்கள் மாநாட்டை தொடங்கி வைத்தவர். சிறந்த நாவலாசிரியர்.ஆங்கிலப் புலமை மிக்கவர்.

## பொற்செல்வி

இளமுருகுவின் தந்தை, தாய் இருவரும் நீதிக்கட்சியில் இருந்தவர்கள். சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள் பற்றி ஒருவர் கேட்டபோது பெரியார் பொற்செல்வி அவர்களை விளக்கமாக பதில் சொல்லச்சொல்லி இரசித்திருக்கிறார்.

## சத்தியவாணிமுத்து அம்மையார்

கருஞ்சட்டைப் பெண்களில் சிறந்த ஆளுமையாகத் திகழ்ந்த சத்தியவாணி முத்து அம்மையார். இவர் உலகம் முழுவதும் உள்ள பெண்கள் இயக்கங்களின் வரலாற்றைத் தொகுத்து உரையாற்றியவர். "அன்னை" என்னும் இதழின் ஆசிரியர். குலக்கல்வித் திட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் நிறைமாத கர்ப்பிணியாகப் பங்கெடுத்தவர். 1967 இல் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவர்.

## மஞ்சுளாபாய்

கணவனை இழந்த இவர், பெரியாரின் முதன்மைத் தொண்டராக அவர் செல்லுமிடங்களுக் கெல்லாம் உடன் சென்றவர். பெரியார் இவருக்கும் கானாடுகாத்தான் வை.சு.சண்முகம் என்பவருக்கு சாதிமறுப்பு மற்றும் விதவைத் திருமணத்தை நடத்தி வைக்கிறார். இணையர்கள் இருவரும் வாழ்நாள் முழுவதும் இவ்வாறான திருமணங்களை நடத்தி வைப்பதையே தங்களது பணியாக ஏற்றுக் கொண்டனர்.

## மிராண்டா கஜேந்திரன் பரிபூரணத் தம்மையார்

திராவிடர் கழகப் பேச்சாளர்களில் சிறப்பான இடம் பெற்றவர். 29.04.45 இல் திராவிடர் கழக மாநாட்டில் கொடிஏற்றி வைத்து, முதன்முதலாக "அடைந்தால் திராவிட நாடு,இல்லையேல் இடுகாடு" என்னும் முழக்கத்தை முன் வைத்தவர்.இரெ.இலட்சுமி அம்மையார். 1957-ல் சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் 3 மாதக் கடுங்காவல் தண்டனையும், 1960-ல் தேசப்பட எரிப்புப் போரில் ஒன்றரை மாதச் சிறைத் தண்டனையும் அஞ்சாமல் ஏற்றவர். பெரியாரால் இவருக்கு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பு. அதேபோல் பரிபூரணத் தம்மையாரும் சாதிஒழிப்பு சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் 6 மாதச் சிறைத்தண்டனை பெற்றவர்.

## சிவகாமி அம்மையார் அலமேலு அம்மையார்

பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலான "தமிழர் தலைவர்" என்னும் நூலை எழுதிய சாமி சிதம்பரனாரின் துணைவியாராகிய சிவகாமி அம்மையார் மிகத் திறமையான எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். தன்னுடைய கணவரின் நூல்களை வெளிக்கொண்டு வந்து பதிப்பாசிரியராகவும் செயல்பட்டவர். பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரின் துணைவியார் அலமேலு அப்பாதுரையார் இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றவர்.

## அன்னை மணியம்மையார்

மணியம்மையார் அளவுக்கு ஒரு மிகப்பெரிய வசவுச் சொற்களை, அபவாதத்தைச் சந்தித்த ஒரு பெண் தலைவர் எந்த இயக்கத்திலும் இருக்க முடியாது. திருமணம் குறித்து அம்மாவின் கருத்துக்களை நாம் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிறார் ஓவியா. அதாவது,

"சமையல் வேலைக்கும் குடும்ப நிர்வாகத்திற்கும் என்று படித்த பெண்களைக் கல்யாணம் செய்வார்களேயானால் கண்டிப்பாக படித்த பெண்கள் கல்யாணத்தை மறுத்துவிட வேண்டும்"

*என்று கூறுகிறார் மணியம்மையார். அதற்கும் மேலாக பெற்றோர் கட்டாயப்படுத்தினால் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என 1944 இல் மணியம்மையார் எழுதுகிறார். நாம் படிப்பது நல்ல அடிமைகளாக வாழ்வதற்கோ அல்லது மேன்மையும், விடுதலையும் பெறவா? என்று கேட்கிறார், அன்னை மணியம்மையார்.*

*ஓர் எழுத்தாளராக, போராளியாக பொது வாழ்க்கைக்கு வந்த மணியம்மையார் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, பெரியாரைக் கவனித்துப் கொள்வதையே தனது முழுநேரப் பணியாக மாற்றிக் கொண்டார். அதை அவரே "பெரியாரை சிறு குழந்தையாகவே என் மனதில் இருத்தி அக்குழந்தைக்கு ஊறுநேரா வண்ணம் பாதுகாப்பதிலேயே மகிழ்ச்சி கொண்டேன்" என்கிறார்.*

*அறிஞர் அண்ணா தலைமையில் பிரிந்து சென்றவர்கள், பிளவுக்குக் காரணமாக, பெரியார் மணியம்மை திருமணத்தை முன்வைத்தபோதும், மிகப்பெரும் பாதிப்புக்கும் அவமானத்திற்கும் ஆளானார் மணியம்மையார்.*

*சாதியைப் பாதுகாக்கும் சட்டப் பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தில் பெரியார் உட்பட 3000 பேருக்கு மேல் சிறை வைக்கப்படுகிறார்கள். சிறையிலிருக்கும் போதே மணல்மேடு வெள்ளைச்சாமி, பட்டுக்கோட்டை இராமசாமி உள்ளிட்ட மூன்று தோழர்கள் இறந்து போகிறார்கள். அதில் மணல்மேடு வெள்ளைச்சாமியின் உடலை உறவினரிடம் ஒப்படைக்காமல் சிறையிலேயே புதைத்து விடுகிறார்கள். அப்போது களத்தில் இறங்கிய மணியம்மையார், முதல்வர் மற்றும் அமைச்சர்களை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்ததோடு, உடல்களை வாங்காமல் ஓயமாட்டோம் என்று போராட்டம் நடத்தி உடல்களைப் பெற்றதோடு மட்டுமில்லாமல், ஊருக்குள் ஊர்வலமாக உடல்களை எடுத்துச் செல்லக் கூடாது என்று, அரசு அனுமதி மறுத்தபோது, அரசை மீறி ஊருக்குள் ஊர்வலத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்.*

*1973 இல் பெரியாரின் மறைவுக்குப்பின் இயக்கத்தின் பொறுப்பு மணியம்மையாருக்கு வருகிறது. இது எப்படிப்பட்ட பொறுப்பு என்றால், ஒரு முழுமையான கலாச்சார எதிர்ப்பு, ஆளும் அடக்குமுறை ஆட்சிக்கு எதிரான இயக்கத்திற்கு ஒரு பெண் தலைவராக வந்தார் என்பதே வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய சாதனை என்று குறிப்பிடுகிறார் தோழர் ஓவியா.*

*தலைமைப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டிலேயே இராவண லீலாவை அறிவிக்கிறார் மணியம்மையார். அது குறித்து, நீங்கள் இராமலீலா நடத்துவது தென்னாட்டவராகிய எங்களை புண்படுத்துகிறது. நாம் அனைவரும் ஒரே நாட்டவர் என்றால் நீங்கள் இராமலீலா நடத்தக்கூடாது என்று பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் மடல் எழுதுகிறார்.*

*இதற்கு அவர்கள் பதில் தரவில்லை. இராமலீலா நடப்பதற்கு ஆதரவான செய்திகளே வந்து கொண்டிருக்கின்றன. அதையடுத்து பெரியார் நினைவு நாளான டிசம்பர் 24-க்கு அடுத்த நாள் இராவணலீலா நடத்தப்படும் என்று அறிவிக்கிறார். அதைக் கேள்விப்பட்ட பிரதமர் இந்திரா காந்தி மணியம்மையாருக்கு பதில் அனுப்புகிறார். இராமயணம் ஆரிய, திராவிடப்போர் என்பதெல்லாம் கிடையாது,எனவே இராவணலீலா நடத்தக்கூடாது என்று கூறுகிறார்.*

*இராவணலீலாவுக்கு முந்தையநாள் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கைது செய்யப்படுகிறார். இந்தியாவே திரும்பிப் பார்த்த ஒரு நிகழ்வாக இராவணலீலாவை முன்னெடுத்து மிக வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் அன்னை மணியம்மையார். அதேபோல் நெருக்கடி நிலை காலத்தில், வருமான வரித்துறையின் தாக்குதல் ஒருபுறமும், அரசின் ஒடுக்குமுறை மறுபுறம் என இருவழி ஒடுக்குமுறைகளை எதிர்த்து நின்று வழிநடத்திய தலைமைப் பண்பாளர் அவர். ஒரு பக்கம் போர்க்குணமிக்க தலைவரக இருந்த அதே நேரத்தில் பல நிறுவனங்களை உருவாக்கி சொத்துக்களை நிர்வகிக்கக்கூடிய தனித்திறன் பெற்றவராகவும் இருந்திருக்கிறார்.*

*அன்னை மணியம்மையாருக்குப் பின் இந்நூல் பயணிக்கவில்லை என்று குறிப்பிடுகிறார் நூலாசிரியர் ஓவியா. எனவே ஏ.பி.ஜே.மனோரஞ்சிதம் அம்மையார், திருமகள் இறையன், வெள்ளக்கோயில் இரங்கநாயகி அம்மாள், தங்கமணி குணசீலன், பார்வதி கணேசன், மீரா ஜெகதீசன், வழக்கறிஞர் அருள்மொழி, பேராசிரியர் சரசுவதி ஆகியோரைப் பற்றி இந்நூல் விவரிக்கவில்லை என்றும், "இந்நூலின் இரண்டாம் பதிப்பிலோ, அல்லது தனித் தொகுதியாகவோ அவர்களைப் பற்றி விரிவாகப் பதிவு செய்யவேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். "வீரஞ் செறிந்த போராட்டத்தை முன்னெடுத்த நமது திராவிட இயக்கப் பெண்களின் பெயர்கள் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டும்" என்ற தனது ஆவலையும் பதிவு செய்துள்ளார்.*


*இந்நூலில் கருஞ்சட்டைப் பெண்கள் எவ்வாறெல்லாம், களத்தில் இறங்கிச் செயல் பட்டார்கள் என்றும், அதுவும் அவர்கள் சுயநலத்திற் காகவோ, பெரிய பதவிகளை அடைவதற்காகவோ அல்லாமல் சமுதாயத்தில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தி மக்களை பகுத்தறிவுவாதிகளாக மாற்றுவதற்காக செயல்பட்டவர்கள் என்பதையும் விரிவாக எடுத்துரைத்திருக்கிறார் தோழர் ஓவியா. .இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டிய சிறந்த வரலாற்றுப் பதிவு இந்நூல்.*

**நூல் கிடைக்குமிடம்: கருஞ்சட்டைப் பதிப்பகம்,**
**122 / 130 என்.டி.ஆர். சாலை,**
**அரங்கராசபுரம், சென்னை - 600024**

அருகன்

# ஸ்டீபன் ஹாக்கிங்

**என்றாலே வியப்புதான்! அதுவும் பெருவியப்பு!**






21 வயதில், உடல் இயக்கங்களை மட்டுப் படுத்துகிற, குணப்படுத்த முடியாத அரிய வகை நோய் தாக்குகிறது (Amyotrophic Lateral Sclerosis, சுருக்கமாக ALS). அடுத்த சில ஆண்டுகளில் இறந்து விடுவார் என்று மருத்துவர்கள் கூறிவிடுகிறார்கள். ஆனால், தனது 77-வது வயது வரை நவீன அறிவியலின் துணையோடு வாழ்ந்து மறைகிறார். உலகப் புகழ்பெற்ற பல்வேறு அறிவியல் புத்தகங்களை எளிய மக்களுக்கும் புரியும் படி எழுதுகிறார். அவரது கடைசி நூல், அவரது இறப்பிற்குப் பின் தற்போது வெளிவந்திருக்கிறது. அவர் இறந்தபோது பாதியில் நின்றுபோன புத்தகத்தை, அவரது எழுத்துக்களிலிருந்து தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள் அவரது மகள் மற்றும் அவருடன் பணியாற்றியவர்கள். அந்த நூலைப் பற்றிய சிறு அறிமுகம் இந்தக் கட்டுரை.

**நூலின் தலைப்பு: பெரிய கேள்விகளுக்கு சிறிய பதில்கள் Brief Answers to the Big Questions**

ஹாக்கிங்கின் வாழ்க்கை வரலாற்றை, திரையில் மிகச் சிறப்பாகப் பதிவுசெய்த The Theory of Everything என்கிற படத்தின் நாயகன் எட்டி ரெட்மெய்ன் (Eddie Redmayne) நூலுக்கு அணிந்துரை எழுதியிருக்கிறார். ஐன்ஸ்டீனின் கோட்பாடு களின்படி முன்னறிவிக்கப்பட்ட ஈர்ப்பலைகளை (Gravitational Waves), 2016 இல் LIGO என்கிற அமெரிக்காவில் இருக்கும் ஆய்வு மையம் கண்டறிந்து உறுதிப்படுத்தியது. ஈர்ப்பலைகளைக் கண்டறிய உதவும் கருவியை வடிவமைத்ததில் குறிப்பிடத்தகுந்த பங்காற்றியதால் நோபல் பரிசு பெற்றவர்களுள் ஒருவர் கிப் தோர்ன் (Kip Thorne) என்கிற விஞ்ஞானி. இவர், ஹாக்கிங்குடன் இணைந்து பணியாற்றிய தனது அனுபவம் மற்றும் ஹாக்கிங்கின் அறிவியல் பங்களிப்புகள் குறித்து, சிறப்பான அறிமுகத்தை எழுதியிருக்கிறார். நூலினுள் பின்வரும் கேள்விகளுக்கு, ஹாக்கிங் தன்னுடைய பதில்களை ஒரு சில பக்கங்களில் எளிமையாகக் கொடுத்திருக்கிறார்.

1. கடவுள் இருக்கிறாரா? (Is there a God?)
2. எல்லாம் தொடங்கியது எப்படி? (How did it all begin?)
3. எதிர்காலத்தை முன்னறிவிக்க முடியுமா? (Can we predict the future?)
4. கருந்துளையின் உள்ளே என்ன உள்ளது? (What is inside a blank hole?)
5. மனிதனைப் போல உயிரினம் இந்தப் பேரண்டத்தில் இருக்கிறதா? (Is there other intelligent life in the universe?)
6. செயற்கை நுண்ணறிவு மனிதனைத் தோற்கடித்துவிடுமா? (Will artificial intelligence outsmart us?)
7. மனித குலத்தின் எதிர்காலத்தைக் கட்டமைப்பது எப்படி? (How do we shape the future?)
8. இந்தப் பூமியிலேயே நாம் உயிர் வாழ்ந்துவிட முடியுமா? (Will we survive on Earth?)
9. விண்வெளியில் குடியேற வேண்டுமா? (Should we colonise space?)
10. காலத்தில் பயணிப்பது சாத்தியமா? (Is time travel possible?)

'இந்தப் பரந்துவிரிந்த பேரண்டம் தோன்றக் காரணம் பெருவெடிப்புக் கொள்கை (Big Bang Theory)' என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்ட பொதுவான கொள்கையாகிவிட்டது. அந்தப் பெருவெடிப்பிற்கு முன்பு காலமும் இல்லை, நேரமும் இல்லை எனும்போது, பெருவெடிப்பிற்கு முன்பு கடவுள் இருந்தாரா என்கிற கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் காலமே தோன்றியிருக்க வில்லை. அதற்கு முன்பு என்று ஒன்று கிடையாது.

தென்துருவத்திற்கு எது தெற்கு? என்பதே சுருக்கமாக முதல் இரண்டு பகுதிகளுக்கான அவரது பதில். இந்தப் பூமியிலே நாம் உயிர் வாழ்ந்துவிட முடியுமா? என்ற கேள்விக்கு, ஏற்கெனவே அச்சுறுத்தும் புவி வெப்பமாதல் மேலும் அணு ஆயுதங்களால் நிகழும் அழிவுக்கான வாய்ப்புகள் பற்றி விளக்குகிறார்.

பூமியில் இருக்கும் இயற்கை வளங்கள் எப்படி வேகமாகச் சுரண்டப்படுகின்றன என்று குறிப்பிடுகிறார். அடுத்த ஆயிரமாண்டுகளில் மனிதன் விண்வெளிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தி மற்ற சூரியக்குடும்பங்களுக்குச் செல்வதை சாத்தியப்படுத்த வேண்டும் என்கிறார். இதற்கான திறன் வாய்ந்த எந்திரங்களையும் Robo-க்களையும் மனிதன் உருவாக்குவான் என்று முன்னறிவிக்கிறார். மனிதனே மரபணு மாற்றங்கள் மூலம் தன்னை இன்னும் அதிக அறிவும் வல்லமையும் படைத்தவனாக மாற்றிக்கொள்வான் என்றும் கணிக்கிறார்.

பரந்து விரிந்த பிரபஞ்சத்தில், பூமியில் மட்டுமே வாழ்வது என்பது எந்த வாய்ப்புகளுமற்ற தன்னந்தனித் தீவிலிருந்து தப்பிக்க நினைக்காமலே இருப்பது போன்றது. அருகிலுள்ள கோள்களுக்கும், அதையும் தாண்டி நமக்கு அடுத்த சூரியக் குடும்பத்திற்குமே சென்றாக வேண்டியது மனித குலத்தின் கட்டாயத் தேவை. அடுத்த சில பத்தாண்டுகளில் செவ்வாயில் மனிதன் குடியேறுவது நிகழ்ந்துவிடலாம். சில நூற்றாண்டுகளில், நமது சூரியக்குடும்பத்தின் மற்ற கோள்களுக்கும் மனிதர்கள் பயணம் செய்வது சாத்தியப்படலாம். அடுத்த ஐந்து நூற்றாண்டுகளில் நமது சூரியனுக்கு அருகிலிருக்கும் அடுத்த சூரியக் குடும்பத்திற்கு செல்வது கூட நடந்துவிடும் என்கிறார்.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) எப்படி மனிதனின் வாழ்க்கை முறையை இன்னும் சில பத்தாண்டுகளில் புரட்டிப் போடவிருக்கிறது, அதற்கு மனிதன் தன்னைத்தானே எப்படி தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விளக்குகிறார். நூறாண்டுகளுக்கு முன், ஐன்ஸ்டைன் என்கிற மாமேதை, தனது காலத்து அறிவியலில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சிந்தனை செய்ததன் விளைவே, ஈடு இணையற்ற அவரது சார்பியல் தத்துவங்கள். இந்தப் பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது என்பதற்கு முற்றிலும் புதிய பார்வையை அவை அளித்தன. அவர் அடுத்து வந்தவர்களுக்கு புதிய பாதையைக் காட்டிச் சென்றார்.

இன்று அதைவிட அதிகம் அறிந்தவர்களாக நாம் இருக்கிறோம். நம் முன்னே உள்ள புவி வெப்பமாதல், இயற்கை வளங்கள் அருகிவருதல், செயற்கை நுண்ணறிவு போன்றவை ஏற்படுத்தும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும். இன்னும் சில காலத்தில் பல்வேறு புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியிருப்போம்; இந்தப் பிரபஞ்சம் தோன்றும்போது என்ன நிகழ்ந்தது என்பதைக் கூட நாம் கண்டறிந்துவிடுவோம்; விண்வெளிகளுக்கு ‘ரோபோ’க்களை அனுப்பிக்கொண்டிருப்போம். “எனவே, இங்கு பூமியில் உங்கள் பார்வையை நிலைகொண்டுவிடாமல், வானத்தை நோக்கிப் பாருங்கள்” என்று முடிக்கிறார்.

நூலைப் படித்து முடித்த பின்பு, தற்போதைய இந்தியப் பின்னணியில் விவாதப்பொருட்களாக இருக்கும் பின்வரும் கேள்விகளை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை!

## இந்திய மக்களின் பெரிய கேள்விகள்

1. ஜாதகம் பொருந்திப் போகுதா?
2. நல்ல நேரம் எப்ப ஆரம்பிக்குது?
3. என்ன தோஷத்துக்கு என்ன பரிகாரம்?
4. பில்லி சூனியம், ஏவல் உண்மையா?
5. என்ன நாட்களில் என்னென்ன நோன்பு கடைபிடிக்க வேண்டும்?
6. ஷீரடி சாய் பாபா, கிருஷ்ணரோட அவதாரமாமே?
7. (காதலிக்கிற) பொண்ணு / பையன் எந்த சாதி?
8. நீங்க நான் வெஜ் சாப்புடுவீங்களா?
9. இந்த மாடு இறைச்சிக்குப் போகுதா?
10. அந்த மதத்தைப் பற்றி ஏன் பேச மாட்டேங்குறீங்க?

உலகம் முன்னோக்கிப் போகும்போது, பெரும்பாலான நம் இந்திய மக்கள் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்!

## அறிவியலுக்கு ஹாக்கிங்கின் முக்கியமான பங்களிப்புகள்:

இடம் - காலம் *(Space-Time)* இவற்றிற்கு, தொடக்கம் உண்டு. பிரபஞ்சம் தோன்றக் காரணமாக இருந்த பெருவெடிப்புக்கு *(Big Bang)* முன்பு இடமும் இல்லை காலமும் இல்லை என்று கணிதச் சமன்பாடுகளையும் *(equations)* தேற்றங்களையும் *(Theorems)* கொண்டு நிறுவியது (ரோஜர் பென்ரோஸ் என்ற அறிஞருடன் இணைந்து அவர் வெளியிட்ட *Penrose–Hawking singularity theorems).*

கருந்துளை *(Black Hole)* வெளிச்சத்தைக் கூட தனக்குள் ஈர்த்துக்கொள்ளும் என்றிருந்த கருத்தை மாற்றி, கருந்துளைகளும் ஆற்றலை அணுக் கருத் துகள்கள் மூலம் *(Sub-atomic particles)* வெளியிடுகின்றன என்று நிறுவியது. இன்று இது ஹாக்கிங் கதிரியக்கம் *(Hawking Radiation)* என்று அழைக்கப்படுகிறது.

இவை தவிர, பிரபஞ்சத்தின் தோற்றம், இயக்கம், இதன் முடிவு மற்றும் கருந்துளைகள் குறித்து பல்வேறு கணிதவியல் விளக்கங்களை உருவாக்குவதில் பங்காற்றியிருக்கிறார். ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவங்களையும் குவான்டம் *(Quantum)* விசையியலையும் ஒருங்கிணைப்பதற்காக *Theory of Everything* என்பதனை உருவாக்க முயற்சித்திருக்கிறார். *Brief History of Time* என்கிற உலகப் புகழ்பெற்ற அறிவியல் நூலை 1988 இல் எழுதி வெளியிட்டார். மேலும் பல நூல்களையும் எழுதியிருக்கிறார்.



# பெரியார் வாழ்க! பெரியாரியல் ???

**அதி அசுரன்**

திருச்சியில் 23.12.2018 அன்று பெரியாரை ஆதரிக்கும் சில தமிழ்த் தேசிய அமைப்புகள், "பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு" என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, அந்தப்பெயரில் ஒரு மாநாட்டை நடத்தினர். திராவிடர் இயக்கங்கள், தலித் இயக்கங்கள், சிறுபான்மையின இயக்கங்கள், பொதுவுடைமை இயக்கங்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகளும், தலைவர்களும் கருப்புச் சட்டை அணிந்து பங்கேற்றனர். காட்டாறு குழுவும் அதில் பங்கேற்றது. பெரியார் கருஞ்சட்டைப் பேரணியும் நடைபெற்றது.

தமிழ்நாட்டில், தமிழ்த்தேசியம் பேசும் பெரும்பாலான அமைப்புகள், பெரியாரைத் தமிழ்த் தேசியத்திற்கும், தமிழர்களுக்கும் நேர் எதிரியாகக் கட்டமைத்து வருகிறார்கள். இந்தச்சூழலில், தமிழ்த் தேசியம் பேசும் சில முக்கிய அமைப்புகள் பெரியாரின் உழைப்பை அறிந்து, பெரியார் பெயரில் மாநாடு கூட்டுவதை வரவேற்கவும், பாராட்டவும் வேண்டும். "தமிழ்த்தேசியம்" தான் விடுதலையைப் பெற்றுத் தரும் என்று நம்பும் ஆயிரக்கணக்கான புதிய இளைஞர்களுக்குப் பெரியாரை நட்பு சக்தியாகக் காட்ட, இந்த மாநாடு பயன்பட்டால் மகிழ்ச்சி.

அதேநேரம், திராவிடர் இயக்கங்களுக்கென்று இன்றுவரை இருக்கும் சில ஆரிய எதிர்ப்புத் தனித் தன்மைகள், பார்ப்பன ஆதிக்க எதிர்ப்புப் பண்பாடுகளை இந்த மாநாட்டுக்குழு மாற்றத் துணிந்துள்ளதோ என்ற அச்சமும் எழுந்துள்ளது. "இதுதான் பெரியாரியல், இது தான் பெரியார் இயக்கம், இது தான் திராவிடர் இயக்கப்பண்பாடு" என, பெரியாரியலுக்கு எதிரான சில நடவடிக்கை களைத் தொடங்கியுள்ளனர். அதை எதிர்க்க வேண்டியுள்ளது.

இந்த மாநாட்டை ஒருங்கிணைத்த தோழர்கள் பொழிலன், திருமுருகன் ஆகியோர் திராவிடர் இயக்கங்களுக்கு எதிரானவர்கள் அல்ல; அதேநேரம் திராவிடர் இயக்கத்தவர்களும் அல்ல. அவர்கள் நடத்தும் தமிழ்த்தேசிய இயக்கங்களுக்கும் நமக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை விளக்கவே இக்கட்டுரை.

## திணிக்கப்படும் தமிழ்த்தாய் வாழ்த்து

மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாக, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. இது மிக மிகத் தவறான முன்னடுப்பு ஆகும். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும் போது விஜயேந்திர சங்கராச்சாரி எழுந்து நிற்கவில்லை என்பதற்கான எதிர்வினை என மாநாட்டுக்குழு விளக்கம் கூறலாம். அந்தச் சிக்கலில், தமிழ்நாட்டின் அனைத்து முற்போக்கு இயக்கங்களும் சங்கராச்சாரிக்கு எதிராக எதிர்வினை ஆற்றின. அந்த நேரத்தில் எதிர்வினையாற்றுவது மிக மிக அவசியம்.

ஆனால், அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு "பெரியாரிய உணர்வாளர்கள்" என்ற பெயரில் நடைபெறும் மாநாட்டிலும் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடுவது என்ற பண்பைத் தொடங்குவது ஆபத்தானது. அது தமிழ்த்தேசியர்களின் பண்பு. திராவிடர்களின் பண்பாடு அல்ல.

சந்திரசேகரந்திர சங்கராச்சாரி, தமிழை நீச பாசை என்று பேசினார். அதற்காக திராவிடர் இயக்கங்கள் இன்றுவரை அவரை விமர்சித்து வருகின்றனர். சங்கராச்சாரி தமிழை நீச பாசை என்று கூறிவிட்டார் என்பதற்காக, நாம் அதே தமிழை "மிக உயர்ந்தமொழி" என்று மொழிப்புகழ் பாடிக் கொண்டிருக்கவில்லை. நாம் "தமிழ் காட்டுமிராண்டிமொழி" என்று தான் இன்றுவரை கூறுகிறோம். அதற்காக தமிழ்க்குழுமங்களும், இந்துக்குழுமங்களும் நம்மைக் கடுமையாக விமர்சிக்கும் சூழலிலும் தமிழ் உயர்ந்த மொழி அல்லது "மொழி இருந்தால் தான் இனம் இருக்கும்" என்பவை போல எப்போதும் எந்த திராவிடர் இயக்கத் தோழரும் பேசியதில்லை.

தமிழ்த்தாய் வாழ்த்துச் சிக்கல் 24.01.2018 இல் உருவானது. அப்போது, விஜயேந்திரருக்கு எதிராக அனைத்து திராவிடர் இயக்கங்களும் களத்தில் இறங்கின. அந்த எதிர்வினைக்குப் பிறகு, திராவிடர் இயக்கங்கள் 2018 பிப்ரவரியிலிருந்து பல்வேறு நோக்கங்களுக்காக - பல மாநாடுகளை நடத்தி விட்டன. இனியும் நடக்கப் போகின்றன. எந்த திராவிடர் இயக்க மாநாட்டிலும் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதில்லை. அதுதான் திராவிடர் இயக்கங்களுக்குரிய அடையாளம். திருச்சியில் நடந்தது "தமிழ்த் தேசியர்கள் நடத்திய மாநாடு" என்பதற்கு முதல் சான்று தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப் பட்டதுதான். இந்தப் போக்குத் தொடராமல் தடுக்க வேண்டியது திராவிடர்களின் கடமை.

இந்தக் கூட்டமைப்பினர், அதன் நோக்கத்தையும், 23.12.2018 திருச்சி தமிழின உரிமை மீட்பு மாநாட்டுத் தீர்மானங்களையும் இணைத்து ஒரு சிறு நூலாக அச்சிட்டு, அதே மாநாட்டில் வெளியிட்டிருந்தனர். அந்த நூல் மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்படவேண்டிய நூலாகும்.

இந்த மாநாட்டின் தீர்மானங்களையும், இந்தக் கூட்டமைப்பின் நோக்கம் பற்றிய விளக்கத்தையும் திராவிடர் இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் எவரும் உருவாக்கவில்லை; தமிழ்த்தேசியர்களே அவற்றை உருவாக்கி, முபமையாக்கி, அச்சிட்டுள்ளார்கள் என்பதற்கு அந்த நோக்கங்களும், சில தீர்மானங்களுமே சான்றாக உள்ளன.

நமது தலைவர்களும் சில தீர்மானங்களைக் கொடுத்திருப்பார்கள். அதனால்தான் "ஜாதி அற்றோர் இடஒதுக்கீடு" போன்ற பல பெரியாரியல் தீர்மானங்கள் வந்துள்ளன. பெரியாரியல் தீர்மானங்களையும், தமிழ்த்தேசியத் தீர்மானங் களையும் இணைந்து "பெரியாரிய உணர்வாளர்கள்" என்ற பெயரில் மொத்தமாக வெளியிடுவது, புதிய இளைஞர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும்.

தலைவனைப் புகழ்ந்து, தத்துவத்தை ஒழிப்பது பார்ப்பனர்களுக்கும், அவர்களது அடிமைகளுக்கும் கைவந்த கலை. புத்தருக்கும் முந்தைய காலத்திலிருந்து இதுதான் இந்தியப் பகுதியின் வரலாறு. புத்தர் வாழ்க! பௌத்தம் ஒழிக! என்பது போல, புத்தரின் காவி வண்ணத்தையும், புலால் உண்ணாமையையும் தனதாக்கிக் கொண்டு புத்தத்தை அழித்தது போல - பெரியாரின் கருப்புச் சட்டையையும், தனித்தமிழ்நாட்டையும் தனதாக்கிக் கொண்டு பெரியாரியரை அழிக்கும் நிலை உருவாகிறதோ என்ற அச்சத்தை அந்தச் சிறு நூல் உண்டாக்கியுள்ளது.

**மாநாட்டின் தீர்மானங்களையும், கூட்டமைப்பின் நோக்கம் பற்றிய விளக்கத்தையும் திராவிடர் இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் எவரும் உருவாக்கவில்லை; தமிழ்த்தேசியர்களே அவற்றை உருவாக்கியுள்ளார்கள் என்பதற்கு அந்த நோக்கங்களும், தீர்மானங்களுமே சான்றாக உள்ளன.**

## பெரியாரிய மாநாட்டில் மணியரசனின் குழப்பவாதம்

மாநாட்டில் வெளியிடப்பட்ட அந்த நூலின் 2 ஆம் பக்கத்தில்,

> "தமிழ்க்கடலாய், அதேபோது சமயச்சார்பினராய் இருந்த மறைமலை அடிகள் மற்றும் சோமசுந்தர பாரதியார், தந்தை பெரியார், கி.ஆ.பெ.விசுவநாதம், குமாரசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, திருமலைச்சாமி என எண்ணற்ற தமிழ்அறிஞர்களும், சுயமரியாதை இயக்கத்தவர்களும் தங்களுக்குள் வேறுபாடு கொண்டிருப்பினும் தமிழ்மொழி காக்க, இனம் காக்க ஒருங்கிணைந்து போராடினர்"...

என்று உள்ளது. அதாவது மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார் பெயர்களுக்கு அடுத்த நிலையில் பெரியார் பெயர் அச்சிடப் பட்டுள்ளது. இதில் மிகப் பெரும் பார்ப்பனத்தனம் உள்ளது. 1937 இல் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கியவர் பெரியார்தான். அவரது பெயர் மூன்றாம் இடத்திற்குச் சென்றதன் பின்னணியில் தோழர் மணியரசன் இருக்கிறார்.

1937 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கியவர்கள் மறைமலைஅடிகள், சோம சுந்தர பாரதியார் போன்ற தமிழ் அறிஞர்கள்தான். அவர்கள் தொடங்கிய போரில், பெரியார் வலியச்சென்று தன்னை இணைத்துக் கொண்டார் என்று பல ஆண்டுகளாக தோழர் மணியரசன் அவர்கள் பேசியும், எழுதியும் வருகிறார். அவரது திரிபுவாதங்களுக்கு எதிராக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள், "பெரியாருக்கு எதிரான முனைமழுங்கும் வாதங்கள்" என்ற ஒரு பெரிய நூலையே எழுதியுள்ளார். அந்த நூலின் கட்டுரைகள் கீற்று இணைய தளத்தில் உள்ளன. தி.வி.க வின் இணைய தளத்தில் அந்த நூலே இலவசமாகக் கிடைக்கிறது.

அந்த நூலின் தொடக்கத்தில், 1937 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாருக்குத் தமிழர்கள் வழங்கிய இடத்தைப் பறிக்க நடக்கும் மோசடிகளைப் பற்றித் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் எழுதியாதைப் பாருங்கள்.

> "என்ன காரணத்தாலோ, பெரியாருக்குத் தமிழ்ச் சமூகம் அளித்து வந்துள்ள இடத்திலிருந்து அவரைப் பலவந்தமாக, தந்திரமாக, சூழ்ச்சியாக எப்படியாவது இறக்கிட வேண்டுமென பலர் முயற்சியாய் முயற்சிக்கின்றனர்; பலபட எழுதுகின்றனர்."

என்று பதிவு செய்துள்ளார். தோழர் மணியரசன் அவர்களுக்கு எழுதப்பட்ட அந்த வாக்கியங்கள், அப்படியே இந்த மாநாட்டு

ஒருங்கிணைப்பாளர்களுக்கும் பொருந்துகிறது. *அந்த நூலில், அந்த வரிகளைத் தொடர்ந்து,*

“அவற்றில் ஒன்றாக, ‘தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்’ இதழில் 2014 மே -15 இதழில் ஒரு பதிவினைப் படித்தேன்; தோழர் பெ.மணியரசன், தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 19-04-2014 அன்று நடந்த 5ஆவது உலகத் தமிழ்ப் பொது மாநாட்டில் ஆற்றிய உரையே அது. அவ்வுரையில் தோழர் மணியரசன் மூன்று செய்திகளை முன்வைக்கிறார்.”

...3.1937-இல் சென்னை மாகாண முதலமைச்சராக ஆனவுடன் இராஜாஜி 1938-இல் ஒரு பகுதி பள்ளிக் கூடங்களில் வெள்ளோட்டமாக இந்தியைக் கட்டாயப் பாடமொழி ஆக்கினார் (இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார் என்பதே சரி) அந்த இந்தித் திணிப்பைத் தமிழறிஞர்கள் எதிர்த்தனர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு முன்னெடுத்த பின் அது பெரும் வீச்சைப் பெற்றது.”

டும்.. டும்.. டும்.. இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், பார்ப்பன விலக்கானாலும், சமற்கிருத விலக்கானாலும், இந்தி எதிர்ப்பானாலும், தனித்தமிழ் நாடானாலும் தமிழறிஞர்களே முன்னோடி; பெரியார் பின்னோடியேதான். டும்...”

*இவ்வாறு, தோழர் கொளத்தூர் மணி அவர்கள் குறிப்பிடுகிறார். தொடர்ந்து மிக மிக ஆழமான, விரிவான பதிலை தமிழ்த் தேசியர்களுக்கு அளித்துள்ளார். அவரது நூலிலிருந்து மேலும் சில பத்திகளைப் படியுங்கள்.*

... “தமிழறிஞர்கள்தான் இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கினர். பெரியார் பின்னர் வந்து சேர்ந்து எல்லாப் புகழையும் அவரே தட்டிப் பறித்துச் சென்றுவிட்டார்” என்ற ஒரு செய்தி பல நிகழ்வுகளில் பேசப்படுகின்றது. ‘நாம் தமிழர் கட்சி’ ஆவணத்தில், சக்திவேல் என்ற நபர் எழுதியுள்ள, ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற நூலில், அவரே வெளியிட்ட ஒளிநாடாவில் என பரவலாக இக்கருத்தே முன் வைக்கப்படுகிறது.

அவர்கள் கூறும் வாதம் - 10. 8. 1937அன்று சென்னை இராமகிருஷ்ண மடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில்தான் அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் இராஜாஜி, அடுத்தக் கல்வியாண்டு முதல் இந்தி கட்டாயப் பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் வைக்கப்படும் என்று பேசினார். உடனே தமிழறிஞர்கள் 26. 8. 1937அன்று கரந்தை தமிழ்ச் சங்கத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தியது தான் முதல் இந்தி எதிர்ப்பு நடவடிக்கையாக எல்லோராலும் கூறப்படுகிறது.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய தோழர் கொளத்தூர் மணியின் எழுத்துக்கள் இணைய தளங்களில் விரவிக் கிடக்கின்றன. அவ்வளவு விரிவான பதிலுரை எழுதப்பட்ட பிறகும், தோழர் மணியரசன் உருவாக்கிய குழப்பவாதம், திருச்சியில் வெளியிடப்பட்ட பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் நோக்கம் குறித்த நூலில் பதிவாகியுள்ளது.**

ஆனால், அதற்கு முன்னதாகவே 22.8.1937அன்று ‘குடிஅரசில்’, “சுயாட்சியா? பழிவாங்கும் ஆட்சியா?” என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை பெரியார் எழுதியிருக்கிறார்.

...“நமது தமிழ்ப்பண்டிதர் கம்பராமாயணத்தில் கருப்பொருள் தேடவும், திருவிளையாடல் புராணத் துக்கு 77-ஆவது உரை எழுதவும், பெரியபுராணத்துக்கு 113-ஆவது உரை எழுதவும்தான் தகுதியுடையவர் களாகவும் கவலை உடையவர்களாகவும்” உள்ளதைக் கண்டிக்கிறார்.

“இந்த நாட்டில் உண்மைத் தமிழ் இரத்தம் ஓடும் மக்கள் ஒருவர் இருவராவது இருக்கிறார்களா என்றே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது” என்கிறார், பெரியார். தோழர் மணியரசன் பெருமிதத்தோடு குறிப்பிடுவதைப் போல, தமிழறிஞர்கள் இந்தி எதிர்ப்புக்கு வழிகாட்டியிருந்தால் இந்தக் கோபம் பெரியாருக்கு எப்படி வந்திருக்க முடியும்?

...“ஆகையால், ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் பொதுக்கூட்டம் போட்டு, இந்த சூழ்ச்சியைக் கண்டித்துத் தீர்மானம் போட்டு மேன்மை தங்கிய கவர்னருக்கும், தமிழ் வேளாள மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கும், ஆரிய மந்திரி கனம் ஆச்சாரியாருக்கும், பத்திரிகைகளுக்கும் தெரியப் படுத்த வேண்டும்” என்று 22.8. 1937 ‘குடிஅரசில்’ தலையங்கமாக எழுதுகிறார்.

அப்படிப்பட்ட வேண்டுகோளுக் கிணங்க, 27.08.1937 அன்று கரந்தை தமிழ்ச் சங்கத்தில் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்தைத்தான் 10.08.1937இல் இராஜாஜியின் கட்டாய இந்தி எதிர்ப்பு அறிவிப்புக்கு எதிரான முதல் எதிர்வினை என்றும், பெரியார் அதற்குப் பின்னரே இந்தி எதிர்ப்புப் போரில் இணைந்து கொண்டார் என்கிறார்கள் இந்த அறிஞர்கள்! பிறருக்கு ஆலோசனை சொன்னதோடு நிறுத்திக் கொள்ள வில்லை பெரியார். 01.07.1937-முதல் நாளேடாக மாற்றப்பட்டு வெளிவந்து கொண்டிருந்த தமது ‘விடுதலை’யில் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த யோசனையை மீண்டும் எடுத்துரைக்கிறார்.

“திருநெல்வேலியிலிருந்து ஒரு ‘ஜாதா’ அதாவது தமிழ் பாஷை அபிமானம் கொண்ட மக்கள் முறையீட்டுக் கூட்டம் ஒன்று தொடங்கி, நேரே சென்னை வரையில் கால்நடையாய் நடந்து, வழியில் ஆங்காங்கு கூட்டம் போட்டு,தீர்மானமும் செய்து மக்களுக்கு இந்திப் புரட்டையும் சூழ்ச்சியையும் விளக்கிக் கொண்டுபோய் சரணாகதி மந்திரிகளுக்குத் தெரிவித்துத் தமிழைக் காப்பாற்றவும், விரோதமான சூழ்ச்சியை அழிக்கவும் முயற்சிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்” என்ற செயல் திட்டத்தையும் முன் வைக்கிறார்.

...பெரியோர்களுக்கு விண்ணப்பம் என்ற மற்றொரு உள்தலைப்பில் “பெரியோர்களே! முன் மாதிரி காட்ட வாருங்கள்! உங்களுடைய உள்ளங்களுக்கு புதிய அங்கியை மாட்டிக் கொள்ளுங்கள் - உங்கள் மார்பைப் பார்க்காதீர்கள், அடிச்சுவட்டைப் பாருங்கள். வீர இளைஞர்களுக்கு நீங்கள் வழிகாட்டுகிறவர்கள் என்பதை ஒவ்வொரு அடி வைக்கும் போதும் ஞாபகத்தில் வையுங்கள்” என்று முடிக்கிறார்.

அத்தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ள சில சொற்களைத் தான் அனைவர் கவனத்துக்கும் முன்வைக்க விரும்புகிறோம். அதுதான் நாம் சுட்டிக் காட்ட விரும்பும் பகுதியும் கூட

“தோழர்கள் எஸ்.எஸ். பாரதியார் (சோமசுந்தர பாரதியார்), உமாமகேசுவரம் பிள்ளை, கி.ஆ.பெ.விசுவ நாதம், வள்ளல் சிவஞான தேசிகர் போன்றவர்கள் கீழிறங்கி வந்து வினைஞர்களாகி மற்ற வாலிபர்களுக்கு வழிகாட்டிகளாக செல்ல வேண்டும்” என்பதே அது.

இச்சொற்றொடர் நமக்குக் கூறும் செய்தி தான் என்ன? மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எவர் ஒருவரும் இது நாள் வரையிலும் கீழிறங்கி வரவுமில்லை; கருத்தாளர்களாக இருக்கிறார்களே அன்றி வினைஞர்கள் (செயற்படுவோர்) ஆகவுமில்லை என்பதுதானே?

எல்லோருடைய ஒத்துழைப்பும் இந்திஎதிர்ப்புப் போராட்டத்துக்குத் தேவை என்று கருதிய பெரியார், இது எப்போதோ ஒரு சமயம் எழுதப்பட்டதல்ல; இந்தி எதிர்ப்புப்போர் தொடங்க வேண்டியிருந்த அதிஉச்ச நிலையில் எழுதப்பட்டது. எங்கோ தனியிடத்தில் இரகசியமாய்க் கூறப்பட்டதல்ல; அப்போது தமிழ் நாட்டின் முன்னணி வார ஏடாகவும், இந்தி எதிர்ப்பு செய்திகளை, போராட்டங்களை, திட்டங்களை அறிய தமிழ்நாடு முழுதும் விரிவாக வாசிக்கப்பட்ட ‘குடிஅரசு’ ஏட்டில், கட்டாய இந்திப் பாட அரசாணை பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் வெளிவந்த முதல் இதழில் தலையங்கமாக எழுதப்பட்ட வரிகளே இவை.

இவ்வரிகள் இந்தி எதிர்ப்புப் போரை தமிழறிஞர்கள் நடத்தினார்களா? பெரியார் நடத்தினாரா? என்பதைத் தெளிவாக நமக்கு விளக்கும்.”

*தி.வி.க தலைவர் எழுதிய இந்த நூல், பெரியார் 1922 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியையும், அதன் பின் உள்ள இந்து மத - பார்ப்பன ஆதிக்கத்தையும் தொடர்ச்சியாகக் கண்காணித்து எதிர்த்து வந்துள்ளார் என்பதையும், அந்த எதிர்ப்புகளை வெறும் எழுத்துக்களில் மட்டுமல்லாமல், தீவிரமான செயல்பாடுகளால் நடைமுறைப்படுத்தியும் காட்டியவர் என்பதை சான்றுகளுடன் விளக்கியுள்ளது.*

**“N.T.பட்டி”, K.G.பட்டி என்ற ஊர்கள் உள்ளன. அவற்றின் தமிழாக்கம், நாராயணத் “தேவன்” பட்டி, குள்ளப்பக் “கவுண்டன்” பட்டி ஆகும். ஆங்கில இனிஷியல்களை தமிழாக்கம் செய்தால் மீண்டும் ஜாதிப்பெயர்கள்தான் வரும்.**

*தோழர் கொளத்தூர் மணி எழுதிய நூலின் பதிவுகளைப் பார்த்தோம். இனி, தோழர் பெரியாரே எழுதியவற்றைப் பார்ப்போம்.*

*சென்னை இராமகிருஷ்ண மடத்தில் 10.8.1937 அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் இந்தித் திணிப்பு அறிவிக்கப்படுகிறது. அந்த அறிவிப்புக்கு முன்பே, அப்படி ஒரு அறிவிப்பு வருவதை அறிந்து அதற்கு முன்னதாகவே 08.08.1937 குடி அரசிலேயே ஒரு தலையங்கம் எழுதியுள்ளார் பெரியார்.*

தோழர் ஆச்சாரியார் பட்டத்துக்கு வந்த 10 நாளில் இந்தியா பூராவும், தமிழ்நாடும் சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்றார். இதை காங்கிரசிலுள்ள ஒரு தமிழ் மகனாவது கண்டிக்கவே இல்லை. ஒரு தமிழ்ப் பண்டிதனாவது ஆட்சேபிக்கவே இல்லை. தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் எதற்கு ஆக சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்பதைப்பற்றிக் கூட எந்தத் தமிழனும் சிந்தித்ததாகவும் தெரியவில்லை.

ஒரு பார்ப்பனர் தமிழ்மக்கள் பேரால் ஆட்சி பெற்று அரசியல் தலைமைப் பதவியில் இருந்து கொண்டு தமிழ் மக்களைப் பார்த்து “நீங்கள் எல்லோரும் சமஸ்கிருதம் படிக்க வேண்டும்” என்று சொன்னால் அவரது நெஞ்சுத் துணிவு எவ்வளவாய் இருக்க வேண்டும்? இதையும் மக்கள் பொறுத்துக் கொண்டிருப்பது என்று சொன்னால் இந்நாட்டில் உண்மைத் தமிழ்மக்கள் யாராவது இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

இதன் அவசியத்துக்கு காரணம் என்னவென்றால் சமஸ்கிருதம் படிப்பதன் மூலம்தான் மக்கள் புராண கால ஒழுக்கத்துக்கு போகமுடியும் என்று விளக்கிக் கூறுகிறார். தமிழ்மக்கள் எல்லோரும் ஹிந்தி படிக்க வேண்டும் என்று இவர்களால் சூழ்ச்சி செய்யப்பட்ட காலத்திலேயே நாம் இதை எடுத்துக் காட்டினோம். ஹிந்தி என்பதும் சமஸ்கிருத பாஷையே யாகும். இதை சுமார் 75 வருஷங்களுக்கு முன்பாகவே சரித்திரபுத்தகம் எழுதிய பாதிரிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

...சமஸ்கிருத பாஷையின் முக்கிய தத்துவம் வருணாச்சிரம தர்மமாகும். அதாவது வருணாச்சிரம தர்மத்துக்கு ஏற்ற கதை புராணம், சரித்திரம் “வேதவாக்கு” விதிநூல் ஆகியவைகளேயாகும். வருணாச்சிரம தர்மத்தின் முக்கியத் தத்துவம் பார்ப்பான் பிராமண ஜாதியை சேர்ந்தவன். மற்றவர்கள் சூத்திர (அடிமை) ஜாதியைச் சேர்ந்தவர்கள். முன்னையவனுக்கு பின்னைய வனுடைய சொத்து, பெண்டு பிள்ளை, சரீரம் ஆகியவை கட்டுப்பட்டவை களாகும் என்பதுதான். ஆகவே இந்த நிலையை மறுபடியும் ஏற்படுத்தப் பார்ப்பனர்கள் முயற்சியேதான் “தமிழ்

**மக்கள் சமஸ்கிருதம் படிக்க வேண்டும்" என்று ஆக்கினை இடுவதாகும். -தோழர் பெரியார், குடி அரசு 08.08.1937**

*மேற்கண்ட பெரியாரின் எழுத்துக்களும், பெரியாரின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய தோழர் கொளத்தூர் மணியின் எழுத்துக்களும் இணைய தளங்களில் விரவிக் கிடக்கின்றன. அவ்வளவு விரிவான பதிலுரை எழுதப்பட்ட பிறகும், தோழர் மணியரசன் உருவாக்கிய குழப்பவாதம், திருச்சியில் வெளியிடப்பட்ட பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் நோக்கம் குறித்த நூலில் பதிவாகியுள்ளது.*

*ஒரு பெயருக்கு இத்தனை பக்க விமர்சனமா? என்று கேள்வி எழலாம். நமக்கு பெயர்களிலோ, அந்தப் பெயர்கள் இடம் பெறும் இடத்திலோ எவ்வித அக்கறையும் இல்லை. ஆனால், பெரியாரின் பெயரைத் தள்ளி வைத்ததில், தமிழ்த்தேசியர்கள் எதேச்சையாகவோ, இயல்பாகவோ செயல்படவில்லை, திட்டமிட்டுத் தான் மூன்றாம் இடத்தில் பதிவு செய்கிறார்கள் என்பதை, மேலும் ஒரு செய்தியைப் பார்த்தால் புரியும்.*

*மாநாட்டில் வீரவணக்கத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதில் இந்தி எதிர்ப்புப் போரில் வீரமரணம் எய்திய நடராசன், தாளமுத்து ஆகியோருக்கு வீரவணக்கம் செலுத்தப் பட்டுள்ளது. வழக்கமான வாக்கியம் என்றால், "தாளமுத்து, நடராசன்" என்று தான் இருந்திருக்கும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, ஜாதி ஒழிப்புச் சிந்தனையின் அடிப்படையில், பல விமர்சனங்கள் எழுந்ததைத் தொடர்ந்து, "நடராசன், தாளமுத்து" எனப் பெயர்களின் வரிசை சரியாக மாற்றப்பட்டது.*

> **இந்த பா.ஜ.க.வின் மறைமுக ஆட்சியை, அவசர, அவசரமாகப் பாராட்டியே ஆகவேண்டுமானால் கூட, "சமஸ்கிருதப் பெயர்கள் மாற்றி அமைக்கப்படாது" என்ற அடுத்த வாக்கியத்தை மறைத்து விட்டுப் பாராட்ட வேண்டிய தேவை என்ன? குறைந்தபட்சம், "சமஸ்கிருதப் பெயர்கள்" குறித்த அறிவிப்புக்கு ஒரு கண்டனத்தையும் சேர்த்துப் பதிவு செய்ய என்ன தடை?**

*வீரவணக்கத் தீர்மானத்தில் அந்த வரிசை சரியான மாற்றத்தைப் பெற்றுள்ளது. ஆக, தீர்மானத்தை வடித்தவர்கள் கவனக்குறைவாகவோ, அறியாமலோ எதையும் செய்யவில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது. இப்போது, பெரியாருக்கு ஒதுக்கப்பட்ட மூன்றாவது இடத்தை எண்ணிப் பாருங்கள். தோழர்கள் பொழிலன், திருமுருகன் உருவத்தில் தோழர்கள் மணியரசனும், சீமானும் இருப்பதை அறிந்துகொள்ள முடியும்.*

## நெருப்புத் துண்டாக 'திராவிடம்'

*அடுத்து கொள்கைத் தீர்மானங்களில் முதலாவதாகவும் ஒட்டுமொத்தத் தீர்மானங்களில் 4 வது தீர்மானமாகவும் நிறைவேறியுள்ள பெரியாரிய எதிர்ப்புத் தீர்மானத்தைப் பாருங்கள்.*

"ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை அடையாளங்கள் என்கிற வகையில் பார்ப்பனிய அதிகார வெறிகொண்டு இயங்குகிற இந்திய அரசு இந்தியாவிற்குள் அடக்கப்பட்டுள்ள பல்வேறு மொழித் தேசங்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், அடையாளங்களையும் மறுக் கிறது. இந்நிலையில் தமிழ்நாட்டு மக்கள் தங்களின் தேசியஇன அடையாள உரிமையின் கீழ்த் தங்களைத் 'தமிழர்கள்' என்றே பதிந்து கொள்வதற்கான வகையில் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது."

*பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு நடத்தும் தமிழ்த்தேசியர்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளில் "தமிழர்கள்" என்று பதியச் சொல்கிறார்கள். பெரியாரோ, "திராவிடர்கள்" என்று பதிவு செய்யச் சொல்கிறார். 1940 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 தேதிகளில் திருவாரூரில் நீதிக்கட்சியின் 15 வது மாநில மாநாடு நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட 18 வது தீர்மானத்தைப் பாருங்கள்.*

**18. சென்சஸ்: அடுத்தாற்போல் வரும் மக்கள் எண்ணிக்கை கணக்கெடுக்கும் சென்சஸ் என்பதில் திராவிட மக்கள் தங்களைத் "திராவிடர்கள்" என்றே சொல்ல வேண்டும் என்றும், இந்துக்கள் என்று சொல்லக் கூடாது என்றும் கேட்டுக் கொள்வதோடு எண்ணிக்கைக்காரர்கள் மதம் என்ன என்று கேட்டால் "திராவிட சமயம்" என்று சொல்லலாமே ஒழிய இந்து சமயம் என்று சொல்லக் கூடாது என்றும் வேண்டிக் கொள்கிறது.**

- குடிஅரசு - 08.09.1940

*அந்தத் தீர்மானங்களும், அந்தத் தீர்மானங்களுக்குரிய விளக்கங்களும் 01.09.40 குடி அரசில் வந்தன. அதன் பிறகு 08.09.40 குடி அரசிலும் வந்தன. தொடர்ச்சியாக வந்த அந்த விளக்கங்களில் இருந்து சில வரிகள்...*

**திராவிடர்கள் தனி வர்க்கத்தார் என்று விளக்கிக் காட்டுவதற்கும் ஒரு சந்தர்ப்பமிருக்கிற தென்பதையும். அச்சந்தர்ப்பத்தை தவறவிடாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதையும் அடுத்து நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் நன்கு விளக்கும்.**

**அதாவது, அடுத்தாற்போல் வரும் மக்கள் எண்ணிக்கை கணக்கு எடுக்கும் சென்சஸ் என்பதில் திராவிட மக்கள் தங்களை "திராவிடர்கள்" என்று சொல்லியே பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதாகும். இதையும் ஒவ்வொரு திராவிட மகனும், திராவிட மகளும் மனதிலிருத்தி நடந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம். என்று இத்தகைய கட்டுப்பாடு நம்மவர்களிடையே ஏற்படுகிறதோ அன்றுதான் நாம் முன்னேற முடியும். எதுவரை நாம் இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு வருகிறோமோ, அதுவரை நாம் அடிமை வாழ்வை விரும்புகிறோமென்பதுதான் பொருள்படும். எனவே,**

**அடிமைத்தளையிலிருந்து விடுபட முதற்படி தன்னைத் "திராவிடன்" என்று சொல்லிக் கொள்வதேயாகும். இதனைச் செய்ய எவரும் தம்மை மறந்தும் தவறிவிட மாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.**

**- தோழர் பெரியார், குடிஅரசு - 01.09.1940**

*1940 க்குப்பிறகு, 1948 இல் பெரியார்,*

**"என்ன மதத்தினர் என்று கேட்டல், 'வள்ளுவர் மதம்' என்று சொல்லுங்கள் உங்கள் நெறியென்ன வென்றால், "குறள் நெறி" என்று சொல்லுங்கள். குறளை எவனாலும் மறுத்துக்கூற முடியாது" - விடுதலை, 31.12.1948**

*என்றும் கூறியுள்ளார். ஆனால் அது ஒரு உரையாக வந்தது தான். தீர்மானமாக வரவில்லை. அது சென்சஸ் பற்றிய கருத்தும் இல்லை. மேலும், குறளை எவனாலும் மறுத்துக்கூற முடியாது என்று 1948 இல் கூறிய பெரியார், அதன் பிறகு அவரது மரணம் வரை திருக்குறளைக் கடுமையாக மறுத்துப் பேசுகிறார். திருவள்ளுவரைத் தூக்கி எறியுங்கள்! திருக்குறளைத் தூக்கி எறியுங்கள்!! என்று வள்ளுவத்தையும், குறளையும் தகர்த்து எறிகிறார். அவை தனித் தொகுப்பாக இதே இதழில் வெளியிடப்பட்டுள்ளன. அதேசமயம் "திராவிடர்" என்ற மரபு, சமூக இன அடையாளத்தை இறுதிவரைப் பரப்புகிறார்.*

*தி.க, தி.வி.க, த.பெ.தி.க ஆகிய திராவிடர் இயக்கங்களின் தீர்மானங்கள் என்றாலும், குறைந்தபட்சம் அந்தத் தலைவர்கள் ஒப்புதலோடு இந்தத் தீர்மானங்கள் வடிவமைக்கப்பட்டி ருந்தாலும், "திராவிடர்" என்ற அடையாளமே முன்னிறுத்தப்பட்டிருக்கும். பெரியாரின் ஆயுதமான "திராவிடர்" என்ற பதத்தை உச்சரிக்கக்கூடத் தொடை நடுங்குபவர்கள் தீர்மானம் நிறைவேற்றினால், அதில் "திராவிடர்" அடையாளம் சிதைக்கப்பட்டு "தமிழர்கள்" என்றுதான் வரும். ஆபத்தில்லாத கருப்புச்சட்டை அடையாளங்கள் மட்டுமே முன்னிறுத்தப்படும்.*

## நீக்கப்பட வேண்டியது ஆங்கிலப் பெயர்களா? ஜாதிப் பெயர்களா?

"தமிழ்நாட்டின் ஊர்ப் பெயர்களைத் தமிழில் மாற்ற வேண்டுமான தமிழக அரசின் அண்மை அறிவிப்பை இம்மாநாடு வரவேற்கிறது. அந்த அறிவிப்பை விரைவில் நடைமுறைப்படுத்துவதோடு, எஞ்சியுள்ள எல்லா ஊர்ப் பெயர்களையும் முழுமையாக மாற்றிட வேண்டும் என்றும், தமிழில் பெயரில்லாத இந்திய, தமிழக அரசுகளின் திட்டங்களின் பெயர்கள், கோயில்கள் மற்றும் நிறுவனப் பெயர்கள் அனைத்தையும் தமிழிலேயே அமைத்திட வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது."

*தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர், மா.பா.பாண்டியராஜன், 11.12.2018 இல், சென்னை ஆவடி நகராட்சியில் உள்ள பூங்காக்களின் திறப்பு விழாவில் பேசியபோது,*

"தமிழகத்திலுள்ள மூவாயிரம் ஊர்களின் ஆங்கிலப் பெயர்கள் தமிழில் மாற்றி அமைக்கப்பட உள்ளதாகவும், சமஸ்கிருதப் பெயர்கள் மாற்றி அமைக்கப்படாது" எனவும் தெரிவித்துள்ளார்.

*தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் எத்தனை ஊர்களுக்குப் பெயர் உள்ளது எனத் தெரியவில்லை. ஆங்கில உச்சரிப்பில் உள்ளது என்பது நமக்குத் தெரியும். தூத்துக்குடி, திருவல்லிக்கேணி என்பது, ட்யூட்டிகோரின், ட்ரிப்ளிகேன் என ஆங்கில உச்சரிப்பில் உள்ள ஊர்களை தமிழ் உச்சரிப்புகளாக மாற்ற இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. மற்றபடி ஆங்கிலத்தில் எந்த ஊரின் பெயரும் இல்லை. அப்படி நமக்குத் தெரியாமல் இருந்தாலும் அரசு கூறுவது போல 3000 ஊர்களுக்கு ஆங்கிலப் பெயர் இருக்க எந்த வாய்ப்பும் இல்லை.*

*அதேசமயம், தமிழ்நாட்டில் ஆங்கில இனிஷியல் கொண்ட ஊர்கள் ஏராளமாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, உத்தமபாளையம் அருகே "என்.டி.பட்டி", கே.ஜி.பட்டி என்ற ஊர்கள் உள்ளன. அவற்றின் தமிழாக்கம் என்னவென்றால், நாராயணத் "தேவன்" பட்டி, குள்ளப்பக் "கவுண்டன்" பட்டி ஆகும். கோவையில் பி.என்.பாளையம் என்றால், பாப்ப "நாயக்கன்" பாளையம் ஆகும். இப்படி ஆங்கில இனிஷியலில் நூற்றுக்கணக்கான ஊர்கள் உள்ளன என்பதை நாம் அறிவோம். அந்த ஆங்கில இனிஷியல்களை தமிழாக்கம் செய்தால் மீண்டும் ஜாதிப்பெயர்கள் தான் வரும்.*

*கே.கே. நகர், டி.நகர், ஆர்.எஸ்.புரம் என்பவற்றை கலைஞர் கருணாநிதி நகர், தியாகராய நகர், இரத்தினசாமிபுரம் என்று மாற்றுமளவுக்கு, இன்றைய தமிழ்நாடு அரசு நேர்மையாக இருக்காது என்பது சிறு குழந்தைக்கும் தெரியும். எனவே, இப்படிப்பட்ட ஜாதிப்பெயர்களை மீண்டும் புதுப்பிக்கத் துடிப்பவர்களின் அறிவிப்பை அவசர அவசரமாகப் பாராட்ட வேண்டிய அவசியம் என்ன?*

*அமைச்சரின் பின்னணியையும், இந்த அறிவிப்பின் பின்னணியையும் யோசித்தால், காசி, அலகாபாத் போன்ற நகரங்களின் பெயர்களை சமஸ்கிருதமயமாக்கியது போலத் தமிழ்நாட்டிலும் ஊர்களின் பெயர்களில் சமஸ்கிருதமயமாக்கல் தொடங்க இருப்பதாகவே தெரிகிறது. அவரது அறிவிப்பில், "சமஸ்கிருதப் பெயர்கள் மாற்றி அமைக்கப்படாது" என்று தெளிவாகவே அறிவித்துள்ளார்.*

*இந்த பா.ஜ.க.வின் மறைமுக ஆட்சியை, அவசர, அவசரமாகப் பாராட்டியே ஆகவேண்டு மானால் கூட, "சமஸ்கிருதப் பெயர்கள் மாற்றி அமைக்கப்படாது" என்ற அடுத்த வாக்கியத்தை மறைத்து விட்டுப் பாராட்ட வேண்டிய தேவை என்ன? குறைந்தபட்சம், "சமஸ்கிருதப் பெயர்கள்" குறித்த அறிவிப்புக்கு ஒரு கண்டனத்தையும் சேர்த்துப் பதிவு செய்ய என்ன தடை?*

*தமிழ்நாடு அரசின் இந்தத் தமிழாக்க அறிவிப்புக்கு முன்பு, மதுரை உயர்நீதி மன்றக் கிளையில் கடந்த 19.07.2017 அன்று, ஊர், தெருப் பெயர்களில் இருக்கும் ஜாதிப்பெயர்களைக் கண்டறிந்து நீக்க வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

"தமிழக அரசு 1978 அக்.டோபர் 3 அன்று ஒரு அரசாணை வெளியிட்டது. அதன்படி, தமிழகத்தில் சாலைகள், தெருக்களின் பெயர்களோடு, ஜாதிப் பெயரும் இருக்குமானால், ஜாதிப் பெயர்கள் நீக்கப்படும். இதைச் செயல்படுத்த மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். கலெக்டர்கள் கண்காணித்து, அரசின் முடிவைச் செயல் படுத்தியதற்கு அறிக்கையாக அனுப்ப வேண்டும்."

*என்று உயர்நீதிமன்றம், அரசு நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தி, வழக்கை முடித்து வைத்தது. வழக்கு குறித்து, 20.07.2017 விடுதலை நாளேட்டில் விளக்கமான செய்தி உள்ளது.*

*ஒரு திராவிடர் இயக்கத்தின் மாநாடு அல்லது உண்மையான பெரியாரிய உணர்வாளர்களின் ஏற்பாட்டில் நடக்கும் மாநாடு என்றால், அந்த மாநாட்டுத் தீர்மானத்தில், ஆங்கிலப் பெயரை மாற்றச் சொல்வோமா? ஜாதிப்பெயரை மாற்றச் சொல்வோமா?*

## அகற்ற வேண்டியது கோவிலையா? கோவிலின் பெயரையா?

*இதைவிட மிகக் கொடுமையாக அதே தீர்மானத்தில், "கோவில்களின் பெயர்களைத் தமிழில் மாற்ற வேண்டும்" என்று ஒரு கோரிக்கையும் உள்ளது. ஒரு உண்மையான பெரியாரிஸ்ட் என்பவர், "கோவிலை அகற்ற வேண்டும்" என்று கோரிக்கை வைப்பாரே ஒழிய, கோவிலின் பெயரைத் தமிழில் மாற்றுங்கள் என்று மனநிலை பாதிக்கப்பட்ட போதிலும்கூடக் கூறமாட்டார். அண்மைக்காலச் சான்று ஒன்றைப் படிப்போம்.*

*தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் தோழர் கு.இராமகிருஷ்ணன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் நீதிபதி விடுத்த உத்தரவு இது.*

"பொதுச்சாலை, நீர்நிலைகள், அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து ஏராளமான கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. சில பேராசைக்காரர்கள், மாபியா கும்பல்கள் அரசு நிலங்களை அபகரிக்கவும், பணம் சம்பாதிக்கவும் பொது இடங்களில் கோவில்கள் கட்டுகின்றனர். அதனால், வாகனப்போக்கு வரத்துக்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எந்த ஒரு அனுமதியையும் பெறாமல் சிலர் சாலையோரம் கோவில்களைக் கட்டுகின்றனர்.

இதுபோன்ற செயலை இந்து சமய அறநிலையத்துறை ஒருபோதும் ஊக்குவிக்கக்கூடாது. அது மத உணர்வு களைத் தவறாகப் பயன்படுத்துவதாகிவிடும். பொதுஇடங்களை ஆக்கிரமிக்கும் செயலை ஒருபோதும் அனுமதிக்கவோ, ஆதரிக்கவோ கூடாது. தெய்வமாக இருந்தாலும், பொது இடங்களை ஆக்கிரமிக்க அனுமதிக்க முடியாது. அவ்வாறு ஆக்கிரமித்தால், அந்த தெய்வத்தின் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யக்கூடாது.

இந்த வழக்கில் தமிழக உள்துறைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறைச் செயலாளர், மாநில நெடுஞ்சாலைத்துறை முதன்மைச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர், ஆணையர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாகச் சேர்க்கிறேன்.

இந்த அதிகாரிகள், தமிழகம் முழுவதும் பொது இடங்களையும், நீர்நிலைகளையும், பொதுச்சாலை களையும் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்கள் குறித்த புள்ளிவிவரங்களை அறிக்கையாகத் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கை 21.01.2019 ஆம் தேதிக்குத் தள்ளிவைக்கிறேன்."

*இந்த உத்தரவு ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட கோவில்கள் பற்றியது. ஜாதி ஒழிப்பு, ஆணாதிக்க, பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு அடிப்படையிலும் கோவில்கள் இடிக்கப்பட வேண்டும். அந்தக் கட்டிடங்கள் மக்களுக்குப் பயன்படவேண்டும். அதை மக்களே நடத்த வேண்டும் என்பதே பெரியாரியல். பெரியார் பொதுவாழ்க்கைக்கு வந்த காலத்திலிருந்து இந்த இதழ் வெளியாகும் நாள் வரை ஒரு பெரியாரியல்வாதி கூட எங்கும், என்றும், "கோவில்களின் பெயரைத் தமிழில் மாற்றுங்கள்" என்று கோரிக்கை வைத்தது இல்லை.*

*அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் உரிமைப் போர் என்பது சுயமரியாதையையும், மனித உரிமையையும் அடிப்படையாகக் கொண்டது. "வெறும் மொழியை" முன்னிறுத்திப் போராடுவது பெரியாரியல் அல்ல. பெரியாரியலுக்கு எதிரானது.*

*ஆனால், "பெரியாரிய உணர்வாளர்கள்" என்ற பெயரில் "வெறும்" மொழிவிடுதலைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தோழர் மணியரசனும், தோழர் சீமானும்கூட எதிர்இடத்தில் நின்று, நேர்மையாகத் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்கிறார்கள். இவர்களோ, கருப்புச்சட்டை போட்டுக் கொண்டு, பெரியார் வாழ்க! என்று கூறிக்கொண்டு, நம்மையே மேடை போடச்செய்து, நமது கூட்டத்தையே கூட்டி, நமது தத்துவத்துக்கு எதிராகச் செயல்படுகின்றனர். நாமும் ரசித்துப் பார்க்கிறோம்.*

*- தொடரும்*



தொகுப்பு: தமிழ்ஓவியா, பழனி

# திருக்குறளைத் தூக்கி எறியுங்கள்! வள்ளுவன் படத்தைத் தூக்கி எறியுங்கள்!

## தோழர் பெரியார்

குறளில் வாழ்க்கைத் துணைநலத்தைப் பற்றி சொல்ல வந்த 6-ஆம் அத்தியாயத்திலும் பெண் வழிச் சேரல் என்பதைப்பற்றி சொல்ல வந்த 91-வது அத்தியாயத்திலும் மற்றும் சில தனி இடங்களிலும் பெண்கள் விஷயத்தில் மிக்க அடிமைத் தன்மையையும் தாழ்ந்த தன்மையையும் புகுத்தப்பட்டிருப்பதாகவே எண்ணக்கிடக்கின்றது. தெய்வத்தைத் தொழாமல் தன் கொழுநனாகிய தன் தலைவனைத் தொழுகின்றவள் மழையைப் பெய்யென்றால் பெய்யும் என்றும், தன்னைக் கொண்டவன் என்றும் இம் மாதிரியான பல தாழ்த்தத் தகுந்த கருத்து கொண்ட வாசகங்கள் காணப்படுகின்றன.

இது விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ளுவோர், மேல்கண்ட இரண்டு அத்தியாயங் களையும் 20 குறள்களையும் உரைகளைக் கவனியாமல் மூலத்தை மாத்திரம் கவனிக்கும்படி வேண்டுகிறேன். அப்படிப் பார்த்து பிறகு இந்த இரண்டு அதிகாரங்கள் அதாவது வாழ்க்கைத் துணை நல அதிகாரமும், பெண்வழிச் சேரல் அதிகாரமும் குற்றமற்றது என்பதாக யார் வந்து எவ்வளவு தூரம் வாதிப்பதானாலும் கடைசியாக, திருவள்ளுவர் ஒரு ஆணாயில்லாமல் பெண்ணா யிருந்து இக் குறள்களை எழுதியிருப்பாரானால் இம்மாதிரி கருத்துக்களை காட்டியிருப்பாரா? என்பதையாவது கவனிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

- தோழர் பெரியார், குடி அரசு - 08.01.1928

இனி தமிழர்களால் சமதர்மநூல் என்று சொல்லப்படும் குறளில் தீண்டாமைக்கு இடமில்லை என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதன் உண்மைநிலை என்ன என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமையால்”

என்ற குறளைக் கொண்டு பிறப்பு வித்தியாசத்தைத் திருவள்ளுவர் ஒப்புக் கொள்ளவில்லையென்றும் தொழில் வேற்றுமை பற்றியே உயர்வு தாழ்வு வித்தியாசம் உண்டென்றும் கூறுகின்றனர். இதுவும் தீண்டாமையை ஒரு வழியில் ஒப்புக் கொள்ளுகின்றதென்பதே நமது அபிப்பிராயமாகும். உயர்வு தாழ்வு வித்தியாசத்தைக் கற்பிப்பது பிறப்பாயிருந்தாலும் சரி அல்லது தொழிலாயிருந்தாலும் சரி, அவை மூலம்தான் தீண்டாமையும் உற்பத்தியா கின்ற தென்பதை யாரும் மறுக்க முடியாது.

அல்லாமலும் திருவள்ளுவரும் வருணாச்சிரம தர்மத்தை ஒப்புக் கொள்ளமலில்லை யென்றே சொல்லலாம்.

“மறப்பினும் ஒத்துக்கொளல் ஆகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்”

“ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காவான் எனின்”

என்னும் குறள்பாடல்கள் வருணாச்சிரம தருமத்தைப் போதிப்பனவேயாகும்.

“பார்ப்பான் வேதத்தை மறந்து விட்டாலும்

மறுபடியும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அவனுடைய பிறப்பிற்குரிய ஒழுக்கத்தை விட்டு விடுவானானால் கெடுவான்".

'அரசன் சரியாக அரசாட்சி செய்யாவிட்டால் பசுக்களின் நன்மை குறையும் ஆறுவகைத் தொழிலையுடைய பார்ப்பனர்கள் வேதத்தை மறந்து விடுவர்'

என்பனவே மேற்கூறிய குறள்களுக்கு அர்த்தம் என்பதைக் கொண்டு ஆராயும் போது திருவள்ளுவர் வருணாச்சிரம தருமத்தை ஒப்புக் கொள்ள வில்லையென்றாவது, உயர்வு தாழ்வு வித்தியாசங்களை ஒப்புக்கொள்ள வில்லை யென்றாவது, தீண்டாமைக்கு இடங்கொடுக்க வில்லையென்றாவது சொல்ல முடியுமா? 'தமிழ் வேதம்' 'சமதர்ம வேதம்' என்று சொல்லப்படும் குறளின் நிலமையே இப்படி இருக்குமானால் மற்ற நூல்களின் நிலைமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

- தோழர் பெரியார், குடி அரசு - 27.03.1932

தீண்டப்படாதவர்கள் விஷயமாகவோ, ஜாதி வித்தியாசம் விஷயமாகவோ, இந்து மத சீர்திருத்த விஷயமாகவோ இந்து மதம் என்றும் சாதி வித்தியாசம் என்றும் ஏற்பட்ட காலம் முதலே முயற்சிகள் செய்யப்பட்டுத்தான் வந்திருக்கின்றன.

கபிலர், திருவள்ளுவர், ராமானுஜர் முதலாகியவர்கள் 'தெய்வத் தன்மையில்' இருந்து பாடுபட்டிருப்பதாய் சரித்திரம் கூறுகின்றன. புத்தர் முதலிய அரசர்கள் பாடுபட்டிருப்பதாய் ஆதாரங்கள் கூறுகின்றன.

ராம் மோகன்ராய் மற்றும் சுவாமி தயானந்த சரஸ்வதி, ராமலிங்க சுவாமிகள், விவேகானந்தர் முதலிய ஞானவான்கள் முயற்சித்திருப்பதாய்ப் பிரத்தியட்ச அனுபவங்கள் கூறுகின்றன. இவர்கள் எல்லாம் இன்று பூஜிக்கப்படுகிறார்கள் என்றாலும் காரியத்தில் ஒரு பயனும் ஏற்பட்டதாகக் கூற முடியாது. மேற்கண்ட பெரியார்களுக்கு சிஷ்யர்களாக 100 பேர்களோ பதினாயிரம் பேர்களோ ஒரு லட்சம் பேர்களோ இருக்கலாம்.

அவரவர்கள் ஸ்தாபனங்களில் ஒரு சில லக்ஷம் அங்கத்தினர்கள் இருக்கலாம். மற்றப்படி காரியத்தில் நடந்ததென்ன என்று பார்த்தால் பழய நிலைமையே தான். சட்டதிட்டங்கள் மூலம், வருணாச்சிரம கூட்டங்கள் மூலம் பத்திரப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

ஆகவே இவ்விஷயத்தில் ஏதாவது ஒரு காரியம் தகுந்த அளவுக்கு நடைபெற வேண்டுமானால் மேல்கண்டபடி சுவாமிகள் என்றும், அவதாரங்கள் என்றும், மகாத்மா என்றும், பூஜிக்கப்படத் தக்கவர்கள் என்றும் சொல்லி சொல்லிக் கொள்ளுபவர்களால் ஒரு காரியமும் நடைபெறாது. இவர்களை பண்டார சன்னதிகள், சங்கராச்சாரி யார்கள் என்று சொல்லப் படுபவர்களுக்கு ஒரு படி மேலாகச் சொல்லலாம். ஆனால் பொது ஜனங்களால் வெறுக்கப்படுகிறவர்களாலும் தூற்றப் படுகின்றவர்களாலும் தான் அவசியமான ஏதாவது மாறுதல்கள் காரியத்தில் நடைபெறக்கூடும்.

எனவே தோழர் அம்பத்கார் அவர்களின் கர்ஜ்ஜனையும், வீரமும், ஞானமும் நிறைந்த தீர்மானமும் பொது ஜனங்களால் எவ்வளவுதான் வெறுக்கப்பட்ட போதிலும் அவர் எவ்வளவு தான் தூற்றப்பட்ட போதிலும் அதுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் மாத்திரமல்லாமல் இந்தியாவில் உள்ள இந்துக்களில் பார்ப்பனரல்லாத மக்களாகிய 100க்கு 97 விகிதாச்சாரமுள்ள 24 கோடி இந்து மக்களின் விடுதலைக்கு சர்வசமய சஞ்சீவி ஆகப் போகிறது.

- தோழர் பெரியர் - குடி அரசு - 20.10.1935

திருவள்ளுவர், கபிலர், ராமானுஜர் முதலிய புராணக்காரர்களும் பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் முதலிய மத சம்மந்தமான சில புது முயற்சிகளும், மற்றும் எத்தனையோ சீர்திருத்த முயற்சிகளும் எல்லாம் உண்மையறியாமலும், உலக மெப்புக்கும் தனிப்பட்ட சமூக சுயநலத்தை முன்னிட்டும் செய்யப்பட்ட காரியங்களே தவிர, மனித சமூகத்தில் பிறவியின் பேரால் உள்ள ஜாதிபேதம் அடியோடு ஒழியத்தக்க மாதிரிக்கோ, ஒழியும் படியாகவோ செய்த காரியங்கள் அல்ல.

- தோழர் பெரியார், குடி அரசு - 05.04.1936

திருமணம் என்று சில தமிழ்ப் புலவர்கள் சொன்னாலும், திருமணத்திற்கும் இந்நிகழ்ச்சிக்கும் சம்பந்தமோ, பொருளோ இல்லை. தமிழனுக்கு மட்டுமல்ல, ஆரியனுக்கும் கிடையாது என்று சொல்வேன். விவாகம், கல்யாணம், முகூர்த்தம் என்பதெல்லாம் வேறு பொருளைக் குறிப்பிடும் சொற்களே தவிர, இந்நிகழ்ச்சியை காரியத்தைக் குறிப்பிடும் சொற்கள் அல்ல.

வாழ்க்கைத் துணை என்பதை வள்ளுவன் சொல்லி இருக்கிறானே என்பார்கள். அவன் ஆணுக்குப் பெண் அடிமை என்பதையே குறிப்பிட்டிருக்கிறான். "தற்கொண்டாற்பேணி" என்ற குறளே பெண்ணை அடிமை என்பதைக் குறிப்பிடுவதே ஆகும் என்று ஆண் - பெண் திருமண முறை தோன்றிற்றோ அன்றே ஆணுக்குப் பெண் நிரந்தரமான அடிமை என்பதும் தோன்றி விட்டது.

மணப்பாறையில் 4, 5-ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியில், என் மேல் அன்பு கொண்ட சில புலவர்கள் நான் இதுபோல் பேசியதைக் கேட்டு இம்முறைக்கு இலக்கியத்தில் சான்றுகள் இருக்கின்றன என்று சொல்லி, மணமகன் காளையை அடக்கிப் பெண் கொள்ள வேண்டுமென்று ஒரு கவிதையையும் எடுத்துக் கூறினர். இன்னொன்று ஆணும், பெண்ணும் தோட்டத்தில் உலவும் போது ஒருவருக்கொருவர் பார்த்து சேர்ந்து கொள்வார்கள் என்றும் சொன்னார்கள்.

நான் கேட்டேன், பெண் என்ன காளை, புலியைப் போல அவ்வளவு முரட்டுக் குணத்தன்மை உடையதா? அதை அடக்க அவ்வளவு பலம் பொருந்தியவன் தான் தேவையா? என்று கேட்டேன்.

அந்தப் புலவர்கள் சிரித்துக் கொண்டார்கள். நான் இவற்றை ஏன் சொல்கிறேன் என்றால், இந்த நிகழ்ச்சியைக் குறிக்கத்தக்க வகையில் இந்த நிகழ்ச்சியை உணர்த்தக் கூடிய பொருளில் இந்நிகழ்ச்சி இப்படித்தான் செய்யப்பட வேண்டு மென்கிற முறையில் ஒரு சொல்லோ, ஆதாரமோ எதுவும் நமக்குச் சரித்திர வாயிலாகவுமில்லை - இலக்கியங்களிலும் இல்லை என்பதைத் தெளிவு படுத்தவே ஆகும்.

*(19.05.1967 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற திருமண விழாவில் தோழர் பெரியார் உரை. விடுதலை, 29.05.1967)*

...தமிழனின் வாழ்வு முறைக்குக் குறள்தான் என்று சொல்வார்கள். நாம் காட்டு மனிதனாக இருந்த வரை குறள் சரி. நாட்டு மனிதனான பின், பெண்களுக்குத் தான் அதில் கற்பு நீதி சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, ஆண்கள் கற்பு நீதி பற்றி அதில் ஒன்றுமில்லை. குறளைத் தூக்கியெறிய வேண்டியது தான். பெண்கள் முன்னேற்றத்திற்கு ஒரு வார்த்தை கூட அதில் இல்லை.

குறளில் மட்டுமல்ல, தமிழ் இலக்கியங்கள் யாவுமே பெண்களை அடிமைப்படுத்தக் கூடிய தாகவே இருக்கின்றன என்பதை விளக்கும்போது சின்னத்தம்பி அவர்கள் "அய்யா அவர்கள் மன்னிக்க வேண்டும் குறளில் ஆண்களுக்கும் நீதி சொல்லப் பட்டிருக்கிறது. "பிறர் இல் விழையாமை" என்ற ஓர் அதிகாரமே இருக்கிறது. பிறன் மனைவியை நினைப்பது, தீண்டுவது குற்றமென்று வள்ளுவர் ஆண்களுக்கும் சொல்லியிருக்கின்றார்" எனக் குறிப்பிட்டார்.

தந்தை பெரியார் அவர்கள், “அய்யா சொன்னது ரொம்ப சரி. வள்ளுவன் மற்றவன் திருமணமும் செய்து கொண்டுள்ள பெண்களை நினைப்பது, தீண்டுவது குற்றமென்று சொன்னானே தவிர, திருமணமாகாத பெண்களைத் தீண்டுவது குற்றமென்று சொல்லவில்லையே! பெண்கள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, அதாவது ஆண்களைக் கண்டால் பயந்து கொண்டும், வெட்கப்பட்டும், படிக்காத மடைச்சியாகவும், பிறர் கண்டால் அருவருப்பு அடையும்படியும் இருக்க வேண்டுமென்று சொன்னானே தவிர, மனைவி கடவுளைத் தொழவிட்டாலும், கணவனைத் தொழுபவளாக இருக்க வேண்டுமென்று சொன்னானே தவிர, ஆண்கள் தன் மனைவியைத் தொழ வேண்டும். மனைவி சொல்படி கேட்க வேண்டும் என்று சொல்லவில்லையே. அவ்வை பெண்தான். அப்படி இருந்தும், அவளே "தையல் சொல் கேளேல்" 'பெண் சொல்வதைக் கேட்காதே' என்று தான் எழுதி இருக்கிறாள்.

நான் வள்ளுவனைக் குறை கூறுகிறேன் என்று கருத வேண்டாம். அவன் வாழ்ந்த காலம் அப்படிப்பட்டது. மனிதனெல்லாம் காட்டு மிராண்டியாக இருந்த காலம். அப்போதிருந்த நிலைமைக்குத் தக்கபடி அப்போதுள்ள வாழ்க்கை முறைக்கு ஏற்றபடி அவன் எழுதி இருக்கின்றான். இது அவன் குற்றமல்ல. அப்போதிருந்த நிலை அப்படிப்பட்டது. அதுவே இன்றைக்கும் என்பது தான் தவறாகும். மனிதன் 2,000-ஆண்டுகளுக்கு முன் இருந்தது போல் இன்றில்லை. தனது வசதிக்கும், வாய்ப்பிற்கும், தேவைக்கும் ஏற்ப உணவு, உடை, உறையுள் மற்ற எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டிருக்கின்றான்.

இதை மட்டும் மாற்றிக் கொள்ள மாட்டேனென்றால் இதை முட்டாள்தனம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது? நீங்கள் நன்றாகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மனிதன் எதில் மாறாமல் இருக்கின்றான்? நன்றாகச் சிந்தியுங்கள். உங்களுக்கு ஏதாவது தோன்றினால் எடுத்துச் சொல்லுங்கள். மாற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தால் எனது கருத்தை மாற்றிக் கொள்கிறேன்.

*(02.06.1968-அன்று நடைபெற்ற கொட்டையூர் திருமண விழாவில் தோழர் பெரியார் உரை. விடுதலை, 15.06.1968)*

...திருமணம் என்பதே ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணை அடிமைப்படுத்துவது என்பது தான் பொருள். நீங்கள் இன்னும் பத்தாயிரக்கணக்கில் நகை போட்டாலும் அந்தப் பெண் ஆணுக்கு அடிமையாக இருக்க வேண்டுமென்பது, “தெய்வம் தொழா அள் கொழுநன் தொழு தெழுவாள்” என்கிறான் வள்ளுவன். நாம் கடவுளே வேண்டாமென்று சொன்னால், அப்புறம் கணவன் என்ன வெங்காயம், எதற்காக ஒரு பெண் தன் கணவனை வணங்க வேண்டும்? அவன் என்ன அவ்வளவு உயர்ந்தவனா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

*(16.06.1968- அன்று பொத்தனூரில் நடைபெற்ற திருமண விழாவில் தோழர் பெரியார் உரை. 'விடுதலை', 08.07.1968)*

நம் அறிஞர்களும், புலவர்களும் நமக்கு மனித தர்மத்திற்குக் குறளைத் தான் எடுத்துக் காட்டுவார்கள். அந்த வள்ளுவன் கூட இருக்கிற மற்றவனை விடக் கொஞ்சம் பரவாயில்லை என்பது தானேயொழிய, அவன் தான் எல்லாவற்றிற்கும் என்பது பொருந்தாதது. நேற்று ஒரு பள்ளியில் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசும் போது, வள்ளுவன் படத்தைத் தூக்கி எறிந்து விட்டு பாரதிதாசன் படத்தை வைக்க வேண்டுமென்று சொன்னேன். பாரதிதாசனைப் போல சீர்திருத்தக் கருத்துக்களைச் சொல்ல நம் புலவர்கள் முன்வர வேண்டும். புலவர்களை வணக்கத்தோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்களுக்கு எந்தப் புலவனும் ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அத்தனை நீதி சொன்னவனும், ஒழுக்கம் பற்றிச் சொன்னவனும் பெண்களுக்குத்தான் சொல்லி இருக்கிறான். இன்றைக்கு நாம் நினைப்பதை அவன் எப்படி நினைக்க முடியும். இன்றைய உலகம் வேறு; நேற்றிருந்த உலகம் வேறு.

பழைய வைத்தியன் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும், இப்போது இங்கிலீஷ் வைத்தியத்தில் பெயிலாகப் போனவனால் செய்யக் கூடியதைக் கூட அவனால் செய்ய முடியாது. பழைய வைத்தியன் முறையே மணி - மந்திரம் - அவ்டதம் என்பது. இப்போது அதெல்லாம் பயன்படுவது கிடையாது. அதுபோல இன்றைய வாழ்வுக்குப் பழைய சங்கதியைப் படிக்கவே கூடாது. எந்த நெருக்கடியான கட்டமாக இருந்தாலும் நமக்கு எதிரேயுள்ள - நம் அறிவிற்கு, சிந்தனைக்கு, நடப்பிற்கு ஏற்றதைக் கொண்டு தான் செயல்பட வேண்டுமே தவிர, முன்னோர்கள் நடந்து கொண்டார்கள், பழைய புராணம், இதிகாசம் இப்படிச் சொல்கிறது என்று பின்னோக்கியுள்ளதைப் பார்க்கக் கூடாது.

...வள்ளுவன் அப்படிச் சொன்னான்; தொல்காப்பியன் இப்படிச் சொன்னான் என்றால், அதெல்லாம் அவன் வாழ்ந்த காலத்திற்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாமே தவிர, இப்போதைக்கு அவை பயன்படக் கூடியதல்ல. இந்த வாழ்க்கைக்கு எவனும் வேலி போட முடியாது. நாளைக்கு எப்படி அமையும் என்று சொல்ல முடியாது. நாளுக்கு நாள், நேரத்திற்கு நேரம் உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப மனிதன் மாறிக் கொள்ளத்தான் வேண்டும்.

நம் புலவர்களுக்குத் தைரியம் இல்லை. இலக்கணம் - இலக்கியத்தின் மேலேயே அவர்கள் கண் இருப்பதால் அவர்கள் எண்ணம் பழைமை யிலேயே போகிறது. பகுத்தறிவே அவர்களுக்கு ஏற்படுவது கிடையாது. பகுத்தறிவு ஏற்படும்படியான இலக்கியங்கள் - நூல்கள் எதுவும் தமிழில் கிடையாது. இருப்பதெல்லாம் மனிதனின் அறியாமை - முட்டாள்தனம் - மூடநம்பிக்கை இவற்றை வளர்ப்பவை தான். பார்ப்பான் வருகிற வரை நமக்குச் சரித்திரமே கிடையாது. இருந்ததை யெல்லாம் பார்ப்பான் கொளுத்தி விட்டான். ஒன்றிரண்டு மிஞ்சியதையும் மாற்றி விட்டான்.

புலவனென்றால் புதிய கருத்துகளைச் சொல்ல வேண்டும். பழைய குப்பைக் கூளங்களையே கிளறிக் கொண்டிருப்பது, அதற்கு விளக்கம் - உரை - பொருள் என்றெல்லாம் துருவிக் கொண்டிருப்பது பழைமையானது. இன்றைக்கு என்ன நடக்கிறது, நாளைக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றிச் சிந்தித்து அதை எடுத்துக் கூறுவதுதான் உண்மை. புலமைக்கும் புலவனுக்கும் இலட்சணமாகும்.

நாய் எலும்பைக் கடிக்குமாம். அந்த எலும்பில் சதையே இருக்காதாம். அந்த எலும்பு நாயின் எயிறில் பட்டு இரத்தம் வருமாம். அந்த இரத்தம் எலும்பிலிருந்து வருவதாகக் கருதி மேலும் கடித்து எயிறை எல்லாம் கிழித்துக் கொள்ளுமாம். அதுபோன்றுதான் நம் புலவர்கள் பழைய குப்பைகளைக் கிளறி அதன் மூலம் கிடைக்கும் பதவி எலும்பைக் கடிக்க ஆசைப்படுகின்றார்களே தவிர, உண்மை நிலையை எடுத்துச் சொல்லி சமுதாய மக்களை முன்னேற்றுவோம் - அறிவுடையவர்களாக்குவோம் என்று எவரும் பாடுபடுவது கிடையாது.

*(03.07.1968 அன்று நடைபெற்ற பரமசிவம் - பானுமதி திருமணத்தில் தோழர் பெரியார் உரை. விடுதலை - 06.08.1968)*

...நாம் காட்டுமிராண்டிக் காலத்தில் காட்டுமிராண்டியாக மனிதன் இருந்த போது எழுதப்பட்டதுதான் நம் இலக்கியங்களாகும். நம் புலவர்கள் பெருமைப்படும் வள்ளுவன் பெண்களைப் பற்றி என்ன சொல்கிறான் என்றால், பெண் கடவுளைத் தொழ வேண்டும் என்கின்றான். மற்றும் புராணங்கள் - கடவுள் கதைகள், இலக்கியங்கள் எல்லாமே பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டியவர்கள் என்பதை வலியுறுத்துவதாகவே இருக்கின்றன. இந்தத் துறையில் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டுமென்று சொன்னதும் அதற்காகத் தொண்டாற்றியதும் நம் சுயமரியாதை இயக்கமேயாகும்.

*(09.03.1969 அன்று பூதலூரில் நடைபெற்ற திருமணத்தில் தோழர் பெரியார் உரை. விடுதலை, 17.03.1969)*

...வள்ளுவன் மேலே எனக்குக் கோபம் வந்ததற்குக் காரணமே அவன் இல்வாழ்வு வாழ வேண்டுமென்று கூறியதில் தான்! எதற்காக அறிவுடைய மனிதனுக்கு இல்வாழ்வு? அதனால் மனிதன் அடைந்த பலன் என்ன? இல்வாழ்வு குடும்பம் என்று இப்படியே 1,000- வருஷத்திற்கு இருந்து பலன் என்ன? உன்னால் ஆனது என்ன? உன்னுடைய அறிவிற்கு என்ன பயன்? மனித ஜீவனுடைய நிலை இதுதானா?

இதற்கு மேலே போகிற அறிவு நமக்கு இல்லாதனாலே மோட்சம் தான், நரகம் தான் என்றிருப்பதாலே கோயிலைக் கட்டிக் கொண்டு போகிறான். மனிதன் என்றால் ஞானம், மோட்சம் வேண்டும் என்கின்றான். அவை என்னடா என்றால், அது உனக்கல்ல, ஞானிகளுக்கு என்கின்றான். உனக்குப் புரிந்து கொள்ள முடியாது என்கின்றான்.

குறைந்த அளவு ஒழுக்கத்தோடு, நாணயத்தோடு வாழ வேண்டுமென்றில்லையே! பெண்ணாகப் பிறந்தால் கணவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும். குட்டி போட வேண்டும். தன் அறிவைப் பயன்படுத்தக் கூடாது. ஆணாகப் பிறந்தால் மனைவியை - பிள்ளைக் குட்டியைக் காப்பாற்ற வேண்டும். இதுதான் அவனுக்கு வாழ்க்கைச் சிந்தனையாக இருக்கிறது.

மதம், கடவுள், இலக்கியம், மோட்சம், இவை நம் அறிவைக் கெடுத்து விட்டன. மனித சமுதாயம் அறிவோடு வாழ வேண்டியது; சுதந்திரத்தோடு வாழ வேண்டியது; புதுவாழ்வு மலர வேண்டியது என்கின்ற எண்ணம் எவனுக்குமே தோன்றுவது கிடையாது. மனித சக்திக்கு மேல் ஒரு சக்தி இருப்பது என்பது பித்தலாட்டம். இனி இந்தக் குடும்ப வாழ்வு - இல்லற வாழ்வு என்பதைச் சட்டப்படிக் குற்றமாக்க வேண்டும்.

*(23.04.1969 அன்று தஞ்சையில் நடைபெற்ற திருமணத்தில் தோழர் பெரியார் உரை. விடுதலை, 02.05.1969)*

...நம் புலவர்கள் என்பவர்கள் மூட நம்பிக்கையைப் பரப்புகின்றவர்களாக இருக்கின்றார்களே தவிர, புதுமையைப் பரப்பக் கூடியவர்களாக இல்லை. நம் புலவர்கள் எல்லாம் குறையில்லாமல் ஏற்றுக் கொள்ளக்கூடிய பெரும் அறிவாளி புலவர் வள்ளுவர். அவர் முதற்கொண்டு அத்தனைப் புலவர்களும் பெண்கள் அடிமையாக இருக்க வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகின்றவர்களாக இருக்கின்றார்களே ஒழிய, ஒருவன் கூட பெண்கள் உரிமையோடு, சுதந்திரத்தோடு, சமத்துவத்தோடு வாழ வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த வள்ளுவர்தான் பெண் தன் கணவனைத் தொழ வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். வள்ளுவன் பெண்களைத்தான் கற்போடிருக்க வேண்டு மென்று சொன்னாரே தவிர, ஆண்கள் இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை என்று ஒரு திருமணத்தில் இதுபோன்று குறிப்பிட்டேன்.

அந்தத் திருமணத்தில் திருக்குறள் முனுசாமி அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். நான் அவரிடம், "சொன்னது தவறாகக் கூட இருக்கலாம். வள்ளுவர் ஆண்கள் கற்போடு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டினால், நான் எனது தவறை மாற்றிக் கொள்கிறேன்" என்று சொன்னேன்.

அதற்கு அவர் திருக்குறளிலிருந்து "பிறன் இல்விழையாமை" என்ற அதிகாரத்தைக் காட்டி, "வள்ளுவர் ஆண்களுக்கும் அறிவுரை கூறி இருக்கிறார்" என்று சொன்னார். நான் உடனே, "பிறன் மனைவியிடம் போக வேண்டாமென்று சொன்னாரே ஒழிய, கல்யாணம் ஆகாத பெண்களிடமோ, கணவன் இல்லாத பெண்களிடமோ போகக்கூடாது என்று சொல்லவில்லையே. கல்யாணம் ஆன பெண் இன்னொருவனுடைய சொத்து என்பதால், பிறர் சொத்தைத் திருடக் கூடாது என்று சொல்லியிருக்கிறாரே தவிர, மற்றப்படி பெண்களுக்குச் சொன்னது போல எந்த ஆணிடமும் செல்லக்கூடாது என்று சொல்லவில்லையே" என்று சொன்னதும் அவரால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

*(18.5.1969 அன்று இரும்புலிக்குறிச்சியில் நடைபெற்ற திருமணத்தில் தோழர் பெரியார் உரை)*

...தமிழ்நாட்டில் ஒரு வீரன் யார் என்றால் கட்டபொம்மன் என்கின்றான். அவன் கதையைப் பார்த்தால் அவன் ஒரு பெரிய கொள்ளைக்காரனாக இருந்திருக்கின்றான். அந்தக் கொள்ளைக்காரனைத் தான் வீரன் என்று சொல்ல முடிகிறதே தவிர, உண்மையான வீரன் ஒருவனைச் சொல்ல முடியவில்லையே.

உயர்ந்த இலக்கியம் எது என்றால் திருக்குறள் என்கின்றான். திருவள்ளுவர்தான் உலகிலேயே சிறந்த அறிவாளி என்கின்றான். அந்த வள்ளுவன் என்ன சொல்கின்றான் என்றால், "பெண்கள் கணவனைத் தொழ வேண்டும்" என்கின்றான். எதற்காக ஒரு பெண் கணவனைத் தொழ வேண்டும்? மனு தர்மத்தில், எப்படி சூத்திரன் பார்ப்பானைத் தொழ வேண்டும் என்று சூத்திரனை இழிவுபடுத்துகின்றானோ அதுபோலத்தானே இதுவும் பெண்ணைக் கீழ்மைப்படுத்துவதாக இருக்கிறது? பெண்ணை விட ஆண் எதில் உயர்ந்தவன்? இன்னும் எத்தனையோ முட்டாள்தன - மூட நம்பிக்கைகள் நிறைந்திருக்கின்றன.

இன்றைய அறிவிற்கு அது ஏற்றதில்லை. இருக்கின்ற பழைய குப்பைகளில் அது ஓரளவுக்குத் தேவலாம் என்றுதான் சொல்லலாமே தவிர, அதுதான் உயர்ந்தது என்று சொல்ல அதில் எதுவும் கிடையாது.

*(07.05.1969 அன்று காவாலக்குடியில் நடைபெற்ற திருமணத்தில் தோழர் பெரியார்உரை. விடுதலை,13.05.1969)*


## திராவிடர் பண்பாட்டு
# நாட்காட்டி 2019


இந்து-வேத மதத்திற்கு எதிராக, தோழர் பெரியார் உருவாக்கி, நடைமுறைப்படுத்திய திராவிடர் பண்பாட்டுப் புரட்சியை இளைய தலைமுறைக்குப் பரப்பும் நோக்கில் நாட்காட்டிகளை வெளியிட்டு வந்தது காட்டாறு. அந்த நாட்காட்டிகள் ஒவ்வொரு வீட்டையும் ஒரு பிரச்சார மேடையாக மாற்றின. குடும்பத்திற்குள்ளேயே கலகங்களை மூட்டின. அந்தக் கலகத்தை வரும் 2019 லும் தொடர இருக்கிறோம். இந்தியாவில் "பெண்களுக்கு மிகவும் ஆபத்தான இடம் குடும்பம் தான். வீடுகள் தான்" என ஐ.நா வின் புள்ளிவிபரங்கள் சான்களுடன் விளக்கிவிட்டன. ஆபத்தான குடும்பம் எனும் நிறுவனத்தில் ஒரு மிகச்சிறிய கல்லை எறிகிறோம். எங்களுக்குத் தோள் கொடுங்கள். நாட்காட்டி நன்கொடை: ரூ.75.

தொடர்புக்கு: சி.விஜயராகவன், 99762 56821,
இராவணன் 97868 89325,
இணையத்தில் வாங்க: www.periyarbooks.in


## நன்கொடை

| | |
|---|---|
| தோழர் செல்லையா முத்துச்சாமி | 5000.00 |
| டாக்டர் இராமச்சந்திரன் | 3000.00 |

காட்டாறு இதழ் வளரத் துணைபுரியும் தோழர்களுக்கு நன்றி.




வெளியீடு

பக்கம்-344, விலை ரூ 280, தொடர்புக்கு: 94442 72500





Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com